ஸ்ரீராமாநுஜன் 99

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசந ஸபையின் மூலமாக
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.
ஆசிரியர் : ஸ்ரீகாஞ்சி. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 9 | துன்முகிஷு பங்குனிமீ 1957ஷு மார்ச்சுமீ | மலர் 3

இராமாநுச நூற்றந்தாதி பாசுரம்—99

தற்கச்சமணரும் சாக்கியப்பேய்களும் * தாழ்சடையோன்
சொற்கற்றசோம்பரும் சூனியவாதரும் * நான்மறையும்
நிற்கக்குறும்புசெய்நீசரும் மாண்டனர், நீணிலத்தே
பொற்கற்பகம் * எம்மிராமானுசமுனிபோந்தபின்னே.

அன்பர்களுக்கு அறிவிப்பு.

இவ்விதழில் சதபூஷணீ வஜ்ரகுடாரஸாரமென்னும் நூல் வெளிவருகின்றது. சிலமாதங்களாய் நமது நாட்டுப்பத்திரிகைகளில் "சததூஷணியும்—சதபூஷணியும்" என்று மகுடம்புனைந்த வியாஸங்கள் வெளிவந்துகொண்டிருப்பதைப் பலரும் பார்த்து வரக்கூடும். ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனருளிச்செய்த சததூஷணி யென்னும் மஹாக்ரந்தத்திற்கு மதாந்தரஸ்தர்களால் கண்டனம் வெளியிடப்பட்டுவிட்டதென்று பொதுமக்கள் ஸாதாரணமாக இவ்வளவே தெரிந்துகொண்டிருப்பார்கள். மதாந்தரஸ்தர்களோ வென்னில் 600 வருஷகாலமாகச் செய்ய முடியாமலிருந்த வொரு பெரிய காரியம் இப்போது செய்து முடிக்கப்பட்டு விட்டதென்று குதூஹலங்கொண்டிருப்பார்கள். ஆனால் புதிதாகத் தோன்றியுள்ள சதபூஷணியில் என்ன விஷய மிருக்கின்றதென்று உள்புகுந்து பார்த்தவர்கள் யாருமில்லை.

தேசிகஸார்வபௌமருடைய சததூஷணியென்கிற மஹாக்ரந்தத்தில் இன்னது சொல்லியிருக்கிறதென்பதைக்கூட க்ரஹிக்கமாட்டாதவர்கள் சததூஷணியைக்

கண்டித்து விட்டதாகப் பறைசாற்றுவதானது உண்மையில் பரிஹாஸ்யமேயாம். ஆனாலும், அந்த சதபூஷணியின் தன்மையை உலகுக்கு எடுத்துக்காட்டாமல் அதில் குறை கூறுவது தகுதியன்றாதலால் சதபூஷணீ வஜ்ரகுடாரமென்கிற ஸம்ஸ்க்ருத க்ரந்தத்தை நாம் விரிவாக எழுதி வெளியிட்டுவருகிறோம். ஸம்ஸ்க்ருதமறியாதவர்களும் அதன் ஸாராம்சத்தை எளிதில் தெரிந்துகொள்வதற்காகவே இந்த ஸாரநூல் எழுதப்பட்டது. இதை நிஷ்பக்ஷபாதமாக வாசித்துப்பார்த்தால் சததூஷணியைக் கண்டிக்க ஆசைகொண்டவர் வெறும் வீணான ஆசையையே கொண்டாரென்பது ஒவ்வொருவருடைய மனத்திலும் நன்கு பதியுமென்பது எனது நம்பிக்கை.

சததூஷணி கண்டிக்கப்பட்டுவிட்டதென்கிற ப்ரஸித்திமட்டுமே தமக்கு உத்தேச்யமென்றும், அந்த ப்ரஸித்தி ஸித்தித்துவிட்டதே போதுமென்றும் அவர்களுடைய வார்த்தையாம். அருந்தவம்புரிந்து பெற்ற குழந்தை அடுத்த க்ஷணத்திலேயே பரகதியடைந்துவிட, 'குழந்தை இறந்துபோனாலும் குழந்தை பிறந்ததென்கிற ப்ரஸித்தியே எமக்குப்போதும்' என்று சொல்லிக் களித்துக் கூத்தாடுவார் திரளிலே இவர்களையு மெண்ணலாம்.

ஒருவிஷயம் தெரிவிக்கத் தக்கதென்று தோன்றியதனால் இங்கே தெரிவிக்கலாகிறது. இந்த சததூஷணீபூஷண ஸாரத்தில் பக்கம் 28-ல் பாரா 48 முதல் ப்ரஹ்மஸ்ரீ. பண்டித. கடலங்குடி நடேச சாஸ்த்ரிகளவர்களைப் பற்றிச் சில விஷயங்கள் எழுதியிருக்கிறோம். அப்பெரியார்க்கு நாம் சதபூஷணீவஜ்ர குடாரத்தின் பகுதியைக் கொண்ட வைதிக மநோஹரா பத்ரிகையை ஜனவரிமாதத்தில் அனுப்பியிருந்தோம். பிறகு 5—3—57-ல் அவர்களிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. அதிலுள்ள விஷயமாவது, "20—1—57 முதல் ரக்தக் கொதிப்பு வியாதியால் ப்ரஜ்ஞையற்ற நிலையில் இருந்து சுமார் இரண்டு மூன்று தினங்களாக ஸ்ரீ கோபாலன் கிருபையை முன்னிட்டு சற்று அனுகூலமான நிலை ஏற்பட்டிருக்கிறது. தாங்கள் என்னிடம் ப்ரீதியுடன் அனுப்பின வைதிகமநோஹரா என்ற பத்ரிகை 21—1—57-ல் வந்ததாக என் குழந்தை இன்று 4—3—57-ல் என்னிடம் கொடுத்தாள். அதில் சதபூஷணீவஜ்ர குடாரம் என்று ஆரம்பிக்கப்பட்ட விஷயத்தை கவனித்தேன். தற்சமயமுள்ள நேத்ர அஸௌகரியத்தால் பூராவும் படிக்க முடியாவிடினும் சிஷ்யாள் மூலம் படிக்கக் கேட்டு, முடிவில் என் அபிப்ராயத்தை கூடியவரை பத்ய ரூபமாகவே எழுதி யனுப்புகிறேன். முடியும்வரை வைதிகமநோஹராவை தயவு செய்து எனக்கு அனுப்பி வருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்." என்பதாம்.

பிறகு அவ்விதமாகவே ஒரு பத்ய மாலிகையை அபிநந்தன ரூபமாக எழுதியனுப்பினார்கள் அந்த நடேசசாஸ்திரி மஹாநுபாவர்கள். அதில் அவர்கள் அக்ருத்ரிம

மாக என்னை அதிமாத்ரம் புகழ்ந்து எழுதியிருக்கிறபடியால் அதை நான் வெளியிட்டுக் கொள்ள விருப்பங் கொண்டிலேன். மேலும், சதபூஷணியையோ சதபூஷணீ வஜ்ர கூடாரத்தையோ சிறிதும் ஸ்பர்சியாமலே பொதுவாக என்னுடைய யோக்யதைகளைப்பற்றி மட்டும் தம்முடைய ப்ரீதி ப்ரகாசம் தோன்றப் புகழ்ந்து எழுதி யிருப்பதால் அந்த பத்ய மாலிகையை இங்கு வெளி யிட்டுக்கொள்வதில் ஔசித்யமில்லையென்று விட்டிட்டேன். அவர்கள் முதலில் எழுதி யிருந்த கடிதத்தில், சதபூஷணீ வஜ்ர குடாரத்தைப்பற்றியே ஸ்வாபிப்ராயத்தைப் பத்ய ரூபமாக எழுதி யனுப்புவதாய் ஸ்பஷ்டமாக எழுதியிருக்கிறார்கள். அவ்விதமாக நிறைவேற்றினால் அது லௌகிக வாயசுமாகுமென்று தெரிந்துகொண்டு ஒருவாறு தம்முடைய பிரதிஜ்ஞையை நிறைவேற்றினது சிறந்த சாதுர்ய கார்யமென்று உகக்கத்தக்கது.

நாம் யாரிடத்திலும் ப்ரசஸ்தி பத்ரிகையை ப்ரதீக்ஷிப்பதுமில்லை. நம்முடைய ஸத்தையுள்ளவரையில் உலகுக்கு உபகாரமாக ([illegible] ரூபமாக)ச் செய்ய வேண்டிய கார்ய மென்று நமக்குத் தோன்றுகிற காரியங்களை கேவலம் ஹ்ருதய ப்ரேரணையினால் நாம் செய்து வருகிறோம். இதனால் எம்பெருமானுடைய திருவுள்ளம் மிகவும் ப்ரஸந்நமாகிற தென்பதை மட்டும் நாம் அறிந்து மகிழ்கிறோம். அஃதொன்றே நமக்கு உத்தேச்யமானது. இந்த வஜ்ரகுடாரஸாரத்தை வடநாட்டிலுள்ளாரும் அறிவதற்காக ஹிந்திபாஷையிலு மெழுதி பாம்பே மஹாநகரத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் அநந்த ஸந்தேச (மாஸிக) பத்ரிகையில் வெளியிடக் கொடுத்திருக்கிறோம். ஆங்கிலத்திலும் விரைவில் வெளியாகும். ....(*)

16-2-57-க்குப்பிறகு சந்தாசெலுத்தியவர்கள்.

14. ஸ்ரீமான் C. V. ராஜன் அவர்கள், சென்னை.
15. ,, ராவ்ஸாஹிப் S. ராகவையங்கார், மாம்பலம்.
16. ,, K. ரங்கஸாமி அய்யங்கார், வக்கீல், பூனமல்லி.
17. ,, M. R. ராகவஸாமி ஐயங்கார், வக்கீல், பரமகுடி.
1 . ,, B. A. நரஸிம்ஹாசாரியர், வண்டலூர்.
19. ,, D. ஸ்ரீனிவாஸய்யங்கார்ஸ்வாமி அதிகாரி ஸகிந்தராபாத்.
20. ,, D. திருவேங்கடாசாரியார்ஸ்வாமி, கடலூர்.
21. ,, மநீஷிமான்ய R. நரஸிம்ஹய்யங்கார்ஸ்வாமி, மதுரை.
22. ,, K. ராமசந்திரய்யங்கார், தென்திருப்பேரை.

23. ஸ்ரீமான் P. S. நாராயணய்யங்கார், அட்வகேட், கோவை.
24. ,, K. தொரைசாமி பிள்ளை, கரந்தை,
25. ,, A. ராமஸ்வாமி நாயுடு, டெப்டிதாசில்தார், மதுரை.
26. ,, L. ராமபத்ர ரெட்டியார், பள்ளிபுதுப்பட்டு.
27. ,, V. N. ஸ்ரீனிவாஸசக்ரவர்த்திஸ்வாமி, வக்கீல், சேலம்.
28. ,, S. கிருஷ்ணஸாமி ஐயங்கார், அட்வகேட், கரூர்.
29. ,, T. S. ராஜகோபாலாசாரியர், முடிகொண்டான்.
30. ,, P. K. கிருஷ்ணராமாநுஜதாஸர், கீழ்ப்பாவூர்.
31. ,, K.P.M. ஸுந்தரராஜுலு செட்டியார், பெத்துசெட்டியாபட்டி.
32. ,, B. V. பார்த்தஸாரதி ஐயங்கார், பாம்பே.
33. ,, G. ஸ்ரீநிவாஸன், Grindlays & Co., கல்கட்டா.
34. ,, M. R. சேஷாத்ரி ஐயங்கார், மண்ணடி, சென்னை.
35. ,, A. G. கிருஷ்ணஸாமி ஐயங்கார், கல்கட்டா.
36. ,, G. அய்யாலு நாயுடு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.
37. ,, N. சுப்பராய பிள்ளை, தமிழ்வித்வான், T. விருதாங்கன்.
38. ,, P. B. சிங்கராசாரியர், அட்வகேட் சென்னை.
39. ,, K. S. லக்ஷ்மீநாராயண செட்டியார், ஈரோடு.
40. ,, ஆயி. வெங்கடாசாரியர், டெங்கணிகோட்டை.
41. ஸ்ரீமத்பரமஹம்ஸ. எம்பெருமானார்ஜீயர்ஸ்வாமி, ஆழ்வார்திருநகரி.
42. ஸ்ரீமான் M. கோபாலையங்கார், சிதம்பரம்.
43. ,, P. L. A. ஸ்ரீநிவாஸராமாநுஜதாஸர், மன்னார்குடி.
44. ,, C. V. திருவேங்கடராமாநுஜதாஸர், கோவை.
45. ,, R. ஜகன்னாதய்யங்கார், பாண்டிச்சேரி.
46. ,, V. N. ஸ்ரீநிவாஸய்யங்கார், வேளுக்குடி.
47. ,, P. N. கிருஷ்ணஸ்வாமி, New Delhi.
48. ,, A. கண்ணுஸாமிப்பிள்ளை & Co., விருத்தாசலம்.

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ காஞ்சீ ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி ப்ரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர்

எழுதிய நூல்களுள்

நானூற்றுப்பத்தொன்பதாவதான

சததூஷணீபூஷணஸாரம்

அல்லது

சதபூஷணீவஜ்ரகுடாரஸாரம்

இது ஸம்ஸ்க்ருத பாஷையிலும் வெளியிடப்பட்டிருக்கிறது.
வடமொழிப் பரிசயமில்லாதவர்களும், சதபூஷணி யென்கிற
சததூஷணீபரீக்ஷணக்ரந்தத்தின் தன்மையையும்
அந்த நூலை யெழுதிய மஹான்களின்
மேதாவிலாஸத்தையும் எளிதில் தெரிந்துகொள்வதற்காகவே
இந்த ஸாரக்ரந்தம் பல பாஷைகளில் எழுதப்படுகிறது.
தற்காலம் வடமொழி தென்மொழிகளில் வெளியாகியுள்ளது.

இதன் விலை] **1957** [1—0—0

(மதாந்தரஸ்தர்களுக்கு மட்டும் விலையின்றி வழங்கப்படும்)

தபால் செலவுக்கு மட்டும் 0—2—0 ஸ்டாம்பு அனுப்பவேணும்.

கிடைக்குமிடம்:—

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கரிகிரியுறைபரனருளமரும் திருமறைமுடிகுருவரனடிகள்
சிரமிசைமருவியெனகவிருளைக் கருதருநொடியினிலறவருளும்.

சதபூஷணியைப்பற்றி.

உலகம் நிறைந்த புகழ்படைத்த 'சததூஷணீ க்ரந்தத்திற்குக் கண்டனமாகத் தோன்றியது சதபூஷணி யென்பது. அதற்கும் கண்டனமாகத் தோன்றியது நம்முடைய சததூஷணீ பூஷணம். இவ்விடத்தில் ஓர் உண்மையைத் தெரிவிக்கவேண்டியது மிக அவசியமாகிறது. சததூஷணி யென்பது மஹாக்ரந்தம். அதன் உண்மைப்பொருளை உள்ளபடி உணருவதற்கு சண்டமாருதகாரரான தொட்டயாசார்ய ஸ்வாமி போல்வார் அதிகாரிகளேயொழிய இக்காலத்து வித்வான்கள் யாரும் அதிகாரிகளல்லர். அடியேன் ஸுதராம் அநதிகாரியென்பதை அந்தரங்கஸாக்ஷிகமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சதபூஷணியை யெழுதி சததூஷணிக்குக் கண்டனம் செய்துவிட்டதாக ப்ரசாரம் செய்துவருபவர்களும் சததூஷணிக்கு வெகுதூரத்தில் நிற்கவேண்டியவர்களென்பதை உலகம் நன்கறியும். அவர்களின் அந்தரங்கமுமறியும். அவர்களின் சதபூஷணியினால் சததூஷணிக்கு ஒருவிதமான குறையும் எப்படி நேரமாட்டாதோ அப்படியே அடியேனுடைய சததூஷணீபூஷணத்தினாலும் சததூஷணிக்கு யாதொரு நிறைவும் விளையப்போகிறதில்லை. ஆகவே சததூஷணியை ரக்ஷிப்பதற்காக அடியேனுடைய ப்ரவருத்தி யென்பது சிறிதுமில்லை.

ஆனால் நாம் சதபூஷணியைப் பொருள்படுத்தி அதற்கு மறுப்புநூல் எழுதுவது எந்த எண்ணத்தினாலென்பதை உள்ளபடி உலகுக்கு உணர்த்துகிறோம். ஒரு பெரிய க்ரந்தத்தைக் கண்டிக்கவோ பரீக்ஷிக்கவோ முன்வருபவர்கள் ப்ரமம் ப்ரமாதம் விப்ரலிப்ஸை முதலிய குற்றங்குறைகளுக்குக் கொள்கலமல்லாதவர்களாக இருக்கவேண்டும். 'காடிக்குப் பிடித்தவிடமெல்லாம் மயிர்' என்பதுபோல எந்த வாக்கியத்தைத் தொட்டாலும் அஸம்பத்தமென்றும் அநந்விதமென்றும் அஸமஞ்ஜஸமென்றுமே சொல்லக்கூடிய பங்க்திகளையே எழுதி வழக்கப்பட்டவர்கள் சததூஷணி யென்கிற உத்துங்க மஹாக்ரந்தத்தைப் பரீக்ஷிப்பதாகச் சொல்லிக்கொண்டு புகுவதானது பண்டிதர்களுக்கு ஜுகுப்ஸாவஹமான காரியமென்று தோன்றிற்று. பூஷணீகாரர் பூமிகையில் (பக்கம் 32ல்) "அஜ்ஞாநத: ஸம்பூதாநாம் தோஷாணாம் உத்போதநே ஸதயம் அநுக்ருஹ்ணந்து மித்ரவரா:" என்று ப்ரார்த்தித்திருப்பதனால் அவர்களின் மித்ரவரர்களில் அக்ரகண்யனான (அல்லது ஒருவனான) நான் அவர்களின் ப்ரார்த்தனையை நிறைவேற்றப்புகுந்தது உசிதமேயென்று நினைக்கிறேன். இவர்கள் க்ரந்தமெழுதுவதற்கே அநதிகாரிகள், தத்ராபி சததூஷணியைத் தொடுவதற்கு ஸுதராம் அநதிகாரிகள் என்பதை உலகம் நம்புவதற்கு வேண்டிய விஷயங்களை இந்த ஸாரநூலில் காணலாம்.

(ப்ர-அ.)

ஸ்ரீ:

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியரியற்றிய நூல்களுள்

சததூஷணீபூஷண ஸாரமென்கிற

சதபூஷணீவஜ்ரகுடாரஸாரம்.

முதல் பரிச்சேதம்.

1. விசிஷ்டாத்வைத ஸித்தாந்த நிர்த்தாரண துரந்தர ஆசார்ய சிகாமணியான ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் அநுக்ரஹித்த தார்சநிக க்ரந்தங்களுள் சததூஷணி யென்பது மிகச்சிறந்து பண்டித கோஷ்டிகளில் பெரும்புகழ்பெற்று விளங்குகின்றது. மதாந்தர கண்டனபூர்வகமாக விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தை நிலை நிறுத்தும் மஹாக்ரந்தங்களுள் சததூஷணியே முதன்மை பெற்றது. இந்த மஹா க்ரந்தத்தில் மதாந்தரஸ்தர்களுக்கு அஸூயையோ அருவருப்போ அந்நாள் தொடங்கியே இருந்து வரக்கூடும். ஆனாலும் இந்த மஹா க்ரந்தத்திற்கு மறுப்பெழுத வேணுமென்கிற எண்ணம் அறுநூறு வருஷமாக ஒருவர்க்கும் உண்டானதில்லை. அந்த சததூஷணீ க்ரந்தம் ராஜகீயவித்யாலயங்களில் பரீக்ஷ்ய க்ரந்தமாக வைக்கப்பட்டு, காலக்ரமேண அதிகமான அபிவிருத்தியையும் ப்ரசுரப்ரகாசத்தையும் அடைந்து வருவதால் இது இதரமதஸ்தர்களுக்கு அஸஹ்யமாயிற்று. அதனால் இதற்கு எவ்விதமாகவாவது அவத்யத்தை விளைத்தே தீரவேணுமென்கிற உத்கடமான உத்கண்டை ஒரு ஸமூஹத்தினர்க்கு உண்டாயிற்று. "ஒரு பெரிய புத்தகத்தை யச்சிட்டு வெளியிட்டு சததூஷணி கண்டிக்கப்பட்டு விட்டதென்று ஒரு ப்ரஸித்தியை உண்டாக்கி விடுவோம்; இதனால் ஒருவாறு க்ருத க்ருத்யர்களாய் விடுவோம்" என்று துணிவுகொண்ட சில மஹான்கள் சதபூஷணி யென்கிறவொரு ஸ்தூலமான புத்தகத்தை யச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். இப்புத்தகம் பண்டித கோஷ்டிகளில் பெரும்பாலும் ப்ரஸித்தமாகி யிருக்கின்றது.

2. இந் நூலை இயற்றிய மஹான் நூலினுள்ளே கோரியிருக்கிறபடியே ஆராய்ச்சி செய்யப்படவேண்டியது அவசியமாயிற்று. சததூஷணீ பூஷணம் (அல்லது) சதபூஷணீ வஜ்ர குடாரம் என்கிற நம்முடைய மறுப்பு நூல் ஸம்ஸ்க்ருத பாஷையில் அமைந்து ஸம்ஸ்க்ருத வித்வான்களுக்குப் பயன்பட்டு வருகின்றது; சிறுகச் சிறுக வெளிவந்துகொண்டிருக்கின்ற அந்த மிகப்பெரிய க்ரந்தமானது பூர்த்தியாக முத்ரணமாகி. வித்வான்களால் பரிபூர்த்தியாகப் பரிசீலனை செய்யப் பெறுவதற்குக் கால விளம்பமாகுமாதலாலும், அந்த விஷயங்களை ஸம்ஸ்க்ருத வித்வான்கள் மட்டுமே

தெரிந்துகொள்ள முடியுமாதலாலும், இத்தகைய கண்டன மண்டன ஸரணிகளில் குதூஹலமுடைய யாவரும் காலதாமதமின்றி இப்போதே இவ்விஷயங்களை உள்ள வாறு தெரிந்துகொள்வதற்குப் பாங்காக இந்த ஸாரநூல் வெளியிடப்படுகிறது.

3. இந்த ஸாரநூலை வெளியிடுவதற்கு முக்கியமான உத்தேச்யம் ஒன்றே. அதாவது, சதபூஷணீகாரர் (1) பல விஷயங்களில் அந்யதாஜ்ஞானம் மலிந்தவராயிருக் கிறார்; (2) முன்பின் முரணான வார்த்தைகளையே பெரும்பாலும் எழுதிவருகிறார்; (3) இவருடைய ஸம்ஸ்க்ருத வாக்ஸரணியும் சாஸ்த்ரஜ்ஞர்கள் உகந்து கொள்ளும்படி யான நிலைமையில் அமைந்திருக்கவில்லை — என்கிற இவ்விஷயங்களை நிர்மத்ஸரர் களான வித்வான்கள் நிராக்ஷேபமாக அங்கீகரிக்கும்படி செய்ய வேணுமென்பதே.

4. ஸாக்ஷாத் ஹயக்ரீவராய், ஸர்வதந்த்ரஸ்வதந்திரராய், வேதாந்தங்களைப் பாதுகாத்தருளினவராய், நாமனைவரும் தொழும் தெய்வமாய், மதுரமான திவ்ய ஸூக் திகளை வெளியிட்டருளினவராய், எல்லையற்றபாண்டித்யப் பெருமையை யுடையவ ராய், அடியேன் மனத்தை ஈடுபடுத்திக் கொண்டவரான் வேதாந்த தேசிகன் வாழ்க.

5. அவத்ய லேசமுமற்றதாய், குணபுஷ்கலமுமாய், ஸகல வித்வான்களும் கொண்டாட நின்ற ஸ்ரீஸூக்திகளமைந்ததாக ஸ்ரீமத் வேதாந்த தேசிக னருளிச் செய்த சததூஷணி யென்னும் திவ்ய க்ரந்தத்தை நமது நண்பர் தூஷிக்க வெழுந்தது அவருடைய இயல்புக்கு இணங்கியதென்றே கொள்வோம்.

6. தூஷிக்க எழுந்தவர்கள் 'தேசிகன் சததூஷணியென்றொரு க்ரந்த மருளிச் செய்திருக்கிறார்' என்னுமிவ்வளவேதான் தெரிந்து கொண்டவர்கள். அந்த திவ்ய க்ரந்தத்தைக் கட்கண்ணாலும் பார்த்தவர்களல்லர்; உட்கண்ணாலும் பார்த்தவர்களல்லர். அப்படி யிருந்தும் அந்த க்ரந்தத்தைப் பரீக்ஷிப்பதாக வெழுந்தது ஆச்சரியமே.

7. புராதனமான சததூஷணியும் இப்போதுண்டான சதபூஷணியுமாகிய இரண்டு க்ரந்தங்களையும் சேர்த்துப் பார்த்தால்தான் அதற்கு இது கண்டனமாகுமா? ஆகாதா? என்பது விளங்கும். அப்படி இரண்டு நூல்களையும் சேர்த்துப் பார்த்து விமர்சிக்கப் போகிறவர் யார்? ஒருவருமிலர் என்று நினைத்துக்கொண்ட நமது நண்பர் இந்நிலத்தில் விப்ரலம்ப விசக்ஷணராய் விளங்குகின்றாரந்தோ!

8. இரண்டு கைகளையும் தூக்கிச் சபதஞ் செய்து சொல்லுகிறேனிதை; சததூஷ்ணீ கண்டனம் செய்வதாக வெழுந்த பண்டிதர் சததூஷணீ க்ரந்தத்தில் ஒரு வாதத்தைக்கூட முற்ற முடிய வாசித்துப் பொருளுணர்ந்தவரல்லர்.

9. ஆகாச தாண்டவமாக எதையோ எழுதி க்ரந்த பூரணம் செய்து சததூ ஷணீ கண்டனகார ரென்று ஸ்வகீயர்களின் கோஷ்டியில் ப்ரஸித்திபெற்று விட்டார்.

10. இன்னது ஸாரம், இன்னது அஸாரம் என்று பகுத்துணரவல்ல பாக்ய சாலிகள் பலர் இந்நிலத்தில் விளங்குகிறார்களென்று நம்பி ‘சதபூஷணீ வஜ்ரகுடாரம்’ என்னும் க்ரந்தத்தை நாம் வடமொழியிலியற்றி வெளியிட்டு வருகிறோம்.

11. வேதாந்த தேசிகனுடைய திவ்ய ஸூக்திச் சுவைகளை யநுபவிக்கக் குதூஹல முடைய வித்வான்களின் ஹ்ருதய கமலத்தை விகஸிக்கச் செய்ய வல்ல ஸூர்யோதயம் அந்த க்ரந்தாவதாரமென்று கொள்க. அந்த வஜ்ரகுடாரத்திற்கு ஸத்தர்சந பாஸ்கரமென்னும் பெயருமுண்டென்க.

12. வேதாந்த தேசிகனுடைய திருவாக்குகளில் ஒரு திருவாக்கு: “ச்ருதி ச்ரேணீ சூடாபத பஹுமதே” இத்யாதி. இதன் கருத்தாவது—வேதாந்த விழுப் பொருளின் மேலிருந்த விளக்கான எம்பெருமானார் தரிசனத்தில் தூஷணங்களை வாரி யிறைக்க நினைப்பவர்கள் நிர்மலமான ஆகாசத்தில் சேற்றை வாரி யிறைத்துத் தங்களுடம்பிலேயே அதை வழியவிட்டுக் கொள்வாரோடொப்பர் என்கை. இந்த திவ்ய ஸூக்தியை ஸார்த்தகமாக்குவதற்காகச் சில பேரறிவாளர்கள் வருவதறியாமல் நிரர்த்தகமும், ப்ரமமயமுமாக எழுதி வைத்திருப்பதை நிரஸித்து நல்லுணர்வினரை மகிழ்விக்க அந்த வஜ்ரகுடார க்ரந்தம் பர்யாப்த சக்திகம்.

13. இதுவரையில் அடியேன் பல நூற்றுக் கணக்கான நூல்களை யெழுதிப் பண்டிதவுலகுக்குச் செய்ய வேண்டிய உதவிகளைக் குறையறச் செய்து க்ருதக்ருத்யன் என்று விருதுசுமக்கின்றேன். ஆனால் க்ருதக்ருத்யதை பூர்த்தி யடையவில்லை யென்று பகவானுடைய திருவுள்ளம் போலும். அதைப் பரிபூர்த்தி பெறுவிப்பதற்காகவே பகவான் சதபூஷணியைத் தோற்றுவித்து சததூஷணீ பூஷண க்ரந்தத்தையும் அவதரிப் பிக்கின்றானென்று கொண்டு மகிழ்கின்றேன்.

14. நிகமாந்த தேசிகனுடைய பரம கம்பீரமான திவ்ய ஸூக்திததிகள் தம் உட்கருத்தை அடியேனுடைய உள்ளத்தில் விரிவாகத் தோற்றுவிக்க வேணும்.

15. சத தூஷணீ க்ரந்தமானது சந்திர ஸூர்யர்களுள்ள வரையில் வெற்றி குன்றாதிருக்கு மென்பதைப் பிராமாணிக பண்டிதர்கள் திடமாக நம்புவார்களாக.

சதபூஷணியை யாராய்ந்த நமது வார்த்தைகள் நூறு—காண்மின்.

இரண்டாவது பரிச்சேதம்.

1. சதபூஷணீ க்ரந்தத்தின் முகப்பிலுள்ள பூமிகையை முன்னம் விமர்சிக்க வேண்டியது அவச்யமாகையாலே அந்த விமர்ச மிப்போது செய்யப்படுகிறது. அந்த பூமிகையில் சில மெய்யுரைகளும் பல பொய்யுரைகளும் ப்ரமத்தினாலாகிய பல விபரீத

வுரைகளும் புகுந்திருக்கின்றன வென்பதை இங்கு உபபாதிப்போம். நண்பர் பூமிகையின் தொடக்கத்தி லெழுதியிருப்பதாவது—

"ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான நிகமாந்த தேசிகர் மிகவும் கம்பீரமான பொருள்கள் நிறைந்தனவும் செவிக்கினிய செஞ்சொற்கள் நிரம்பினவுமான நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை யியற்றி எல்லா ஆஸ்திக வுலகங்களையும் பண்டித ஸந்ததியையும் ஸம்ஸ்க்ருத ப்ரபஞ்சத்தையும் ஈடுபடுத்தியுள்ளாரென்பது ஸத்யமான விஷயம். அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை; பகவத் போதாயந வ்ருத்தியை அடிப்படையாகக் கொண்ட விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமானது ஸ்ரீராமாநுஜரால் சரீர சரீரி பாவ மூலகமான ஸாமாநாதிகரண்யம் முதலானவற்றை விளக்கும் முகத்தால் வளர்க்கப்பட்டது; அதற்கெதிரான கொள்கைகளெல்லாம் ஸ்ரீமத் வேதாந்த தேசிகராலே நியாய ஸித்தாஞ்ஜநம் நியாயபரிசுத்தி தத்வடீகை தாத்பர்ய சந்திரிகை சததூஷணி முதலான நாநா க்ரந்த ரசனைகளாலே நிரஸிக்கப்பட்டதாகி ஸித்தாந்த ஸ்தாபனம் வெகு நன்றாகச் செய்யப்பட்டது. ஆகவே தேசிகர் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கெல்லாம் மூலஸ்தம்பமானவர். பல சொல்வி என்? விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்குத் தொண்டு செய்வதையே தம்முடைய ஜீவித பலனாகக் கருதிய தேசிகர்க்கு வடகலையார் தென்கலையாராகிய ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் கடமைப்பட்டவர்கள். அவருடைய பரச்சத ப்ரபந்தங்களை ஸமாலோசநம் செய்வதே விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ரக்ஷணத்திற்கு மூலகாரணமாகும்." —என்று.

உண்மையில் இந்த வார்த்தைகளெல்லாம் யதார்த்த கீர்த்தனமென்று உகப்போம்.

2. இதற்கு மேல் எழுதியுள்ளதாவது— "ஸ்ரீபாஷ்யத்திலும் கீதா பாஷ்யத்திலும் ஆங்காங்கு தோன்றியுள்ள பலபல விரோதங்களைப் பரிஹரிக்கும் முகத்தால் தேசிகர் ஸ்ரீராமாநுஜரையும் காப்பாற்றி யிருக்கிறாரென்பது அவருடைய தாத்பர்ய சந்த்ரிகாதி க்ரந்தங்களைக் கண்டவர்களுக்கு விசதமே" என்பதாக. இது பொய்ம்மொழி. ஸ்ரீபாஷ்யத்திலும் கீதாபாஷ்யத்திலும் பலபல முரண்பாடுகளிருப்பதாகச் சொன்னதைச் சிறிதும் உபபாதித்துக் காட்டாமையினாலே பொய்யுரையேயாம். ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்ய ஸூக்திகளுக்குப் பரஸ்பர விரோதமா? அல்லது இதர க்ரந்தங்களோடு விரோதமா? என்று விகல்பித்துக் கேட்கு மளவில், ஒரு கல்பத்தையும் ஸாதிக்க வல்லரல்லர் நமது நண்பர்.

3. இதற்குமேல் (மூன்றாம் பக்கத்தில்) "பண்டித ச்ரேஷ்டரான ஸ்ரீமான் அண்ணங்கராசாரியர் முதலானவர்களும் குரு பரம்பரா வைபவங்களில் பூர்வாசார்ய வைபவ மென்கிற அவருடையதான தமிழ் நூலில் வேதாந்த தேசிக வைபவத்தையும் சேர்த்திருக்கையாலே ஸ்ரீதேசிகரையும் மிகச் சிறந்த பூர்வாசாரியர்களில் சேர்ந்தவ

ராகவே (அண்ணங்கராசாரியர்) அபிப்பிராயப்படுகிறார்" என்று எழுதப்பட்டுள்ளது. இங்குச் சிறிது விமர்சிப்போம்; மேலே உதாஹரித்த வாக்யங்களில் "அவருடையதான" என்றிருக்கிறதே, அவர் என்றால் எவர்? என்று கேட்கவேண்டியதாகிறது. ஸம்ஸ்க்ருத ஸரணிக்குச் சேர வேதாந்த தேசிகரையே தச்சப்தார்த்தமாகக் கொள்ளவேண்டும்; அது வக்தாவின் விவக்ஷைக்குப் பொருந்தாது. வக்தாவோவென்னில் அண்ணங்கராசார்ய வ்யக்தியையே தச்சப்தார்த்தமாகக் கொண்டிருக்கிறாரென்பது அபலபிக்கப்போகாது. அதுதான் சேரும். அதற்குச் சேர 'ஸ்வகீயே' என்றுதான் ஸம்ஸ்க்ருத லேகனம் செய்திருக்கவேண்டும். 'ததீயே' என்றெழுதியது பொருந்தாது. சப்தத்தைத் திருத்துகையாகிற விது நிற்க.

4. தேசிகர் ஸ்ரீவைஷ்ணவாசார்யரென்பது ப்ரஸித்தமான விஷயம். அப்பேராசிரியருடைய வைபவம் ஸ்ரீவைஷ்ணவாசார்ய வைபவ நூலில் கோக்கப்பட்டதானது வியக்கத் தக்கதுமன்று, க்ஷேபிக்கத் தக்கதுமன்று. இங்ஙனேயிருக்க, "பண்டித ப்ரவர - ஸ்ரீமதண்ணங்கராசார்யாதிகள் நிகமாந்ததேசிகரை ஸ்ரீவைஷ்ணவ பூர்வாசார்யர்களில் சேர்ந்தவராகக் கருதுகின்றார்கள்" என்றெழுதியிருப்பது "மின்மினிப்பூச்சி கதிரவனை ஒளியுடையவனாகக் கருதுகின்றது" என்னுமாபோலே அபஹாஸ்யமென்றும், எடுகளை நிரப்புவதற்குப் போருமென்றும் கொள்க.

5. (பூமிகையின் முதற்பக்கத்தில் "ப்ரதிவாதி பயங்கர - அண்ணங்கராசாரியர் முதலானவர்களும் வேதாந்த தேசிக க்ரந்தமாலையை வெளியிட்டுத் தங்களை மிகவும் தந்யர்களாக வெண்ணி நித்ய ஸந்தோஷம் நிரம்பியவர்களாகக் காணப்படுகின்றார்கள்" என்றுள்ள வாக்கியமும் அஸமஞ்ஜஸமேயாகும். உலகில் அவ்வோ மதாபிமாநிகள் தம்தம் மதப்ரவர்த்தகர்களான ஆசிரியர்களாலியற்றப்பட்ட நூல்களை வெளியிடுவதில் ஊக்கங்கொண்டேயிருக்கின்றார்களாதலால் இதை எடுத்துரைக்கவேண்டிய ப்ரஸக்தியே கிடையாது. மிகச்சிறந்த ஆசாரியர்களியற்றிய உயர்ந்த நூல்களை வெளியிடுமவர்கள் தங்களை தந்யர்களாகநினைப்பதும் தாம் அகமகிழ்வதும் இயல்பே. இதில் வியப்புக்கோ க்ஷேபத்திற்கோ மற்றொன்றுக்கோ எள்ளளவும் இடமில்லையென்பது ஸாமான்ய ஜனங்களுமறிந்ததாகும். இப்படியிருக்க, நமது நண்பர் என்ன கருத்துக்கொண்டு இதையெழுதினரோ? அவரையே கேட்டுணரவேணும். அவசியமானால் "நமது நண்பரான அண்ணங்கராசாரியரும் தேசிக க்ரந்தமாலையைத் தொகுத்து வெளியிட்டிருக்கின்றார்" என்றிவ்வளவே யெழுதியிருக்கலாம்.

6. (பூமிகையின் இரண்டாவது பக்கத்தில்) "ஸ்ரீதேசிக க்ரந்தமாலையின் மலர்கள் கீழே குறிக்கப்படுகின்றன" என்று மகுடமிட்டுக் குறித்திருக்கின்ற தேசிக திவ்ய க்ரந்தங்களில் பாதுகாஸஹஸ்ரத்திற்கும் ஸங்கல்ப ஸூர்யோதயத்திற்குமிடையில் லக்ஷ்மீஸஹஸ்ரம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இங்கு நண்பருடைய

மருள் மிக வருந்தத்தக்கது. ச்லேஷ யமக சக்ரவர்த்தி யென்று ப்ரஸித்தரும், விச்வ குணதர்சம் வரதாப்யுதயம் முதலான அனேக க்ரந்தங்களை இயற்றியவருமான அரசாணிபாலை வேங்கடாத்வரியே லக்ஷ்மீஸஹஸ்ர மியற்றினவ ரென்றும் இது தேசிக ருடைய க்ருதியன்றென்றும் பண்டிதர்களும் பாமரர்களும் நன்கறிவர்கள். பூஷணீ காரர் அதைக் கூட அறியப்பெறுததென்னே!. "வேங்கடாத்வரி ப்ரணீதம் லக்ஷ்மீ ஸஹஸ்ரம்' என்று முகபத்ரத்திலிருப்பதை மட்டும் பார்த்து *ஸ்ரீமாந் வேங்கடநா தார்ய: என்று ப்ரஸித்தரான வேதாந்தாசார்ய வர்யரே இதற்கும் கர்த்தாவென்று ப்ரமித்து விட்டா ரந்தோ! உட்புகுந்து முதல் ஸ்தபகத்தை மட்டுமாவது நோக்கியிருந் தால் பாதுகாஸஹஸ்ரகாரர் வேறு, லக்ஷ்மீஸஹஸ்ரகாரர் வேறு என்பதை எளிதி லுணர்ந்திருக்கலாம். அதுதன்னில் இந்த ச்லோக முள்ளது—"பத்யாநாம் தசபி:" இத்யாதி. இதன் கருத்து யாதெனில், அபரஹயக்ரீவனை வேதாந்ததேசிகன் பாதுகாஸஹஸ்ரமருளிச்செய்ததில் வியப்பொன்றுமில்லை; அல்பஜ்ஞனும் ஊமனுமான நான் லக்ஷ்மீஸஹஸ்ரமியற்றுவதே வியப்பு—என்பதாம். இதனால் பாதுகாஸஹஸ்ரகர்த் தாவைக் காட்டிலும் லக்ஷ்மீ ஸஹஸ்ர கர்த்தா வேறுபட்டவரேயென்பது புலனும். நமது நண்பர் எந்த க்ரந்தத்திலும் உள்ளே கண்வைப்பதில்லையென்றும், எதிலும் மேல்பக்கப் பார்வையோடு நிற்பவரென்றும் இதனால் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

7. வடமொழியிற்போலவே ஆங்கில பாஷையிலும் ஒரு முகவுரை பூஷணியில் சேர்க்கப்பட்டுள்ளது; அதிலும்; லக்ஷ்மீஸஹஸ்ரத்தைப்பற்றின இந்த மருள் ப்ரதிஷ்டை பெற்றிருக்கின்றது. இது மற்றும் பல விஷயங்களுக்குமொக்கும்.

8, மற்றொரு மருளும் அதில் காண்கிறது; ஸ்ரீராமானுஜர் ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களைப்போல தத்வத்ரய மென்றொரு க்ரந்தத்தையும் ஸாதித்திருப்பதாக அதில் எழுதப்பட்டுள்ளது. இங்ஙனமாகப் பலவகைப்பட்ட ப்ரமஸம்ப்ரமங்கள் நமது நண்பரிடம் விளங்காநின்றன. எல்லாம் க்ரமேண விசதமாகும்.

9. பூஷணீகாரர் பரஸ்பரவிருத்தங்களான விஷயங்களை யெழுதுவதில் மஹாநிபுணரென்பதை விளக்குவோம். இதில் மிகச் சிறு விஷயமொன்றும் பெரிய விஷயமொன்றும் காட்டுவோம். தேசிகர் விபவ வருஷத்தில் அவதரித்தருளினு ரென்று (பூமிகை – நாலாவது பக்கத்தில்) எழுதினர். மேல் ஐந்தாவது பக்கத்திலோ வென்னில். "நித்யாக்நிஹோத்ரியான தேசிகருக்குத் தமது தேவியாரிடத்தில் நாற்பதா வதுஃ பிராயத்தில் நள வருஷத்தில் திருக்குமாரர் திருவவதரித்தார்" என்று எழுது கிறுர். திருவவதார வருஷமான விபவ வருஷத்திலிருந்து நாற்பதாவது வருஷம் நள வருஷமா? என்பதைச் சிறுவர்களும் விமர்சிக்கலாம். நாற்பதாவது வயதுக்கு வெகுதூரத்திலும் ஐம்பதாவது வயதுக்கு அருகிலு முள்ளது நள வருஷம்—என்பதை அநாயாஸமாக யாவருமறிந்துகொள்ள முடியும். வெறுமனே 'நாற்பதாவது வயதில்'

என்றோ, ‘நள வருஷத்தில்’ என்றோ இவ்வளவே யெழுதியிருந்தால் இங்குக் குறை கூற இடமிராது. மிகச் சிறு விஷயத்திலுங்கூட விபரீதமாகவும் பரஸ்பர விருத்தமாகவும் எழுதுவதே பூஷணீகாரர்க்கு இயற்கையான பெருமையென்று நிரூபிப்பதற்கு இவ்வளவே போதும். கீழே பிரதிஜ்ஞை செய்தபடி பெரியதொரு விஷயத்திலும் இத்தகைய அவத்யம் நேர்ந்திருப்பதை நிரூபிப்போமினி.

10. நண்பர் பூமிகையின் நாலாவது பக்கத்திலெழுதுகிறார்—“தென்கலையார் வடகலையாரென்கிற இருவகுப்பினரும் தேசிகரை ஸ்ரீராமானுஜரைப்போலவே தம் தம் வகுப்பில் சேர்ந்தவராக நினைத்து, ஸ்ரீபெரும்பூதூர் திருவல்லிக்கேணி திருமலை திருப்பதி காஞ்சீபுரம் முதலான தலங்களில் தம் தம் குறியிட்ட விக்ரஹ பூஜையைச் செய்தும் உற்சவங்களை நடத்தியும் தம் தமக்கு ஆராத்ய தேவதையாகவே (தேசிகரைக்) கொண்டிருக்கிறார்கள்” என்று. இதனால் என்ன தெரிவிக்கப்படுகிறது? ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் ஸுப்ரஸித்தமான தென்கலை வடகலை யென்கிற இருவகுப்பினுமுள்ள ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் தேசிகரிடத்தில் ஸமரூபமான ப்ரதிபத்தியோடு கூடினவர்கள் என்று ஸ்பஷ்டமாகத் தெரிவித்ததாகிறது. இஃது உரியதும் உண்மையுமான வார்த்தையே. மேலே ஆறாவது பக்கத்தில் எழுதுகிறார்—“சண்டமாருதமென்பது சததூஷணிக்கு வியாக்கியானமென்று பேர்பெற்றது. அந்த நூலும் சததூஷணியை வெகு தூரத்தில் கொண்டு தள்ளுவதற்கே ஏற்பட்டது. சண்டமாருதகாரரான தொட்டயாசாரியர் தென்கலைவகுப்பைச் சேர்ந்தவராதலால் வடகலை வகுப்பினரான தேசிகருடைய க்ரந்தத்தை ப்ரதிபக்ஷிக்ரந்தமாகவே கொண்டு ஆங்காங்கு தூஷிக்கிறார்” என்று. இது மிகவும் அஸம்பாவிதமும் ஸ்வவசந விருத்தமுமாகும். முன்னமுதாஹரித்த இவருடைய வார்த்தைகளினால் தென்கலையாரும் வடகலையாரும் தேசிகரிடத்தில் ஸமரூபமான ப்ரதிபத்தியுடையவர்களென்றும், இரு வகுப்பினரும் தேசிக விக்ரஹாராதனமும் தேசிக மஹோத்ஸவங்களும் பல திவ்ய தேசங்களில் செய்து போருவதனால் இது நன்கு தெரிகின்றதென்றும் தெரிவித்துவிட்டு, அதற்கு விரோதமாக “தொட்டயாசாரியர்க்கு தேசிகரிடத்தில் கலாவைஷம்ய ப்ரயுக்தமான மாத்ஸர்யமிருந்ததென்று எழுதுவது மிகவும் அஸம்பத்தம்.

11. வஸ்துஸ்திதியையும் இங்குத் தெரிவிப்போம். தென்கலை வடகலை பேத வ்யவஹாரங்களும், தத்ப்ரயுக்தமான மாத்ஸர்யகதையும் மிகவும் ஸமீபமான காலத்தில் ஏற்பட்டனவே யொழிய தேசிகர் காலத்திலோ தொட்டயாசாரியர் காலத்திலோ இவை அடியோடு இருந்ததில்லை. தேசிகரிடத்தில் மாத்ஸரியங் கொண்டவர்களாகவோ பக்தி ஹீனர்களாகவோ ஒரு ஸ்ரீவைஷ்ணவருமிருந்ததில்லை. நவீனகாலத்

தில் கோவில் ஸ்பர்த்தைகளேற்பட்டு அதனாலாகிய கலிகோலாஹலக்ரீடையை நாம் மறைப்போமல்லோம்; அதை இங்கு ஸ்மரிக்கவும் ப்ரஸக்தியில்லை. தொட்டயாசாரியர் தேசிகபக்தர்களில் தலைவர். அவரியற்றிய சண்டமாருதத்தில் ஆங்காங்கு தேசிக தூஷணங்களிருப்பதாகச் சொல்லுவது ஸர்வாத்மநா அஸம்பவக்ரஸ்தம். எவ்வெவ்விடங்களில் எவ்விதமான தூஷணங்கள் அதிலுள்ளன ? காட்டும்—என்றால் நமது நண்பர் வாய்மூடி நிற்கவேவேண்டும். இப்படி அஸம்பத்தங்களும் பரஸ்பர வ்யாஹதங்களுமான வார்த்தைகளே மலிந்திருக்கப்பெற்றது பூஷணீ க்ரந்தம்—என்பது கல்வெட்டு.

12. தொட்டயாசார்யருடைய காலம் இற்றைக்கு நானூறு வருஷங்களுக்கு முற்பட்டதென்பது நிர்விவாதமான விஷயம். தென்கலை வடகலை வைஷம்யம் தலையெடுத்திருக்கு மிக்காலத்திலேயே உபயகலையாரும் தேசிகரிடத்தில் ஸமரூபமான ப்ரதிபத்தியோடிருக்கின்றார்களென்பதை பூஷணீகாரர் கட்கூடாகக் கண்டிருக்கும்போது, இப்படிப்பட்ட வைஷம்யத்திற்கு அங்குர லவலேசமுமில்லாதிருந்த முற்காலத்தவராய் பரமஸாத்விகராய் ஆசார்ய திவ்யஸூக்தி ரஸிகாக்ரேஸரரான தொட்டயாசாரியர் தேசிகரிடத்தில் எவ்வளவு ப்ரதிபத்தி கொண்டிருப்பரென்பதை உள்ளபடியுணர அசக்தரல்லரிவர். கேவலம் மநஸ்ஸாக்ஷியத்தை வஞ்சித்து மனம்போனபடியெழுதுகிறவர் இவர் என்பதைத்தான் இங்கு அறுதியிடவேண்டும். சததூஷணியிலும் சண்டமாருதத்திலும் இவர்க்கு நாபிகிரம்ப உண்டான பகை, விஷயங்களினுட்புகுந்து ஒன்றும் செய்யமுடியாமற் போகவே இப்படிப்பட்ட அஸம்பத்தோக்திகளை எழுதுவித்தது என்று நிர்ணயிப்பதில் என்ன அருமை ? நாம் எடுத்துக்காட்டும் விஷயங்கள் ஒவ்வொன்றிலும் பூஷணீகாரர் தம்முடைய அநுதாபத்தை வெளியிடக் கடமைப் பட்டவரேனினும் இவ்விஷயத்தில் விசேஷித்து அநுதாபங்காட்டக் கடமைப் பட்டவரென்பதை வற்புறுத்துகிறோம்.

13. முக்கியமாக வொன்றுகேண்மின். நண்பருடைய நூலுக்கு சதபூஷணியென்று பெயரிட்டிருப்பது அடியோடு பொருந்தாது. நூலையியற்றிய நண்பருடைய ஸ்வக்ராமம் நூரணியென்று ப்ரஸித்தமாம்; அதன் மொழிபெயர்ப்பு சதபூஷணி யென்றாகிறதாம்: அந்த க்ராமத்தின் பெயரே நூலுக்கும் பெயராக இடப்பட்டதாம் என்னில்; விட்டிடுவோம். ஆனாலும் அந்த க்ராம நாமத்தை நூறணி யென்று வல்லின றகரமிட்டு எழுதாமல் நூரணியென்று இடையின ரகரமிட்டே நியமேந எழுதக் காண்கையாலே இந்த வாதம் ஏலாது. இதற்குமேல், தூஷணபரிஹார ரூபங்களான பூஷணங்கள் நூறு கொண்டதென்கிற காரணத்தினால் சதபூஷணி யென்று பெயரிடப் பட்டதென்னில்; இது அடியோடு பொருந்தாது. ஸ்வபுத்தியால் பூஷணமென்று கொள்ளப்பட்ட பரீக்ஷைகள் அறுபத்து நான்கு மட்டுமே செய்யப்பட்டிருப்பதால் சதபூஷணியென்கைக்கு அவகாசமே இல்லை.

14. இதற்குமேல் பிறர் ஒன்று கேட்கலாம்; அறுபத்தாறு தூஷணங்களே கொண்ட தேசிக க்ரந்தத்திற்கு சததூஷணி யென்னும் பெயர் எங்ஙனே பொருந்தும்? என்று. இதற்குச்சொல்லுகிறோம் கேண்மின். தேசிகர் அந்த நூலை இயற்றும் போது நூறு தூஷணங்கள் கொண்டதாகவே இயற்றினார்; நாளடைவில் (பிறகு) முப்பத்தாறு தூஷணங்கள் லோபமடைந்து விட்டன. நூறு தூஷணங்களை இடாமல் சததூஷணி யென்கிற பெயரை ப்ராமாணிகர்களான ஆசாரியர்கள் ஒருகாலும் வைக்கமாட்டார்கள். ஆகவே, ஆசிரியர்காலத்தில் நூறு தூஷணங்கள் கொண்டதாகவே யிருந்த அந்த நூலுக்கு சததூஷணி என்கிற திருநாமம் ஸங்கதமேயாகும்.

15. பூஷணீகாரர்தாமே பூமிகையின் நான்காவது பக்கத்தில் ஒரு விஷய மெழுதியுள்ளார்; (அதாவது) ''தேசிகர் ஆயிரத்திற்குமேற்பட்ட கடினமான ஸமஸ்யைகளைப் பூர்த்தி செய்ததனால் இவர்க்கு 'ஸமஸ்யாஸஹஸ்ரீ' என்கிறபிருதம் யதார்த்தமானது'' என்று. தேசிகர் செய்த ஸமஸ்யாபூர்த்தி இப்போது ஒன்றுகூட கிடைப்பதில்லை. அந்த ஸமஸ்யா பூர்த்தி க்ரந்தம் அடியோடு லோபித்துவிட்டதென் பதை பூஷணீகாரரும் நன்கறிவர். சததூஷணியிலோ வென்னில் சில வாதங்கள் மட்டுமே லோபமடைந்தன. அதனால் சததூஷணீ நாமத்தில் விப்ரதிபத்திக்கு இடமே கிடையாது. இப்போதே எழுதப்பட்டதான பூஷணீ க்ரந்தத்தில் முப்பத்தாறு பூஷணங்கள் லோபித்துவிட்டனவென்று பூஷணீகாரர் சொல்லவேண்டியதாகும். இது ஏற்கத்தக்கதாகாது. பூஷணீகாரர் இப்படிப்பட்ட அஸங்கத வாதத்தைச் செய்ய முன்வரமாட்டாரென்று நம்புகிறோம். ஆக சதபூஷணி யென்கிற நூற் பெயரே மிகவும் அஸங்கத மென்று முடிந்தது.

16. பூமிகையின் கடைசி பக்கத்தில் நமது நண்பர், தமக்குக் கண்பார்வை கிடையாதென்பதையும், புத்தகம் பார்ப்பதோ எழுதுவதோ எல்லாம் பிறர் மூல மாகவே நடந்துவருகிறதென்பதையும், தாம் நிமித்த மாத்ரமென்பதையும் தாமே எழுதியுள்ளார். இது வாஸ்தவமே. இத்தகைய புத்தகத்திலுள்ள அவத்யங்களை யெடுத்துக் காட்டுவதில் எமக்கு விசேஷமான உத்ஸாஹமில்லை. மிக அநந்விதங்களும் அநுபபந்நங்களுமான வாக்ய ராசிகளைக் கொண்ட பூஷணியை வெளியிட்டதனால் யாருக்கு எவ்விதமான உபகாரம் செய்தாராகிறாரென்பதை அறிகின்றிலோம்.

17. மத்யஸ்தர்களான விவேகிகளே! இதுவரையில் நிரூபித்த விஷயங்கள் ஸ்தாலீபுலாக ந்யாயத்தாலே காட்டப்பட்டவை. இத்தகைய பல அஸம்பத்த விஷ யங்களே சதபூஷணியில் மலிந்துள்ளன வென்பது உண்மை. இதே ரீதியில் குற்றங் களை நிரூபித்துக் கொண்டுபோனால் புத்தகம் மிகப் பெரியதாகும். இது வீணை விரிவென்று விட்டிடவேண்டியதே யானாலும் சதபூஷணியில் இப்படிப்பட்ட விஷயங்

கள் எவ்வளவு நிரம்பியிருக்கின்றன வென்பதைப் பண்டிதர்களும் இதரர்களும தெரிந்துகொள்ளும்படி காட்டவேண்டியது அவசியமேயாகிறது.

18. பூமிகை பக்கம் 9-ல் "ப்ரஹ்மமீமாம்ஸையினுல் அத்வைதந்தான் போஷிக்கப்படுகிறது; பாஞ்சராத்ரப்ராமாண்ய நிராஸமுகத்தாலே விசிஷ்டாத்வைதத்தில் வெறுப்பு காட்டப்படுகிறது; அத்வைதத்தில்தான் ஸ்வாரஸ்யம் காண்கிறது" என்றிப்படிப்பட்ட ப்ரதிஜ்ஞாமாத்திரத்தினுல் ஏடுகளை நிரப்பியுள்ள நண்பர்க்கு எந்த விஷயத்திலும் சிறிதும் கிலேசமில்லையன்ருே. அவர் அத்வைதமென்று போட்ட இடங்களில் விசிஷ்டாத்வைதமென்று போட்டு மறுப்பு எழுதுவதிலும் ஒருவர்க்கும் கிலேசமிராது. ஆனுல் இவை பண்டித க்ருத்யமாகமாட்டா.

19. சாஸ்த்ரஜ்ஞர்களான வித்வான்கள் கவனிக்கத்தக்க அவத்யங்கள் சிலவற்றை பூமிகையிலிருந்தே எடுத்துக் காட்டுவோம். *ப்ராஹ்மேண ரூபேண ஜைமிநிருபந்யாஸாதிப்ய:* என்று ப்ரஹ்மஸூத்ரமிருப்பதாக* அடிக்கடி யெடுத்துக் காட்டுகிருர் நண்பர். இதில் (ரூபேண) என்கிற பதம் இவர்தாமே சேர்த்துக்கொண்டது; சங்கரபாஷ்யத்திலும் இது காணக்கிடைக்காது. இவரே ஸ்வதந்த்ர ஸூத்ரகாரராகி விடுகிருர். ஸூத்ரசரீரத்தையே மாற்றுகிறவர் எதைத்தான் மாற்றமாட்டார்?

20. பூமிகையின் பக்கம் 16. முடிவு வரியில் "........"இத்யாதி ஸர்வம் அஜ்ஞாந விஷயம் நிரபோஹம்" என்றெழுதியுள்ளார். இந்தவாக்யத்திற்கு என்னபொருளென்று பண்டிதர்கள் இவரை நேரில்கண்டு கேட்கவேணும். நிரபோஹம் என்பதற்கு 'நிரப: அஹம்' என்று பதம் பிரித்து ஏதோ பொருள் கூறுகிருரென்று கேள்விப்படுகிறேரும். 'நிரப: ஹம்' என்று கூடப் பிரிப்பர். அதுகிடக்கட்டும். 'அஜ்ஞாநவிஷயம்' என்பதை இவர் ப்ரதமாவிபக்த்யந்தமாக விவக்ஷிக்கிருரா? அல்லது த்விதீயா விபக்த்யந்தமாக விவக்ஷிக்கிருரா? என்பது இங்குப் பண்டிதர்கள் வினவக்கூடியது. விஷய சப்தம் நித்யபும்லிங்கமென்பதைக்கூட அறியமாட்டாதவரல்லரே இப்பண்டிதோத்தமர். இங்கு பஹுவ்ரீஹி ஸமாஸம் விவக்ஷிதமென்பரோ? இவர் வ்யுத்பந்நர்தானு? என்பதைக் கண்டுகொள்வதற்கு ஏவம்வித விசாரங்கள் ஆவச்யகமல்லவா? இவ்விடத்தில் தமக்கு அபிப்ரேதமான அர்த்தம் இன்னதென்பதை நண்பர் ஸஹ்ருதய ஹ்ருதயங்கமமாக விசதீகரிக்க ப்ராப்தம்.

21. பூமிகை பக்கம் 29ல் * சரீரத்வம் * எனமகுடமிட்டு * சரீரத்வம் அந்த:கரணேபஹிதேத்யாதி இரண்டு நிர்வசநங்கள் காட்டப்பட்டுள்ளன; அவற்றுள் சரீரத்வம் சேர்ந்தேயிருக்கையாலே ஆத்மாச்ரயமெனகிற தோஷக்ரஸ்தம் என்பதை சாஸ்த்ரஜ்ஞர்கள் எளிதினுணர்வர்கள். * பூதபௌதிகஸங்காதத்வம் * என்றதும்

பொருந்ாது; *ந பூதங்கஸம்ஸ்தானோ தேஹோஸ்ய பரமாத்மந: * என்கிற ப்ரமாணத்தோடு சேராதாகையினலே. * நவிலக்ஷணத்வாதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் இது விசதமாகக் காணத்தகும்.

22. பூமிகை பக்கம் 30ல்—" தத்ர ரத்நபேடிகாயாம் " என்று ஆரம்பித்துக் காடுபாய்ந்து ஏதோ எழுதப்பட்டிருக்கின்றது. காட்டிலுள்ளே பாய்ந்தவர் மீண்டு ஸ்வஸ்தானம் சேர்ந்ததாகத் தெரியவில்லை. 'ரத்நபேடிகாயாம்' என்ற ஸப்தம்யந்த பதம் எங்கே அந்வயிக்கிறதென்று பண்டிதரையே கேட்கவேணும். எந்த பண்டிதரைக் கேட்கவேணுமென்றல் பூஷணீகாரரான அந்த பண்டிதரைத்தான் கேட்கவேணும். கேட்டால் கேட்ட கேள்விக்கு ஆர்ஜவத்துடன் பதில் வருமாவென்று சில ஆப்தர்கள் என்னைக் கேட்டதுண்டு. இதன்மேல் நினைவுக்கு வந்ததொரு விஷயத்தை [அவர்களிடம் தெரிவித்ததை]யும் இங்குத் தெரிவிக்கிறேன்.

23. பூஷணீகாரர் தம்முடைய பூஷணீக்ரந்தத்தை எனக்கு நேரில் ஸமர்ப்பிக்க எனது க்ருஹத்திற்கு நேராக வந்திருந்தபோது பூஷணியைக் கையில் வாங்கிப் பிரித்தவுடனே அதில் "ஸப்ரச்ரயம் விசேஷஸூசநம்" என்று மகுடம் புனைந்த ஒரு பக்கம் தெய்விகமாக எனது பார்வைக்குக் கிடைத்தது;

"தத்ர ஸப்ரச்ரயம் க்ஷமாபணப்ரார்த்தநமேவ வரம் சரணம் —
இதி நிவேதயதி பூஷணீகார:"

என்கிற இந்த வாக்யமே முதன் முதலாக எனது கண்ணில் பட்டது. அப்போது பூஷணீகாரர் என்னெதிரிலேயே நின்றுகொண்டிருந்தபடியால் உடனே அவரைக் கேட்டேன்

> "பண்டிதோத்தமர்களே! க்ஷமாபணப்ரார்த்தநம் என்றொரு பதம் எழுதியிருக்கிறீர்களே, இதற்கு என்ன அர்த்தம்? ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரஜ்ஞர்கள் க்ஷமாபணமென்று ப்ரயோகித்திருக்க எங்கேயாவது கண்டதுண்டா? க்ஷாமணம் என்கிற சொல் வடிவம் தேறுமேயல்லது க்ஷமாபணம் என்று சொல்வடிவம் தேறமாட்டாதென்கிற இச்சிறு விஷயத்தைச்கூட அறியாமல் தாங்கள் இப்பெரிய புத்தகத்தை எழுத எங்ஙனம் முன்வந்தீர்கள்?"

என்றேன். இதற்கு அவர்கள் ஏதோ பதில் கூற ஆரம்பித்து உடனே வாளா இருந்துவிட்டார்கள். இதைப்பற்றி உலகுக்கு உணர்த்துகிறேன். க்ஷமாபணமென்று சாஸ்த்ரஜ்ஞர்கள் ஒருகாலும் பிரயோகிக்கமாட்டார்கள். க்ஷாமணமென்பது தான் ஸாஷ்டுவான சப்தமாகும். வையாகரணர்களைச் சரணமடைந்து சிரோவேஷ்டநப்ராணாயாமந்யாயேந ச்ரமப்பட்டு க்ஷமாபணபதமும் ஸாதுதானென்று

இவர்கள் ஸமர்த்தித்து விடுகிறார்களென்று வைத்துக்கொள்ளுவோம்; அப்போதும் க்ஷமாபணப்ரார்த்தந மென்கிறவிது ஒருபடியாலும் பொருந்தவிட முடியாததே. க்ஷாமணப்ரார்த்தந மென்றே இவர்கள் எழுதியிருந்தாலுங்கூட அதுவும் அஸங்கதமே யாகும். க்ஷமாப்ரார்த்தந மென்பதுதான் ஸங்கதமாகக் கூடியவார்த்தை. க்ஷமஸ்வ என்று ப்ரார்த்திப்பதுதான் க்ஷாமணம். க்ஷமாபணமென்று இவர்கள் கொண்ட சொல்லுக்கும் க்ஷமஸ்வேதி ப்ரார்த்தநமொழிய வேறொன்றும் அர்த்தமாகச் சொல்ல முடியாது. ஆகவே இங்கு ப்ரார்த்தநபதத்தை ஏற்றியிருப்பது பொருந்தவேமாட்டாது. "க்ஷாமணமேவ வரம் சரண"மென்றோ "க்ஷமாப்ரார்த்தநமேவ வரம் சரண" மென்றோ இவர்கள் ப்ரயோகித்திருக்கவேண்டும். க்ஷமாபண ப்ரார்த்தநமென்று தாங்கள் ப்ரயோகித்திருப்பதற்கு முந்துற முன்னம் பண்டித கோஷ்டிகளில் க்ஷமா ப்ரார்த்தநம் செய்தாகவேண்டுமே! என்று. இதையும் அவர்களிடத்தில் நேரில் சொன்னேன். வாய்திறந்து ஒன்றும் சொல்லிற்றிலர்; சிர:கம்பத்தோடு சென்றுவிட்டார்.

24. மேலே ப்ரஸ்தாவித்த "ஸப்ரச்ரயம் விசேஷஸூசநம்" என்கிற பகுதியில் — சதபூஷணீகாரரான தமக்கு ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனிடத்திலும் ஸ்ரீ பாஷ்யகாராதிகளிடத்திலும் தனிப்பட்ட பக்திச்சிறப்பு உண்டென்பதைத் தம்முடைய பூமிகை விசதமாக்கு மென்று நம்புவதாக எழுதியுள்ளார். இதற்கு ஏதாவது அர்த்த முண்டாவென்று பார்க்கவேணும். தேசிகனிடத்திலோ ஸ்ரீ பாஷ்யகாராதிகளிடத்திலோ இவர்களுக்கு ஹார்த்தமான பக்தியிருந்தால் உண்மையில் உஜ்ஜீவிக்க வழியுண்டுதான். அப்படி பக்தியிருப்பதாகக் காட்டக் கூடிய சப்தம் இவர்களது புத்தகத்திலிருப்பதாகப் புலப்படவில்லை. ஆனாலும் அப்பேராசிரியர்களிடத்தில் தமக்கு அதிசயிதமான பக்தியிருப்பதாக இங்குக் காட்டியிருப்பதொன்றே போதுமானது. அந்த பக்தியை இவருடைய வேறுபங்க்திகளிலிருந்து நாம் ஊஹித்து அறிவதிற்காட்டிலும் இந்த பங்க்தியிலிருந்து ஸ்பஷ்டமாகவே அறியப் பெறுவது விசேஷந்தானே. ஸ்ரீ வைஷ்ணவதனிகர்களிடத்தில் பொருளீட்டுவதற்கு இத்தகைய வார்த்தைகள் மிகவும் உதவுகின்றனவென்று ஒரு ரஸிகர்தெரிவித்தார். அதுவும் யுக்தமே.

25. பூஷணீகாரர் சததூஷணியை பூஷிக்க எழுந்தவரா! தூஷிக்க எழுந்தவரா? என்பதை முக்கியமாக ப்ராஜ்ஞர்கள் பராமர்சிக்கவேணும். இவ்விஷயத்தில் பூஷணீகாரர் ஆங்காங்கு எழுதியிருப்பவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. அந்த முரண்பாட்டுக்குக் காரணம் ஹ்ருதயத்தில் ஆர்ஜவமில்லாமையேயாகும். சததூஷணியைக் கண்டிக்க எழுகின்றேனென்று உள்ளபடியெழுதினால் தண்டிப்பாராருமில்லை. மதாபிநிவேசமுள்ளவர்களுக்கு அது ப்ராப்தமான கைங்கரியமேயாதலால் உள்ளத்துளுறியிருக்கும் அவ்வபிப்ராயத்தை ஒளித்திடாமல் வெட்ட

வெளிச்சமாகவே காட்டி "சததூஷணீ தூஷணம் — சததூஷணீகண்டனம் — சததூஷணீப்ரத்யாக்யானம் — சததூஷணீ சகலீகரணம் என்றிப்படிப்பட்ட பெயர்களில் ஏதேனுமொரு பெயரைத் தமது நூலுக்கு இவர்கள் வைத்திருக்கலாம். இவர்களுடைய சதபூஷணியை மறுக்கத் தொடங்கினநாம் சதபூஷணீ வஜ்ரகுடாரமென்று பெயரிட்டது போல இவர்களும் சததூஷணீ வஜ்ரகுடாரமென்று பெயரிட்டிருக்கலாம். அவ்விதமாகப் பெயரிடாமல் ஒருவகையான பொருளுக்கு மிணங்காதபடி சதபூஷணி யென்று பெயர் வைத்து சததூஷணீ பரீக்ஷாபரபர்யாயா என்றும் எழுதியிருக்கிறார்கள். பரித: ஈக்ஷா — பரீக்ஷா. சததூஷணியைச் சுற்றிச் சுற்றிப் பார்ப்பது. (அதாவது) ஏடுகளைத் தள்ளித் தள்ளிப் பார்ப்பது என்று அர்த்தம் போலும். இப்படிப்பட்ட ஸ்தலங்களில் சாஸ்த்ரஜ்ஞர்கள் சொல்லுகின்ற பொருள் ஒன்றுண்டு; அது கண்டனம் என்கிற பொருளில் பர்யவஸித்து நிற்கும். அது தமக்கு விவக்ஷிதமன்றென்று பூஷணீகாரர் பலவிடங்களில் எழுதியுள்ளார். "உத்தேசம், லக்ஷணம், பரீக்ஷை என்று மூன்றுவகைப் பட்டிருக்கும் தத்வநிர்ணயக்ரமம்" என்று ப்ராஜ்ஞர்கள் சொல்லுவதொன்றுண்டு; அந்த பரீக்ஷையும் விவக்ஷிதமாக ப்ரஸக்தியில்லாமலிருக்கின்றது.

26. சததூஷணியைக் கண்டிக்கவேணுமென்கிற அபிநிவேசமும், கண்டித்துவிட்டோமென்கிற குதூஹலமுமே பூஷணீகாரர்க்கு மிக்கிருப்பதாக நன்கு விளங்குகின்றது. எப்படி விளங்குகின்றதென்னில்; கேண்மின்; (பக்கம் 11-ல்) பூஷணீகாரர் எழுதியிருப்பதாவது—

> "மற்ற அதிகரணங்களும் அத்வைதத்தில் தான் ஸ்வரஸங்களென்பதை ஸமயங்களில் விவரிப்போம். ப்ரக்ருதமான சததூஷணீபரீக்ஷையையே நாம் செய்யத்தக்கதாக நினைத்து அதில் ப்ரவர்த்திக்கிறோம். சததூஷணீக்ரந்தமானது 'பரமதே ப்ரஹ்மஸூத்ர ஸ்வாரஸ்ய பங்கவாத:' என்று மகுடமிட்டு ஒரு ப்ரகரணம் எழுதியிருப்பதால், ப்ரஹ்மஸூத்ரங்களுக்கு ஸ்வமதத்தில்தான் ஸ்வாரஸ்யமுள்ளதாக அபிமானித்திருக்கின்றதென்று தெரியவருவதால் அந்த அபிமானத்தைத் தொலைப்பதற்காகவே நாம் இவ்வளவு விரிவாக எழுதினோம். இதற்குமேல் சததூஷணி எங்கே நிற்கிறது? அத்வைதத்தில் எவ்விதமான ஸ்வாரஸ்ய பங்கமிருப்பதாக அது அபிமானிக்கிறது? என்பதைப் பரீக்ஷிக்கிறோம்"

என்பதாம்.

சததூஷணியை தூஷிப்பதில் நமக்குச் சிறிதும் நோக்கமில்லையென்று அடிக்கடி யெழுதியிருக்கின்ற பூஷணிகாரர், சததூஷணியின் அபிமானத்தை பஞ்ஜனம் செய்வதற்காகவே இவ்வளவு விவரித்தோமென்றும், இனிமேல் சததூஷணி எங்கேநிற்கிறது பார்ப்போமென்றும் எழுதியிருப்பது அவர்க்கேதகும். சததூஷணியானது ஆதியி

விருந்து எங்கு நிற்கிறதோ அங்கேதான் இன்னமும் நிற்கிறது, இனியும் பல்லாண்டு பல்லாண்டளவும் அதேயிடத்தில்தான் நிற்கப்போகிறது என்பதை பூஷணீகாரர் உணரமாட்டாதவரல்லர்.

27. அர்த்தமொன்றுமில்லாத சில வரிகளை யெழுதிவிட்டு, "ஏதே........ இதி சததூஷணீ பராஸ்தா" என்று பல விடங்களில் எழுதுகிறார். அவ்விடங்களெல்லாம் நியமேந பாமரப்ரதாரணமேயொழிய பண்டிதரஞ்ஜகமன்று என்பதை ஒவ்வொரு பண்டிதரும் அநாயாஸமாக அறிந்துகொள்ள முடியும். 'இவர் உபபாதிக்கும் விஷயமென்ன? அதனால் சததூஷணீ ஸூக்திக்கு எவ்விதமாக நிரஸநம் ஏற்படுகிறது?' என்பதை ஆராய்ச்சி செய்து உண்மையை யுணரவல்ல பண்டித பரிப்ருடர்கள் த்ரிமதஸ்தர்களிலும் இருக்கவில்லையா? பலர் இருக்கிறார்கள். இவர் நிரூபிக்கும் விஷயத்திற்கும், அதற்கு உபஷ்டம்பகமாக இவரெடுத்துக்காட்டும் மேற்கோள்களுக்கும் யாதொரு ஸம்பந்தமும் கிடையாதென்பதை ஒவ்வொரு வித்வானும் நன்கு ஆராய்ந்து அறியலாம். சுருங்கச்சொல்லில், வித்வான்கள் அயர்ந்து நித்திரை செய்கிறார்களென்றும், அவர்கள் துயிலெழவே மாட்டார்களென்றும் இவர் நினைத்திருக்கிறாரென்று திண்ணமாகச் சொல்லலாம்.

28. இதற்குச்சில விஷயங்கள் எடுத்துக்காட்டி நம்முடைய வார்த்தையை மெய்ப்பிக்கிறோம். உபதேசாநுபபத்திவாதமென்பது சததூஷணியில் முப்பத்துநான்காவது. அதற்கு சதபூஷணியில் உபதேசாநுபபத்திவாத பரீக்ஷா என்பது முப்பத்தைந்தாவது. அதில் (பக்கம் 17-ல்) இவர் எழுதுகிறார் வஸ்துதஸ்து என்று தொடங்கி. அதில் இவர் கூறுவதாவது,

> பரப்ரஹ்மமொன்றுதவிர மற்றதெல்லாம் மித்யைதான் என்று தெரிந்துகொண்டவர்களான ஜீவந்முக்தர்களும் அவித்யாஸம்ஸ்காரம் அறாமல் தொடர்ந்துகொண்டிருப்பதனாலே பரஸ்பரம் குருசிஷ்யபாவ அபிநயம் நடந்துவருவதாக சாந்தோக்யம் ப்ருஹதாரண்யகம் முதலிய ச்ருதிகளில் விசேஷமாகக் காணப்படுகிறது—என்று.

உபதேசாநுபபத்திவாதத்திலே ஸ்வாமி தேசிகன் முடிவாக அருளிச் செய்திருப்பது என்னவென்றால் "வாஸ்தவமான ஜீவபேதத்தையும் ஜீவேச்வரபேதத்தையும் ஒப்புக்கொள்ளாதவர்களுக்கு மோக்ஷார்த்த உபதேசாதி ப்ரவ்ருத்தி ஸம்பவிக்கமாட்டாது" என்று அவிசால்யமாக நிரூபித்துத் தலைக்கட்டியிருக்கிறார். அந்த வாதத்தைப் பரீக்ஷிக்கப்புகுந்த பூஷணீகாரர்—உலகில் காண்கிற குருசிஷ்யபாவம் அபிநயமாத்ரமென்று சாந்தோக்ய ப்ருஹதாரண்யகாதிகளில் பஹுளமாகத் தெரியவருகிறதென்கிறார். இந்த வார்த்தையினால் ஏமாறக்கூடியவர் யார்? என்பதை ப்ராமாணிகர்கள் பராமர்சிக்கவேணும். தாம் சொல்லுகிற விஷயத்திற்கு ஆணித்தரமாகவன்றோ

ஆதாரம் காட்டவேண்டும். ஆசார்யன் சிஷ்யனுக்கு உபதேசிப்பது அபிநயரூபமேயொழிய பாரமார்த்திகமன்று என்பதை இவர் ஸப்ரமாணமாக நிரூபிக்கவேண்டுமே. "சாந்தோக்ய ப்ருஹதாரண்யகாதி ச்ருதிகளில் பஹுளமாகக் கிடைக்கிறது" என்றெழுதிவிட்டால் இவருடையவாக்கை வேதவாக்காக உலகங் கொள்ளுமென்று நினைக்கிறார்போலுமிவர்.

29. இதற்குமேல் ஒரு அதிசயம் கேளீர்; (பூஷணியில் அதே யிடத்தில்) கிம் பஹுநா? *அஸ்தாநஸ்நேஹகாருண்ய தர்மாதர்மதியாகுலம், பார்த்தம் ப்ரபந்நமுத்திச்ய சாஸ்த்ராவதரணம் க்ருதம் * என்று கூறியிருக்கிற பகவத்யாமுநசார்யர் [ஆளவந்தார்] வாஸுதேவனுக்கும் அர்ஜுநனுக்கும் ஏற்பட்டிருந்த குருசிஷ்யபாவமும் வ்யாஜேனைவ என்று காட்டுகிறார்" என்று கூசாமல் எழுதியுள்ளார். பகவத்யாமுநாசார்யருடைய கீதார்த்த ஸங்க்ரஹத்திலுள்ள * அஸ்தாநஸ்நேஹகாருண்யேத்யாதியான அந்த ச்லோகத்தில் இவர் சொல்லுகிற விஷயம் வர்ஷசதமானாலும் இவரால் நிரூபிக்கமுடியுமா? அஸ்தாநே ஸ்நேஹத்தாலும் அஸ்தாநே காருண்யத்தாலும் தருமத்தில் அதர்ம புத்தியாலும் வியாகுலதையை யடைந்தவனாய் * சிஷ்யஸ் தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் * என்று அடி பணிந்தவனை அர்ஜுநனை யுத்தேசித்து கீதா சாஸ்த்ரம் அவதரிப்பிக்கப்பட்டது—என்னுமிவ்வளவே இந்தச்லோகத்திலுள்ளது. "ஸ ஏவ ஶ்ரிய:பதி: நாராயண: வாஸுதேவோ ஜகத் [illegible] ஶிஷ்யத்வேந வ்யாஜேந வேதார்த்தமுபாதிஶத்" என்று இவரெழுதுவது பரப்ரதாரணமா? ஆத்ம ப்ரதாரணமா? என்பதை மத்யஸ்தர்கள் விமர்சிக்கவேணும்.

30. 'வ்யாஜேந' என்கிற சொல் இருந்தாலுங்கூட இவர்க்கு யாதொரு பலனுமில்லையே. கீதாபாஷ்ய அவதாரிகையில் "பாண்டுதநய யுத்தப்ரோத்ஸாஹந வ்யாஜேந பரமபுருஷார்த்தலக்ஷண மோக்ஷஸாதநதயா வேதாந்தோதிதம் ஸ்வவிஷயம் ஜ்ஞாநகர்மாநுக்ருஹீதம் பக்தியோகம் அவதாரயாமாஸ" என்று பகவத்பாஷ்யகாரர் அருளிச்செய்திருப்பது ப்ரஸித்தம் இங்கு "யுத்தப்ரோத்ஸாஹநவ்யாஜேந" என்றிருப்பது கொண்டு இவர் என்ன ஸாதிக்கமுடியும். "அர்ஜுநாய உபதேசவ்யாஜேந" என்றிருந்தால்தான் என்ன ஸாதிக்கமுடியும்? குடாகேஶ: [illegible] கோவிந்த [illegible] என்ற கதையாகவன்றோ இருக்கிறது. கிம் பஹுநா? அஸ்தாநஸ்நேஹத்யாதியை இவர் எடுத்துக்காட்டியிருப்பதானது ஆளவந்தார் ஸ்ரீஸூக்தியையும் தாம் பார்த்திருப்பதாகக் காட்டுவதற்கேயாகுமத்தனை. வாஸுதேவன் அர்ஜுநனுக்கு ஆசார்யனாய் நின்று உபதேசித்தது பாரமார்த்திகமன்று என்று ஸ்தாபிக்க இவர்களிடத்தில் யாதொரு ப்ரமாணமுமில்லை.

31. சததூஷணியில் மேற்கூறிய உபதேசாநுபபத்திவாதத்தின் உபக்ரமத்தில் பரமாத்புதமான வொரு பத்யரத்நம் உள்ளது; அதாவது

ஹுயஉ-வஉ-ுவெஹுதூஉ ‚ -ுவெொ௱கஉ-ுவி நிஙி ுவெதஃ
உவதிஶதி யஹுயூஂ வயூஂ ஷ தாஉவஸீ ஃ தாழ ।
ஜ ந நவஉவீயா தாயாதஶ ஊவ ஹுா௱ா ௰ ஶியஂ
ஜ நயத-ு ஷ ஒெ ஒெவஃ ஸ்ரீஜ௱ஹ ய நஂஜயஷா௱ாயிஃ ॥

என்று. இதனால் அந்த வாதத்தின் ஸாரார்த்தம் வெகு அற்புதமாக ஸங்க்ருஹீதமாயிற்று. இங்ஙனே ஒரு ச்லோகமாவது இயற்றக் கற்றிருந்தாலல்லவோ சததூஷணீபரீக்ஷணத்தில் கைவைக்கலாம். இது கிடக்கட்டும். ஆங்காங்கு சததூஷணீ பங்க்திகளை உதாஹரிக்குமிவர் உள்ள வாக்கியங்களை விட்டிட்டும், இல்லாத வார்த்தைகளை ஸ்வேச்சயா சேர்த்துக்கொண்டும் மாறுபடுத்தியும் ஸ்ரீஸூக்தி சரீரத்தைச் சிந்நபிந்நமாக்கி எடுத்துக்காட்டுகிறார். இது மிகவும் வெறுக்கத்தக்க அப்ராமாணிக பத்ததியல்லவா? இதை நாம் விசதமாக நிரூபிக்கிறோம்.* காண்மின்.

32. ப்ரஸ்துதமான உபதேசாநுபபத்திவாதபரீக்ஷையில் உபக்ரமத்தில் "பகவாந் புருஷோத்தம:" என்று தொடங்கி சததூஷணீ ஸ்ரீஸூக்திகளை உதாஹரித்திருக்கிறார். சததூஷணியைக் கையில் வைத்துக்கொண்டு யார் ஒத்திட்டுப்பார்க்கப் போகிறார்களென்கிற எண்ணத்தினால் மனம்போனபடியெல்லாம் உதாஹரித்துள்ளார். இவருடைய வாக்யராசிபோலவே அசடு பிசடாகவும் அநந்விதமாகவும் சண்டபடியாலே, இப்படிப்பட்ட அசட்டுப் பங்க்திகளை ஸ்வாமி தேசிகனா எழுதியிருக்கிறாரென்று பார்க்கத்தோன்றி சததூஷணியை எடுத்துப் பார்க்கும்போது இவருடைய விஷமச்செயல் விளம்பரம் பெற்றதாகிறது. மேலே காட்டிய "பகவாந் புருஷோத்தம:" இத்யாதி வாக்யராசியில் "நிவிஜஜஹஉ-ுஜிஜீவிஷயா—நிகிலஜகதுஜ்ஜிஜீவிஷயா" என்று காட்டியுள்ளாரிவர். இது இங்குப் பொருந்தாது. உஜ்ஜீவிதுமிச்சா—உஜ்ஜிஜீவிஷா. உஜ்ஜீவயிதுமிச்சா—உஜ்ஜிஜீவயிஷா. ப்ரக்ருதத்தில் கர்த்தா புருஷோத்தமனுகையாலே அவனுக்கு உஜ்ஜிஜீவயிஷா ஸம்பவிக்குமேயல்லது உஜ்ஜிஜீவிஷா ஸம்பவியாது. ஆகவே "நிகிலஜகதுஜ்ஜிஜீவயிஷயா" என்பதுதான் பொருந்தும். தேசிகன் ஸாதித்தது அங்ஙனமேதான். அதை இவர் தம்முடைய ஞானத்திற்குத் தக்கபடி விபரீதமாக்கி யெழுதியுள்ளார். இச்சிறு விஷயம் கிடக்கட்டும். நாம் இங்கு இதை ப்ரதாந விவக்ஷிதமாகக் கொள்ளவில்லை. ப்ரதான விஷயத்தைக் கேண்மின்.

33. அவ்விடத்தில் தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகள்—'நஅ ய-ுஷஹீஷூா ஆயெ-ுஷவி உயஉெவ ரீதிரிதி வகூ-ுஶகூழ; வ௱வெொூவாஹாவெ ந வொாய-ுகஷ௱ஷி ஒெஃ। ஃ-ுஃவஉயவெ ந கெவஞ ஷூாய ுகஷாயொ௱ாகீ." என்றிருக்கின்றன. இந்த

பங்க்திகளையன்றோ முக்கியமாக எடுத்துக்காட்டி இவர்கள் பதில் சொல்லவேண்டும். உள்ள பங்க்திகளை யொளித்திட்டால் என்னாகும். உள்ள பங்க்திகளையும் அநாவச்யகத்வ புத்தியினால் விட்டுவிடலாமாகையாலே அப்படி விட்டிட்டோமென்று இவர்கள் சொல்ல வரலாம். அப்படிப்பட்ட விடங்களில்..........இவ்விதமாக ஸிஜ்ஞாஸம் நிவேஶநம் ஆவச்யகம். இதுதான் ப்ராஜ்ஞாக்ருத்யை.

34. அவ்விடத்திலேயே மேலே (பக்கம் 14 ஆரம்பத்தில்) ஏதேந என்று தொடங்கிப் பதினான்குவரிகள் சததூஷணீ ஸ்ரீஸூக்திகளை யெடுத்துக்காட்டி "இதி சததூஷணீ வ்யாக்க்யாதா" என்றெழுதியுள்ளார். இங்கு இடையிடையே பங்க்திகளை விட்டிட்டிருக்கிறார். "உபஜீவ்யஸ்வ வ்யுத்பத்தி விரோதேந ஸாமாநாதிகரண்ய ப்ரஸாதகஸ்வைகாஶ்ரயாத்" என்றதற்குப்பிறகு "தத்வ்யுத்பத்தி விரோதஸ்வாஸ்த்யேவ ச ஸாமாநாதி கரண்யவாக்" என்கிற ஸ்ரீ ஸூக்தியை விட்டிட்டார். அடுத்தபடியாக "ஸம்ஸ்க்ருதமித்யம்" என்றதற்குப்பிறகு "ஸம்ஸ்க்ருதேவஶிஷ்டஸ்யஶிஷ்டவ்யம்" என்கிற பங்க்தியை விட்டிட்டார். இப்படி நாம் எவ்வளவு எடுத்துக்காட்டுவது? இவ்விடங்களில் இவர் என்ன பதில் சொல்லுவரென்றால் "எடுத்துக்காட்டவேணுமென்று எனக்குத்தோன்றிய பங்க்திகளை மட்டும் காட்டினேன்; என்புத்தியினால் ஆவச்யகமல்லாதவற்றை விட்டிட்டேன்" என்பர். இதை 'துஷ்யது' என்று ஒப்புக்கொண்டாலும், இங்கே பங்க்திகளை விட்டிட்டேன் என்று சிறுகுறிப்புக்காட்டாத தவறு தவறே. பதினைந்து வரிகளும் இருபது வரிகளும் எடுத்துக்காட்டுமிவர் இடையில் ஒன்றிரண்டு வரிகளை விட்டிடுவது விப்ரலம்பமேயாகும். ஸர்வாத்மநா தம்மால் விடைகூற இயலாத பாகங்களை விட்டிடுகிறாரென்பதுதான் உண்மையாகத்தேறும்.

35. இன்னமுமொருவிநோதம் கேண்மின்; மேலே குறித்த இடத்தில்— "ஏதேந ....உபயமபி பூர்வோக்தைரேவ தூஷணைராதூஷிதமிதி சததூஷணீ வ்யாக்க்யாதா." என்கிற வாக்யராசியில் "நஹி வ்யுத்பத்திவிரோதேந வ்யுத்பத்த்யந்தரஹேதும் வ்யுத்பத்தி விரோதோஹி உந்நேதும் ஸாத்யதே" என்கிற வாக்யமும் சேர்ந்தே யிருக்கின்றது. இந்த வாக்யத்தையும் உட்படுத்தியே சததூஷணீ பங்க்திகளை யுதாஹரித்து "இதி சததூஷணீ வ்யாக்க்யாதா" என்று முடித்தார் பூஷணீகாரர். இங்கே 'வ்யாக்க்யாதா' என்றதற்கு என்ன அர்த்தமோ? எப்படி வ்யாக்க்யாதமாயிற்றோ? ஏதேந என்றதற்கும் வ்யாக்க்யாதா என்றதற்கும் என்ன ஸம்பந்தமோ? இந்த விசாரங்கள் கிடக்கட்டும். அடுத்தபக்கத்தில் மறுபடியும் "ஏதேந— நஹி வ்யுத்பத்திவிரோதேந வ்யுத்பத்த்யந்தரஹேதும் வ்யுத்பத்திவிரோதோஹி உந்நேதும் ஸாத்யதே இதி ஶததூஷணீ வ்யாக்க்யா" என்றெழுதப்பட்டுள்ளது. இதற்குமேல் "ஸத்ரூபம் விசாரணீயம்" என்று ஆரம்பித்து எழுதியிருப்பது கீழே 'பராஸ்தா' என்றதற்குப் பின் இருக்கத்தகாதது. இப்படிப்பட்ட விஷயங்களை நிபுணநிரூபகர்களான வித்வான்கள் நிஷ்பக்ஷபாதர்க

ளாய் சோதிக்கப்புகுந்தால் இப்படியும் ஒரு க்ரந்தமுண்டா? என்று ஹஸிக்கவே நேரும். ஏதோ பெரிய விஷயத்தைத் தாம் நிரூபித்து விட்டதுபோலக் காட்டி "ஏதேந சததூஷணீ பராஸ்தா" என்றெழுதுகிற ஸ்ரீமத் காம்பீர்யம் அதிசயிக்கத்தக்கது.

36. ஜீவேச்வரைக்ய பங்கவாத பரீக்ஷையில் (பக்கம் 67-ல் "ஏதேந........... சததூஷணீ வ்யாக்யாதா; உத்தோத்தரத்வாத்" என்று எழுதப்பட்டிருக்கின்றது. இங்கு விஷயத்தினுள்ளே புகுந்து தெரிவிக்கவேண்டியவை பலபலவுண்டு; அவை வேறுபரிச்சேதத்தில் விரிவாகத் தெரிவிக்கலாகும். "சததூஷணீ வ்யாக்யாதா, உத்தோத்தரத்வாத்" என்கிற இந்த அஸமஞ்ஜஸவாக்ய விந்யாஸத்தை மட்டும் இங்குக் குறிக்கொள்விக்கிறோம். "சததூஷணீ பராஸ்தா" என்றோ "சததூஷணீ உத்தோத்தரா" என்றோ இருக்கலாம். இப்போதிருக்கிற விதம் சாஸ்த்ரஜ்ஞர்களுக்கு அபஹாஸாஹம். ஒரு உத்தரமும் எழுதாமல் 'உத்தோத்தரத்வாத்' என்றெழுதியது பெருத்த விப்ரலம்பம் – என்னுமதுவும் பரிச்சேதாந்தரத்தில் ப்ரபஞ்சிதமாகும்.

37. ஒருவர் "ஸம்ஹாரீ ஸ: வஸதி: ஶிவஶ்ரீ உவெஹஸர உசுநெஙு * விஷ்ணுநாராயண: க்ருஷ்ண இதி வராஹஷ்ஷ | * ஶிவா ஹவாநீ ருத்ராணீ உசுநெஙு * லக்ஷ்மீ: வஷ்ராஷ்ய வஷ்ர இதி வராஹஷ்ஷ" என்று இப்படியே க்ரந்தமெழுதிக்கொண்டு போனாராம். கிம் கநிஷ்ட: கிம் ஜ்யேஷ்டஸ்ஸஹோதரயோர்வ்ருணிதோ தாதஃ? என்ன வேண்டுமத்தனை. வஷராகாரெ கும்பாரம் ஸுக்ஷம்ஸஹராக; வாதநெவொக்தம் *ஸுக்தம் வாரயாஸிதி | இத்யாதிகளும் நினைவுக்கு வருகின்றன.

38. முந்தின ப்ரகரணத்தில் மற்றொன்றும் எழுதியுள்ளார் "ஸ்ரீபாஷ்யகாரை: கீதாபாஷ்யே" என்று தொடங்கி. இங்கு இவர் சொல்லுவதாவது—* ந த்வேவாஹம் ஜாது நாஸம் * என்கிற கீதாச்லோகத்தின் பகவத்ராமாநுஜ பாஷ்யத்தில் "ஸமவதோ வாஸுதெவஸ்ய உவதெஷ்ருக்ஷா நுவலொர்த்திரெஙெதஜெதெ" என்று பங்க்தியிருப்பதாகவும், அது வேராற்றுவிட்டதென்று சததூஷணியே ஸூசிப்பிக்கின்றதாகவும். "...........உதஹ்ரதி ஸாஷிதம் அஜ்ஞோதஷ்ணி ஸதூஷணீ வ்யம்ஸோஜயதி" என்றெழுதியிருக்கிறார். இவர் எடுத்துக் காட்டியுள்ள பாஷ்யபங்க்தி பகவத்ராமாநுஜ கீதாபாஷ்யத்தில் காணக்கிடைக்காது. இவராகக் கல்பித்த வாக்யமிது. இதற்கு மேல் இவர் என்ன சொல்லுவரென்னில்: 'நான் தாத்பர்யாநுவாத ரூபமாக எழுதினதேயொழிய யதாவஸ்தித சப்தாநுவாதமன்று' என்பர். அப்போது "கீதாபாஷ்யே பாஷிதம்" என்று இவரெழுதியிருப்பது அஸாதுவென்று இசையவேண்டும்.

39. கீதாபாஷ்யத்தில் அவ்விடத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்திருப்பதை இவர் உள்ளபடி க்ரஹிக்கவல்லவரல்லர்; க்ரஹித்திருந்தால் "கீதாஸாஷ்யே........

ஹாஷிதம் அபிஜ்ஞைரிதி ஶததூஷணீ ஸ்வயமேவாஹ இதி" என்று எழுதியிருக்கவே மாட்டார். வ்யாமோஹ சூர்ணப்ரயோக ரூபமாக எழுதிவைக்கத் தடையுண்டோ வென்று சிலர் கேட்கலாம். அதற்குத் தடையேயில்லை. இவர் எழுதிவைத்திருப்ப தெல்லாம் அப்படியேதான் என்பதை நமது வஜ்ரகுடாரம் விரிவாக நிரூபித்தேதீரு கிறது. ப்ரஸ்துத கீதாபாஷ்யத்தில் ஸ்வாமி ராமாநுஜர் அநுக்ரஹித்திருப்பது மிக விரிவானது. அதை உள்ளபடி தெரிந்துகொள்ளவேண்டுவது விவேகிகளுக்கு மிக வும் ஆவச்யகமாதலால் இங்கு நாம் விரிவுக்கு அஞ்சாமல் அவ்விஷயங்களை அப்படியே அநுவதிக்கிறோம்.

40. கீதை இரண்டாவதத்யாயம்—பன்னிரண்டாவது ச்லோகம்—

* ந த்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே நராதிபா:
ந சைவ ந பவிஷ்யாமஸ் ஸர்வே வயமத: பரம். *

அநாதியாய் வருகிற இக்காலத்தில் இதுவரையில் ஒரு க்ஷணமுங்கூட நானும் இல்லாமலில்லை; நீயும் இல்லாமலில்லை; இந்த அரசர்களுமில்லாமலில்லை. இனி யும் (அப்படியே) நாமொருவருமிராமற் போகிறோமென்பது மில்லை. எல்லோரும் எப்போது மிருப்பவர்களே. இதனால் ஸர்வேச்வரனை நான் எப்படி நித்யனென்ப தில் ஸந்தேஹமில்லையோ அப்படியேதான் ஜீவர்களான நீங்களும் நித்யர்களென்பதில் ஸந்தேஹமில்லை யென்று தெரிந்துகொள். [இது ச்லோகார்த்தமருளிச்செய்தபடி.] இதற்குமேல் விரிவான விஷயம்; – இங்கே அஜ்ஞானத்தாலே மயங்கிக்கிடந்த அர்ஜுநனுக்கு அந்த அஜ்ஞானம் தீருகைக்காக யதார்த்தமான ஆத்மாவினுடைய நித்யத்வத்தை உபதேசிக்கிற ஸமயத்தில், 'நான், நீ, இவர்கள்' என்று பிரித்தருளிச் செய்ததைப் பார்த்தால், ஸர்வேச்வரனுக்கும் ஆத்மாக்களுக்கு முண்டான பரஸ்பர பேதமும் ஆத்மாக்களுக்குள் ஒருவருக்கொருவர் உண்டான பேதமும் ஸத்யமேயொழிய கல்பிதமல்லவென்று எம்பெருமானே அருளிச்செய்ததாகத் தெரியவருகிறது. இங்கே சிலமதஸ்தர்கள் சொல்லுவதாவது—இந்தபேதம் உபாதிவசத்தால் வந்ததாகையாலே உண்மையாகமாட்டாதென்று; அது பிசகு. ஏனெனில், அப்படிபேதம் தத்வமாகாத பக்ஷத்தில், அதை தத்வோபதேசஸமயத்தில் உபதேசிக்கக் கூடுமோ? அப்படி உபதேசித்தமையாலேயே இது தத்வமென்பதில் ஸந்தேஹமில்லை. மேலும் இப்படியே வேதமுஞ்சொல்லுகிறது. * நித்யோ நித்யாநாமித்யாதி.

இதற்குமேல் மாயாவாதிகள் – பரமபுருஷன் அஜ்ஞாநத்தால் காணப்படும் பேதத்தைக்கண்டு அதை உபதேசித்தானென்பர்கள். அதுவும் பிசகு. பரமார்த் தத்தைக் காணவல்ல பரமபுருஷனுக்கு ஆத்மாவினுடைய யதார்த்த ஸாக்ஷாத்கார முண்டாகையாலே அஜ்ஞாநமும் அதின் காரியமும் ஒழிந்தபடியால் அஜ்ஞாநகாரிய

மான பேததர்சனமும் அதைப்பற்றிய உபதேசாதி வ்யவஹாரமு மெப்படிகூடும்? இனி, பரமபுருஷன் பாதிதாநுவ்ருத்தியாலான பேதஜ்ஞானத்தாலே சொல்லுகிறார்; பாதிதாநுவ்ருத்தியாவது — கானலைப்பார்த்து முதலில் நீரென்று ப்ரமித்த ஒருவனுக்கு 'இது நீரல்ல, கானலே' என்று தெளிவு பிறந்தபின்பும் அது நீர்போலவே தோற்றப் பெறுவதாம்; அதுபோல் ஈச்வரனுக்கு அபேதஜ்ஞானம் உண்டாயிருந்தபோதிலும் (பாதிதாநுவ்ருத்தி க்ரமேண) பேதஜ்ஞானம் சிறிதுகாலம் நடையாடுகிறது; ஆனால் அது வெந்த வஸ்திரம்போல அத்வைதஜ்ஞானத்தாலே பாதிக்கப்பட்டமையால் பந்தஹேது வாகமாட்டாது என்று சொல்லக்கூடும்; அதுவுஞ் சேராது. ஏனெனில், ஒருவனுக்கு இது கானலே யென்கிற தெளிவு பிறந்தபின், அது நீர்போல் தோற்றுமாகிலும் அவனுக்கு இது நீரல்ல வென்கிற நிச்சயமுண்டான பின்பு, அதை அவன் ஸ்நாந பாநாதிகளுக்காகக் கொண்டுவர முயல்வானோ? முயலான். அதுபோலவே இங்கும் அத்வைதஜ்ஞானத்தாலே பாதிக்கப்பட்ட பேதஜ்ஞானம் ஈசுவரனுக்கும் அநுவர்த்திப் பதாகச்சொன்னாலும் இந்த பேதம் பொய்யென்கிற நிச்சயம் அவருக்குண்டான பிறகு உபதேசம் முதலியவற்றில் ப்ரவர்த்திப்பரோ? ப்ரவர்த்திக்க மாட்டார். மேலும் ஈச்வரனுக்கு பாதிதாநுவ்ருத்தியென்பதே சொல்லத்தகாது; ஏனென்றால் — முதலில் அஜ்ஞானியாயிருந்து (சாஸ்திரஜ்ஞானத்தாலே) தெளிவுபிறந்தவனுக்கன்றோ பாதிதாநுவ்ருத்தி கூடுவது; ஈச்வரனை எக்காலத்திலாவது அஜ்ஞானியாயிருந்ததாகச் சொல்லப்போமோ? சொன்னால் ஸர்வஜ்ஞனாகச் சொல்லுகிற ச்ருதிஸ்ம்ருதிகள் விரோதிக்கமாட்டாவோ? மேலும் இங்கே அவர்களை ஒன்று கேட்கிறோம். அதாவது — பரமபுருஷனாகட்டும், இப்பொழுதுள்ள குருக்கள்தானாகட்டும், இவர்களுக்கு அத்வைத ஆத்மஸ்வரூப நிச்சயம் உண்டன்றோ? (அதாவது நானொருவனே ஸத்யம்; மற்றதெல்லாம் பொய் என்கிற நிச்சயம் உண்டல்லவா?) அதுண்டானபின்பு இவர்களுக்கு (பேதஜ்ஞானம் தொடர்ந்தாலும்) இவ்வித நிச்சயத்தை இவர்கள் யாருக்கு உபதேசிக்கிறார்களோ சொல்லவேண்டும். ப்ரதிபிம்பம்போல் காணப்படுகிற சிஷ்யர்களுக்குத்தானென்றாலோ, ஐயோ! அநுன்மத்தனாகிய [விவேகியான] புருஷன் எவனாகிலும், மணி, கத்தி, கண்ணாடி முதலிய நிர்மல வஸ்துக்களில் காணப்படும் தன்னுடைய ப்ரதிபிம்பங்களைப் பார்த்து (அவை, தன்னைக்காட்டிலும் வேறல்ல வென்றுதெரிந்திருக்க) அவற்றோடு ஒரு ஸங்கதியைச் சொல்லுவானோ? பித்தனன்றோ சொல்லுவன்? இது கிடக்கட்டும்; முதலில் அவர்கள் இங்கே பாதிதாநுவ்ருத்தியே சொல்லப்போகாது. ஏனெனில்! பாதகமான அத்வைத ஆத்மஜ்ஞானத்தாலே (அதாவது ஜீவனும் ப்ரம்மமும் ஒன்றுதானென்கிற ஐக்யஜ்ஞானத்தாலே) பேதஜ்ஞானத்தின் அநாதிகாரணமான (ஸாவரூப) அஜ்ஞானம் நசித்துப்போனபடியால் காரணமில்லாமையாலே காரியமுமில்லை; அதாவது ஸாவரூப அஜ்ஞான மில்லாமையாலே பேதஜ்ஞானரூபமான பாதிதாநுவ்ருத்தியுமில்லை; ஆகையால் பாதிதாநுவ்ருத்தியே

சொல்லத்தகாது. ஆனல் ஒருவனுக்கு ஒருகாலத்தில் திமிரம் முதலிய தோஷத்தாலே ஒரு சந்திரன் இரண்டு சந்திரன்போல் காணப்பட்டு, பிறகு ஆப்தனுகிய மற்ெருருவன் வார்த்தையினுல் இது ஒன்றுதானென்கிற நிச்சயம் பிறந்தாலும், இரண்டென்கிற தோற்றம் தொடர்ந்தேவருகிறதன்ரூே? அப்படித்தானிங்கும் அத்வைதஜ்ஞாந முண்டானபோதிலும் பேதஜ்ஞாநம் தொடருகிறதென்ருல், அங்கே இரண்டென்கிற தோற்றத்துக்குக்காரணமுண்டு; திமிரம் முதலிய காரணம் ஒன்றென்கிற எண்ணத் தாலே அழியமாட்டாதன்ரூே? ஆகையால் காரண முள்ளவரையில் காரியம் தொடரக்கூடும்; (அதாவது அங்கே பாதிதாநுவ்ருத்தியென்பது கூடும்.) இங்கோ காரணமில்லை; ஏனெனில் பேதஜ்ஞாநமும் அதன் விஷயமும் அதன் காரணமும் உண்மையல்லாமையால் அவை உண்மையான அத்வைதஜ்ஞாநமுண்டான போதே நசித்துவிட்டதாகக் கொள்ளவேண்டியதாகையால் எவ்விதத்திலும் பாதிதாநுவ்ருத்தி யென்பதே கூடாது. ஆகையாலே ஸர்வேச்வரனுக்கும் இப்போதுள்ள குருபரம் பரைக்கும் தத்வஜ்ஞாநமுண்டாகில் பேததர்சனமும் அத்தால்வரும் உபதேசாதிகளுங் கூடாது; பேததர்சனமேயுண்டாகில், அஜ்ஞாநமும் அதன் காரணமு முண்டாயிருக் கையாலே அஜ்ஞாநிகளான இவர்கள் உபதேசிப்பதென்பது சிறிதும் சேராது.

அன்றியும் ஆத்மா ஒருவனேபரமார்த்தமென்று குருவுக்குண்டான நிச்சயத் தாலேயே, பிரம்மாண்டத்துக்குண்டான அஜ்ஞாநமும் (அந்த அஜ்ஞாநத்தால்வரும்) பிரபஞ்சமும் நசித்தபடியால் சிஷ்யனுக்கு உபதேசிப்பதில் பயனில்லை; [அதாவது — உபதேசத்துக்குப்பயன், அத்வைதஜ்ஞாநம் பிறந்து அத்தால் அஜ்ஞாநமும் அத்தால் வரும் பிரபஞ்சமும் ஒழிந்து போகை; அவை குருவுக்குண்டான நிச்சயத்தாலேயே ஒழிந்துபோனபடியால் இனி யெந்தபயனைப்பற்றி உபதேசிப்பதென்பதாம்.] இதற்கு மேல் ஆசாரியனும் அவன் ஞானமும் கல்பிதமாகையால் பேதஜ்ஞாநத்தை யொழிக்க மாட்டாதென்ருல் அப்பொழுது அந்த நியாயத்தைக் கொண்டே சிஷ்யனும் அவன் ஞானமும் கல்பிதமென்று கொள்ள வேண்டுமாகையால் அதுவும் பேதஜ்ஞாநத்தைப் போக்க மாட்டாது. கல்பிதமானுலும் முந்திய பேதஜ்ஞாநத்துக்கு விரோதமா யிருக் கையாலே போக்கலாமென்ருல், அது ஆசாரியஜ்ஞாநத்துக்கே யுண்டாகையால் எவ் விதத்திலும் உபதேசம் வ்யர்த்தமேயாம். இப்படிப்பட்ட அஸங்கதமான பிறாது வாதத்தை யிவ்வளவு நிரஸித்தது போதும். [இவ்வளவும் கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தி களின் மொழிபெயர்ப்பு.] பூஷணீகாரர் இதற்கு வாய்திறக்க வுண்டோ வழி?

41. இந்தப்ரகரணத்தில்— "ததா ச—*பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந। தாந்யஹம் வேத ஸர்வாணி ந த்வம் வேத்த பரந்தப॥* இதி." என்றெழுதியுள்ளார். * பஹூநிமே வ்யதீதாநி என்கிற இந்த ச்லோகம் எந்த அம் சத்திற்கு ப்ரமாணமாக எடுத்துக்காட்டப்படுகிறதென்று ப்ராமாணிகர்கள் பார்க்க

வேணும். ‘‘ஸஹவாஸுஹி வாஸுதேவ: ஸ்வஹிதகஜந்மநம்வ்யாவஹாரிகமேவ உச்யா உபதிஷ்டதி......’’ என்று கீழே எழுதியுள்ளாராதலால் அந்த அம்சத்திற்குத்தான் இது ப்ரமாணமாக விவக்ஷிதமென்னவேணும். அந்தோ! * தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே * என்கிற கீதையின் முதல் ச்லோகத்தையே இதற்கு ஆதாரமாக எடுத்துக் காட்டலாமே. அதற்கும் முன்னேயிருக்கிற * த்ருதராஷ்ட்ர உவாச * என்பதையே காட்டியிருக்கலாமே. நாலாவதத்யாயத்திலே தேடி எடுத்துக்காட்டவேண்டிய ப்ரயாஸமெதற்கோ? இதை நன்ருக ஆலோசிக்கவேணும்.

42. * பஹூநி மே வ்யதீதாநி * என்ற ச்லோகத்தினுண்மைப் பொருளை நண்பர்க்கு உணர்த்துவோம். நான்காவதத்யாயத்தின் தொடக்கத்தில் கீதாசார்யன் * இமம் விவஸ்வதே யோகம் * என்ருரம்பித்து ‘இந்த யோகத்தை இப்போது புதிதாக உனக்குச்சொல்லுகிறேனல்லேன்; மந்வந்தராதியிலேயே விவஸ்வானுக்குச் சொன்னேன்.........’ என்ருன். இதைக்கேட்ட அர்ஜுநன் இதை அஸம்பாவிதமாக நினைக்கக்கடவனல்லனுயிருக்கச் செய்தேயும் அஸம்பாவிதமென்றே நினைத்து *அபரம் பவதோ ஜந்ம பரம் ஜந்ம விவஸ்வத:, கதமேதத் விஜாநீயாம் த்வமாதௌ ப்ரோக்தவாநிதி.* என்று கேள்விகேட்டான். வாஸுதேவனுடைய உண்மை நிலையையறிந்தவனை அர்ஜுநன் இக்கேள்வியைக் கேட்கவே தகாது. ஆயினும் ஏன் கேட்டானென்று ஒவ்வொருவரும் விமர்சிக்கவேண்டும். பகவத் ராமானுஜர் தவிர மற்ற பாஷ்யகர்த்தாக்கள் யாரும் இந்த விமர்சத்தில் இறங்கவில்லை. இங்கு பகவத் ராமாநுஜ பாஷ்யத்தை ப்ராஜ்ஞர்கள் பார்க்கவேணும்; முடிவு பாகத்தைமட்டும் இங்குக் காட்டுகிறேன்.

‘‘ஸர்வேச்வரஸ்ய ஸர்வஜ்ஞஸ்ய ஸத்யஸங்கல்பஸ்ய அவாப்தஸமஸ்தகாமஸ்ய கர்மபரவசதேவமநுஷ்யாதிஸஜாதீயம் ஜந்ம கிமிந்த்ரஜாலவத் மித்யா? உத ஸத்யம்? ஸத்யத்வே ச கதம் ஜந்மப்ரகார:? கிமாத்மகச்சாயம் தேஹ:? கச்ச ஜந்மஹேது:? கதா ச ஜந்ம? கிமர்த்தம் ச ஜந்ம? இதி பரிஹாரப்ரகாரேண ப்ரச்நார்த்தோ விஜ்ஞாயதே.’’

என்பவை பகவத்ராமாநுஜ திவ்யஸூக்திகள். அர்ஜுநனுடைய கேள்விக்கு விடைகூறத்தொடங்கிய கண்ணன் முதன் முதலாக * பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந * என்ருன். இத்தால் பகவதவதாரத்தின் ஸத்யத்வம் தெரிவிக்கப்பட்டது. இவ்விடத்தில் ‘‘தவச ஜந்மாநி’’ என்று அர்ஜுநனுடைய ஜன்மங்களை த்ருஷ்டாந்தமாக்கிக் கூறியிருப்பது எதற்காகவென்பதை பகவத்ராமாநுஜரொருவரே குறிக்கொண்டு பாஷ்யமிட்டிருக்கிருர். ஒன்றையும் பாராதவர்கள், பார்த்தும் பொருளறியமாட்டாதவர்கள், பொருளறிந்தும் அபிநிவேசத்தாலே பிடித்தபிடி விடமாட்டாதவர்கள் ‘‘ப்ராயதிச ததா * பஹூநி மே........இதி’’ என்றெழுதுவதானது விலவறச் சிரிப்பதற்கே ஹேதுவாகும். எல்லாம் பத்ரபூரகவாக்யராசிகளத்தனை.

இரண்டாம் பரிச்சேதம் முற்றிற்று.

மூன்றாவது பரிச்சேதம்.

ஒரு குறிப்பு:—இந் நூலில் பரிச்சேதங்கள் பிரிக்கவேண்டியது அவச்யமன்று; ஆயினும் நாம் எந்த அபிப்ராயத்தினால் பரிச்சேதங்கள் பிரிக்கிறோமென்றால்; இந்த ஸார க்ரந்தத்தைப் பூர்த்தியாக வாசிக்க அவகாச மில்லாதவர்கள் ஏதாவது ஒரு பரிச்சேதத்தை மட்டும் வாசித்துப் பார்த்தாலும் சதபூஷணியானது ஸஹ்ருதய் ஹ்ருதயங்கமான்று என்பதை மிகவெளிதாக வுணரலாமென்று காட்டவே.

43. *சதபூஷணீ பூமிகையில் (பக்கம் 10-ல்) "நிகமாந்த தேசிகர் இயற்றிய சததூஷணியானது அத்வைதஸித்தாந்தத்தில் அறுபத்துநான்கு தூஷணங்களை, அதி கபீரமாயும் ப்ரஸந்ந கம்பீரமாயும் ஸர்வவசங்கரமாயுமுள்ள சைலியினால் ஸ்ரீ பாஷ்ய தாத்பர்ய விவரண வ்யாஜத்தாலே ப்ரஸ்தாவிக்கின்றது. அந்த எல்லா தூஷணங்களையும் யதாசக்தி பரிஹரிக்க ஆசார்யவர்ய சரணங்களை சரணமாகக் கொண்டும், ஆராத்ய தேவதையினிடத்தில் ஸர்வபாரங்களையும் ஸமர்ப்பித்தும் முயற்சி செய்யப்படுகிறது. சததூஷணியை தூஷிப்பதில் நமக்கு ஸம்ரம்பமில்லை; அதில் உத்பாவிதங்களான தூஷணங்களைப் பரிஹரித்து அத்வைதத்தை பூஷிப்பதில் மட்டுமே யதாசக்தி ஸம்ரம்பம்" என்றெழுதப்பட்டுள்ளது; மேலே பக்கம் 31-ல் எழுதியிருப்பதாவது—*

> *ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்களான ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் முதலான மஹாத்மாக்களால் பரீக்ஷிக்கப்படாத சததூஷணியானது க்ஷுத்ரனும் அல்பஜ்ஞனுமானவனால் பரீக்ஷிக்கத்தகாதது என்றும், அதைப்பரீக்ஷிப்பதில் ஸாஹஸத்தை யவலம்பித்த நான் ஜாகரூகனாயிருக்கவேண்டு மென்றும் சிறந்த நண்பர்களினால்...........பலாத்காரமாகத் தடை செய்யப்பட்டிருந்தும் தெரிவிக்கப் பட்டிருந்தும் நான் இந்த ஸாஹஸத்தில் இறங்கினேன்— என்று.*

இதற்கு மேல் எழுதியிருப்பதென்ன வென்றால், மித்ரமணிகளை ஆதரவோடு ப்ரார்த்திக்கிறேன்; ஸஹோஹாபிநிவேசத்தை விட்டொழித்து குண தோஷவிவேசனம் செய்து அகிஞ்சநனை யென்னை ஸௌஹ்ருத்பாவத்தாலே தயையுடன் அநுக்ரஹிக்க வேணும் — என்னை யறிந்தோ அறியாமலோ ஸம்பவிக்கக் கூடியனவும் ஸம்பவித்திருப்பனவுமான தோஷங்களை யெடுத்துக்காட்டி யுணர்த்தவேணும்— என்று.

பூஷணீகாருடைய மித்ரமணிகளில் நான் தலைவனாகையாலே அல்லது ஒருவனாகையாலே அவருடைய வேண்டுகோளுக்கிணங்கியே, சதபூஷணியில் ஸம்பவித்திருக்கிற நாநாவித தோஷங்களை ஆர்ஜவத்துடன் எடுத்துக்காட்டி உணர்த்தி வருகின்றேன்.

44. சதபூஷணியிலுள்ள சப்தங்களையும் அர்த்தங்களையும் ஆழ்ந்து பரீக்ஷிக்க நாம் ப்ரவர்த்தித்திருக்கிறோமென்பதை உலகமெல்லா முணர்ந்திருக்கின்றது. ஏதோ மாத்ஸர்யத்தாலே நாம் இதில் ப்ரவர்த்தித்ததாக ஒரு வித்வானும் நினைக்கவும் சொல்லவு மொண்ணாதபடி நாம் விஷயநிரூபணம் செய்துவர பகவத்ஸங்கல்பம் வாய்த்திருக்கின்றது. பூஷணீகாரர் தம்முடைய பூமிகையின் முடிவில் எழுதியிருக்கிறார் — "இந்தபூஷணியை விரைவில் வெளியிட வேணுமென்கிற எண்ணத்தினால்..........." இத்யாதி. இதனால் நன்றாகத் தெரிந்துகொள்ளக்கூடியது என்னவென்றால், சததூஷணியானது கண்டிக்கப்பட்டுவிட்டதென்கிற ப்ரஸித்தியை வெகு சீக்கிரமாகவே அடைய வேணுமென்கிற எண்ணமொன்றே இவர்களுக்கு இருந்ததாக. தம்முடைய க்ரந்தம் பலவகைப்பட்ட அவத்யங்களினால் ஜடிலமென்பதைத் தாமே யுணர்ந்திருப்பதுடன் ஆப்த மித்திரர்களும் தெரிவிக்கத் தெரிந்து கொண்டதாகத் தாமே க்ரந்தத்தில் பொறித்திருக்கிறார். மிகச்சிறந்த வித்வந்மணிகளைத் துணைகொண்டு இந்த சதபூஷணீ ப்ரகாசநத்தை இவர்கள் செய்திருந்தால் இந்த க்ரந்தத்திற்குச் சிலமாதங்களாவது ஜீவநாத்ருஷ்ட மிருந்திருக்கும். ஒவ்வொருவரியையும் நாம் ஆராய்ந்து நூல்விரிவுக்கு அஞ்சாமலும் முத்ரணச் செலவுகளை லக்ஷியம் பண்ணாமலும் அவத்யப்ருந்தங்களை யெடுத்து வெளியிடுவோமானால் மஹாபாரதத்திற்கும் மேலாகுமென்பதில் ஐயமில்லை. நம்முடைய வஜ்ர குடாரம் வெளிவந்திருக்கிறவரையில் அதை ஊன்றி வாசித்துப் பார்த்த வித்வான்கள் [ஸகல மதஸ்தர்களும்] நேரில் சொல்லுவதும் கடிதங்கள் மூலமாகத் தெரிவிப்பதும் என்னவென்றால் 'பூஷணீகாரர்களை ரக்ஷிப்பதற்கு பூமண்டலத்திலுள்ள வித்வான்கள் யாவரும் ஒன்றுகூடினாலுமாகாது' என்பதே. பூஷணியிலுள்ள அவத்யங்களைக் கண்டிப்பதா? பரிஹஸிப்பதா? என்று ஆலோசித்துப் பார்த்ததில் 'இரண்டும் வேண்டா; சோகிப்பதே உரியது' என்றுதான் முடிவு செய்ய வேண்டியதாகிறது. அளவுகடந்த அவத்யங்களை ஏககாலத்தில் எடுத்துக் காட்ட வேணுமென்கிற உத்கண்டை உதிக்கின்றது. வா அ: கூ உவதி-ஃஙாகஃ அது முடியாத காரியமன்றோ. மிக முக்கியமாக முதலில் எடுத்துக்காட்டக்கூடிய அவத்யம் எது வென்று பார்த்தாலோ ஒவ்வொன்றும் நான்முன்னே நான்முன்னே யென்று தானே முந்திக்கொள்ள முயல்கின்றது. உண்மையில் ஒவ்வொன்றும் ப்ரதம ஸ்தானத்திற்கு அர்ஹமேயானாலும் ஒவ்வொன்றாகத்தானே காட்டியாகவேண்டும். அப்படியே க்ரமேண காட்டுகிறோம்.

45. பூஷணீகாரர் பூமிகையை முடித்துவிட்டு பூமிகாசேஷமு மொன்று எழுதியிருக்கின்றார் "யத்கிஞ்சித் ப்ராப்தகாலம்" என்று தொடங்கி. இதில் "ஐஃஉத்ரு விவிஅரிதாழ" என்றாரம்பிக்கும் பாராவில்

"......ஸ்யம் ய்வாஞஉாத-ஞ்ஞ: ஸஸம்ஈம்ஸம் ஃஞீஉயதி. கிம் நிசெத்ரு யஉ-யஉ-ஞ்ஞரு வரயக்ஷிஸெ உரஷ அஎெ ஶ்ரு-தஆஎெவா ஸ்ரீஸாஷ்யஸிஊாஞாஃ நஶ்ரு கஃ-த்ராவி."

என்றெழுதியுள்ளார். ந தாவத் பதஸம்ஜ்ஞாவாக்யாபி: ஸதூஷணீகாரஸ்ய தாத்பர்ய நிர்த்தாரகத்வம் விவக்ஷிதம் உதாஹோ [illegible] உதாஹோ? என்று கேட்கவேண்டியது தவிர வேறுண்டோ? “யத்ர யத்ர ப்ரணீ ஸமுபஸ்யதேஸ்ம” என்கிற விதில் பதவிபாகம் செய்ய வேணுமென்றுல் ஒவ்வொரு வித்வானும் ‘தர்மதர்மிணி’ என்று ஹ்ரஸ்வாந்தமாகத்தான் பதவிபாகம் செய்வர்களென்பதில் யார்க்கேனும் ஸந்தேஹமுண்டோ? பூஷணீ காரரோ வென்னில் தர்மதர்மிணீ என்று தீர்க்காந்தமாகவே விவக்ஷிக்கக் கடமைப் பட்டிருக்கிருர். இங்கு த்விவசநாந்த விவக்ஷயே உள்ளதென்று மற்றபதங்களினுல் ஸ்பஷ்டமாகத் தெரிவதால் தர்மதர்மிணி என்று ஹ்ரஸ்வாந்தமாகக் கொண்டால் நிரர்த்தக மாகுமன்றே. தர்மமும் தர்மியுமாகிற இரண்டையும் சேர்த்து த்வந்த்வ ஸமாஸமாக்கி யிருக்கிருர். லகு கௌமுதியாவது, அதில் ஸந்திப்ரகரணம் மட்டுமாவது வாசித்திருந்தால் * [illegible] * என்கிற ஸாதாரணமான ஸூத்ரங்கூடத் தெரிந்திராமற்போகாது. ‘யத்ர யத்ர ப்ரணீ ஸமுபஸ்யதேஸ்ம’ என்று ஸந்தியில்லாமல்தான் ப்ரயோகிக்க வேணுமென்று இச்சிறுவிஷயத்தையுங்கூட அறியப் பெருதவர்கள் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர மஹாசார்ய மஹாக்ரந்த பரீக்ஷணத்தில் ப்ரவர்த் திப்பது பெருத்த ஸாஹஸமல்லவா? இப்படிப்பட்ட ஸாஹஸத்தில் ப்ரவர்த்திக்க வேண்டாமென்று சில ஆப்த ஸுஹ்ருந்மணிகள் தமக்கு உத்போதநம் செய்ததாகவும் தாமே வெளியிட்டுக் கொண்டு நிற்பதும் ஒரு ஆச்சரியமே.

46. க்ரந்திகர்கள் பஹுளமாக ப்ரயோகிப்பது “யத்ர யத்ர ப்ரணௌ — தர்ம தர்மிணௌ.” என்று பும்லிங்கமாக. அப்படி ப்ரயோகித்திருந்தாராகில் இப்படி அகப்பட்டுக்கொள்ள வேண்டியிராது. விலக்ஷண தைவஸங்கல்ப மென்பது தனியாக வொன்றுண்டே. நூற்றுக் கணக்கான பண்டிதமணிகள் தம்முடைய நூலைப் பராமர்சித்து அபிநந்தநம் செய்திருப்பதாக வெளியிட்டுக் கொண்டிருக்கிறுரே; இப்படிப்பட்ட தவறுகளைக் கூடவா அவர்கள் திருத்திக் கொடுக்கமாட்டாதவ ராயினர்? சததூஷணீகண்டனமென்று ஒன்று வெளிவந்துவிட்டதே யென்று ஆனந்தக்கடலில் ஆழ மூழ்கிப்போனவவர்கள் புத்தகத்தினுள்ளே ஒரு அக்ஷரத்தையும் பார்த்தவர்களல்லரென்று சபதமிட்டுரைக்கலாம். ஒருவர் தம்முடைய மகளுக்கு முப்பது நாற்பது வயதாகியும் வரன் கிடைக்கப்பெருமல் வருந்தியிருக்க ஒரு கரணத் திலும் பாடவமில்லாதவனுன வொரு வரன் வந்துசேர, அவனுக்கு ஆயிரக்கணக்கில் வரதக்ஷிணை கொடுத்து விவாஹம் நடத்தினுராம்; ‘ஓய்! இது என்ன விவாஹம்!’ என்று பலர் பரிஹஸிக்க, அவர் சொன்ன பதில்வார்த்தையை நாம் அநுவதிக்க வேணுமோ? ‘நமக்கு நெடுங்காலமாகத் தலைவணக்கத்திற்கு ஹேதுவாயிருந்த சத தூஷணிக்கு மறுப்பாக ஒரு திலகாஷ்ட மஹிஷபந்தன க்ரந்தி திருவவதரித்ததொன்றே போதுமே’ என்று அவரவர்கள் அகங்குழைந்து போயினர்.

47. சதபூஷணியின் நாலிலொருபாகம் ப்ரசஸ்திபத்ரிகா ப்ரசுரமாகக் காண்கிறது. அப்படிப்பட்ட பத்ரிகைகளுள் இரண்டொரு பத்ரிகைகளைப் பற்றி இங்கு ப்ரஸ்தாவிக்கிறேன்.

"ஶததூஷணீ நாம வேதாந்தஸ்ய க்ருதிர்யஸ்யா ஶ்ருதா:
ஶததூஷண்யா: ஸர்வ நாஶக: ஸவித்ர: ஸ்யத்வக்ஷ"

என்று ஒரு மஹான் எழுதியுள்ளார். அவர் சதபூஷணியின் விஸ்தரத்தை மட்டும் கண்டு உள்ளம் பூரித்தவர் என்பதில் ஐயமில்லை. உலகில் அந்தந்த மதஸ்தர்கள் தம் தம் மதங்களுக்குச் சிற்சில யுக்திகளைச் சொல்லாமலிருக்கமாட்டார்களே; அப்படி இவர்களும் ஸ்வகோஷ்டிகளில் சொல்லிப் போரும் யுக்திகளை பூஷணியிலும் கண்டு உகந்திருக்கலாம். நாமெடுத்துக்காட்டும் அவத்யங்களைப் பரிஹரிக்க அவர்கள் தாம் வல்லரோ? பரிஹரிப்பதிருக்கட்டும்; பூஷணியில் இப்படிப்பட்ட அவத்யங்கள் புகுந்திருக்கின்றனவென்பதைத்தான் கண்டவர்களோ அவர்கள்?

48. சென்னை தியாகராயநகரில் ப்ரஹ்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள் ஸுப்ரஸித்தபண்டிதர். ப்ரவசநங்களும் செய்து போருபவர். நமக்கு நெடுநாளாக ப்ரியஸுஹ்ருந்மணிகளுமாவர். இவருடைய பத்யரூபமான அபிநந்தனம் பூஷணிக்கு வாய்த்திருக்கிறது. இவருடைய சில பத்யங்களின் பொருளை மட்டும் உள்ளபடி அநுவதிக்கிறேன்.

> கவிதார்க்கிகஸிம்ஹமான வேதாந்ததேசிகரால் வெகு காலத்திற்கு முன்பு இயற்றப்பட்டதான சததூஷணியானது ஒருவராலும் கண்டிக்கப்படவில்லை; கண்டிக்கவும் முடியாதது. ஆனதுபற்றியே அத்வைதப்புலிகளான அப்பய்யதீக்ஷித வித்யாரண்யாதிகளான முன்னோர்கள் கண்டிக்க ப்ரவர்த்தித்திலர்—என்று ஜீயர்கள் அப்போதப்போது வாய்விட்டு கோஷித்துக் கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட சததூஷணியை இன்று பண்டிதோத்தமர்கள் கண்டிக்க ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் செய்த சதபூஷணியைக்கண்டு நம்முள்ளம் உகக்கின்றது. அப்பய்யதீக்ஷிதவித்யாரண்யாதிகள் சததூஷணியைக் கண்டிக்காமற் போனதற்கு என்ன காரணமென்றால் அதை நான் சொல்லுகிறேன். 'தன்பாலுள்ள தோஷத்தைத்தெரிந்துகொள்ளாமல் பரதூஷணம் செய்பவர்களை உபேக்ஷித்திருக்கவேணுமேயொழிய கண்டிப்பதில் இறங்கக்கூடாது' என்கிற நியாயத்தை முன்னிட்டு அவர்கள் உதாஸீனர்களாயிருந்துவிட்டார்கள். ....

இப்படியாகத் தாம் வெளியிட்டுக்கொண்டிருக்கிற கத்யபத்யரூப ப்ரசஸ்திமாலிகைகளினால் சததூஷணி கண்டிக்கப்பட்டு விட்டதாகவே அபிமானிக்கிறார் நம்பூஷணீகாரர். அது கிடக்கட்டும். மேலே ப்ரஸ்தாவித்த ப்ரஹ்மஸ்ரீ. நடேச சாஸ்திரிகளின்

ச்லோகங்களில் "ஆரப்தேச தாமத்ய வண்டிதும் பண்டிதோத்தமா:" என்று எழுதப்பட்டுள்ளது. இதைப் பண்டிதர்கள் நன்கு நோக்கவேணும். சதபூஷணீகாரர் பூஷணியை யெழுதப் பிள்ளையார்சுழி சுழித்தவன்றைக்கே இந்த ப்ரசஸ்தி பத்ரிகை எழுத ஆரம்பிக்கப்பட்டதென்று இதனால் நிஸ்ஸந்தேஹமாகத் தெரியவரும். "சத தூஷணிக்குக் கண்டனமெழுத நான் நினைத்திருக்கிறேன்" என்று இவர்கள் சொன்ன போதே அந்த க்ஷணத்திலேயே உள்ளம் பூரித்து இந்த ப்ரசஸ்திபத்திரிகையை எழுதிக் கொடுத்ததாகவுமிருக்கலாம். அப்படித்தானிருக்க வேணும்.

49. "வண்டிதும் ஆரப்தே" என்றெழுதினதற்கு முரணாக "வீக்ஷ்ய மோமுத்யதே சேதஸ் தத்க்ருதாம் சதபூஷணீம்" என்று உடனே எழுதப்பட்டிருக்கின்றது. நிர்ப்பந்தத்தினாலோ தாக்ஷிண்யத்தினாலோ அந்தந்த பண்டிதர்கள் ப்ரசஸ்தி பத்ரிகைகளைக் கொடுத்தார்களென்றும், ஒருபண்டிதரும் சதபூஷணியை உட்புகுந்து பார்த்தவரல்லரென்றும் திண்ணமாக எண்ணலாம். பார்த்திருந்தால் இதுவரை நாம் எடுத்துக்காட்டியிருக்கின்ற அவத்யங்களையும், இனிமேலும் அபரிமிதமாக எடுத்துக் காட்டப் போகிற அவத்யங்களையும் அவர்கள் உணர்த்தாமலிருக்க ப்ரஸக்தியில்லை. இவரிடத்திற் போலவே அவர்களிடத்திலும் ஞானக்குறை சங்கிக்கவன்றோ நேர்கின்றது. அப்படி சங்கிக்க எமதுமனம் இசையவில்லை. ப்ரதிஷ்டித பண்டிதோத்தமர்களல்லவா அவரவர்கள். உண்மையில் அவர்கள் புத்தகத்தினுள் கண்ணைச் செலுத்தினவர்களே யல்லர் என்றுதான் தேறும்.

50. ப்ராஸங்கிகமாக இங்கு ஒன்று தெரிவிக்கப்படுகிறது. மேலே குறித்த பண்டிதச்ரேஷ்டரான நடேச சாஸ்த்ரிகளின் ச்லோகமாலிகையில் * க்ருதா யா சததூஷணீ, ந கண்டிதா ந கண்ட்யா ச நைவ கண்டயிதும் க்ஷமா * என்று காணப்படுவதை விவேசந விசக்ஷணர்கள் விமர்சிக்க வேணும். ராமாநுஜீயர்கள் இப்படி சொல்லிக்கொண்டிருந்ததாக எழுதப்பட்ட ச்லோகமிது. "சததூஷணீ ந கண்டிதா" என்றது யுக்தம்; "ந கண்ட்யா ச * என்றதும் யுக்ததரம். இதற்குமேல் "ந ச கண்டயிதும் க்ஷமா" என்றிருக்கிறதே, இதற்கு என்ன பொருளென்று சப்தமர்ம வேதிகள் விசாரிக்க வேண்டும். வ்யாகரணத்தில் * க்ஷய்ய ஜய்யௌ சக்யார்த்தே * என்றொரு ஸூத்ரமுண்டு; அதை மனத்திற் கொண்டு இவர்கள் இப்படி ப்ரயோகித்திருப்பதாக நினைக்கிறேன். "சததூஷணீ கண்டயிதும் சக்யா ந, யோக்யா சந" என்கிற அபிப்ராயம் போலும். இது மிகவும் சோசநீயமான மருள். "கண்டயிதும் க்ஷமா" என்பதற்கு இவர்கள் விவக்ஷிக்கிற பொருள் ஒருகாலும் சேராது. க்ஷமா என்கிற சொல்லுக்கு சக்தா என்று அர்த்தமே தவிர சக்யா என்று அர்த்தம் கிடையாது. 'ரக்ஷிதும் க்ஷம:' என்றால் ரக்ஷிப்பதற்கு சக்தன் என்றுதான் அர்த்தம். 'சேதநர்

களை ரக்ஷிக்க ஸர்வேச்வரன் சக்தன்' என்று விவக்ஷித்து இப்படி ப்ரயோகிக்கலாமே தவிர, ஸர்வேச்வரனாலே சேதநன் ரக்ஷிக்கக் கூடியவன் என்கிற விவக்ஷையில் 'ரக்ஷிதும் க்ஷம:' என்று ஒருகாலும் பிரயோகிக்கலாகாது. க்ஷம: என்று வருமிடங்களில் முன்னேயிருக்கிற துமுந்ப்ரத்யயாந்த அவ்யயமானது கர்த்ருவில் சேருமே யொழிய கர்மணி சேராது. ரக்ஷிதும் க்ஷம: என்ருல், ரக்ஷணம் கர்த்தும் க்ஷம: — சக்த:. என்று அர்த்தமாகுமே யல்லது ரக்ஷணகர்மீபவிதும் க்ஷம: என்று அர்த்தமாகாது. இனி ப்ரக்ருத விஷயத்தில் வருவோம். "சததூஷணீ கண்டயிதும் ந க்ஷமா" என்ருல் சததூஷணியானது மதாந்தரஸ்தர்களின் வாதங்களைக் கண்டிக்க மாட்டாதது என்று பொருளாகுமே யல்லது சாஸ்த்ரிகள் விவக்ஷிக்கிற பொருள் இதில் ஒரு நாளும் கிடைக்காது. 'ந கண்ட்யா' என்கிற ஒரு சொல்லே போதுமானது. பத்ய பூரணார்த்தமாக இட்டது அநர்த்தாயவாயிற்று. இப்படிப்பட்டவர்கள் பூஷணியை பூஷித்ததனால் என்னாகும். வேதாந்த தேசிகர் ஸ்வீயதோஷத்தையே தெரிந்து கொள்ளாமல் பரதூஷணத்தில் ப்ரவர்த்தித்தவராக எழுதுவதற்கு இத்தகைய பண்டிதோத்தமர்களல்லவோ முன்வர வேண்டும்.

51. பூஷணிக்கு ப்ரசஸ்திபத்ரிகையை யளித்தவர்களில் ஒருவரும் இவ்வளவு துணிந்து எழுதியிருக்கவில்லை. [தேசிகன் ஸ்வதோஷத்தையே யறிந்துகொள்ள மாட்டாமல் பரதூஷணத்தில் கைவைத்தவர் என்றும், ஆனதுபற்றியே அப்பயதீக்ஷித வித்யாரண்யாதிகள் உபேக்ஷித்துவிட்டார்களென்றும் யாரும் எழுதியிருக்கவில்லை.] இவரொருவரே எழுதினபடியால், இவருடைய ஸ்வீயதோஷ விஜ்ஞாந ஸாம்ராஜ்யம் எத்தகைத்தென்று சோதிக்க ப்ராப்தமாயிற்றென்று தடஸ்தர்கள் உணர்க. பூஷணியை உட்புகுந்து பாராமலே ப்ரசஸ்திபத்ரிகைகள் அளிக்கப்பட்டன வென்றும், ப்ரசஸ்திபத்ரிகைகளைப் பராமர்சியாமலே அவற்றை பூஷணீகாரர்கள் பிரசுரம் செய்து கொண்டார்களென்றும் தெரிவிக்கப்பட்டதாயிற்று.

52. சில பண்டிதர்கள் சதபூஷணியைப் பூர்த்தியாகப் பார்த்தவர்கள்போல "இந்த க்ரந்தத்தில் ஸூக்ஷ்மஸூக்ஷ்மமான விசாரங்கள் பலபல செய்யப்பட்டிருக்கின்றன" என்றெழுதியிருப்பதையும் பார்த்திருக்கின்ருேம். அதுவும் அந்தந்த மகுடங்களை மட்டும் பார்த்து எழுதினதேயொழிய, உட்புகுந்து ஆராய்ச்சிசெய்து எழுதினதாக நினைக்க அவகாசமேயில்லை. பூமிகையைமட்டுமே தாங்கள் பார்வையிட்டதாகவும் சில மஹான்கள் காட்டியுள்ளார்கள். ஏடுகளைத் தள்ளித்தள்ளிப் பார்த்ததாகவும் சில பெரியார் காட்டியுள்ளார்கள். அத்தனைபேரும்சததூஷணியில் வித்வேஷம்கொண்டவர்களேயொழிய மற்றையாராருமில்லை; மத்யஸ்தர்களன்ருே ப்ரசம்ஸிக்கவேண்டும்.

53. பம்பாய் மஹாநகரத்தில் வல்லபாசார்ய குலபூஷணரான ஸ்ரீயுத. கோஸ்வாமி தீக்ஷிதஜீ அவர்கள் சிறந்த பண்டிதராக விளங்கி வருகிறார்கள். இவர் தேசிகனுடைய தத்வமுக்தா கலாபத்தைத் தாம் கண்டபாடம் செய்திருப்பதோடு தம்முடைய குமாரர்க்கும் கண்டபாடம் செய்துவைத்து, தம்முடைய மந்திரத்தில் தினப்படி பூஜையில் அதன் பாராயணம் நடத்திவருகிறார். இது நாம் கட்கூடாகக் கண்டது. 17–8–55ல் நேரில் கண்டோமிதனை. அந்த தீக்ஷிதஜீ பூஷணியின் பூமிகையைமட்டும் தாம் பார்த்ததாகத் தெரிவித்து ஒரு ப்ரசஸ்திபத்திரிகை கொடுத்துவிட்டார். அவர் நம்முடைய வஜ்ரகுடாரத்தின் பகுதியை வரவழைத்துப்பார்த்து ஆனந்தம் பொங்கி 20–12–56 தேதியில் எண்பத்தொன்பது பதங்கள் கொண்ட வொரு தந்தியை (Telegram) நமக்குக் கொடுத்தார். "சதபூஷணீவஜ்ரகுடாரத்தைப் பார்த்ததனால் எனக்குண்டான மகிழ்ச்சிக்கு என்னுடைய அந்தரங்கமே ஸாக்ஷி. ஸத்யமாய் அபரிமிதமான ஆனந்தத்தை யநுபவிக்கின்றேன். ஸ்ரீமதாஸூரி. ராமாநுஜாசார்ய ஸ்வாமி..........முதலான மற்றுமுள்ள வித்வான்களும் தனித்தனியாய் சதபூஷணீ கண்டனத்தில் ப்ரவர்த்திக்கும்படி ஸபைகூட்டி அவசியம் செய்யவேணும். அச்சிடும் செலவை நான் பொறுத்துக்கொள்ளக்கடவேன்" — என்பது அந்த தந்தியின் ஸாராம்சம். இப்படி, விசிஷ்டாத்வைதிகளல்லாதாரும் உள்கனிந்து புகழுகின்றதுகாண்மின் நம்முடைய சதபூஷணீ வஜ்ரகுடாரம்—என்னுமிது ப்ராஸங்கிகமாக இங்குத் தெரிவிக்கலாகிறது. இனி ப்ரக்ருதவிஷய நிரூபணங்களிற் செல்வோம்.

54 தேசிகனுடைய சததூஷணியில் * பரமதே ஸூத்ரஸ்வாரஸ்யபங்கவாதமென்பது அறுபத்தாறாவது வாதமாக அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. சதபூஷணியிலோவென்னில் 'பரமதே ஸூத்ரஸ்வாரஸ்ய பங்கவாத பரீக்ஷா' என்பது முதல் வாதமாக வைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு ஏதோ ஹேதுவும் எழுதப்பட்டிருக்கின்றது. அது கிடக்கட்டும். சததூஷணியிலுள்ள அந்த வாதத்தில் ஒரு அத்புதமான ஸ்ரீஸூக்தி அருளிச் செய்யப்பட்டிருக்கிறது;—

> சாரீரகமீமாம்ஸா ஸூத்ரங்களெல்லாம் ஸகுணப்ரஹ்ம ப்ரதிபாதனத்திலே தத்பரங்களாகையாலே—நிர்க்குணமாயும் அசரீரமாயும் அலக்ஷ்மீகமாயும் அபரிவாரகமாயும் அவிபூதிகமாயும் (மாயாவாதிகளால்) சொல்லப்படுகிற ப்ரஹ்மம் சாரீரகபஞ்சமாத்யாயத்தில்தான் இவர்களுக்குக் கிடைக்கவேண்டும்.

என்கிற திருவுள்ளத்தோடே "ஏவம் சாரீரோபக்ரம ஸூத்ராணாம்" இத்யாதி திவ்ய ஸூக்திகளை ஸ்வாமி தேசிகன் ஸாதித்திருக்கிறார். சாரீரக சாஸ்த்ரமென்பது நான்கு அத்யாயங்களே கொண்டது. அதில் ஒரு ஸூத்ரமும் பிறர்க்குக் கைகொடுப்பதன்றென்றும், ஐந்தாவது அத்யாயம் ஒருகால் அவதரிக்குமானால், அதில் இவர்களுக்கு

அபிமதங்களான—நிர்க்குணம் ப்ரஹ்ம, அசரீரம் ப்ரஹ்ம, அலக்ஷ்மீகம் ப்ரஹ்ம, அபரிவாரகம் ப்ரஹ்ம, அவிபூதிகம் ப்ரஹ்ம, சிந்மாத்ரம் ப்ரஹ்ம—இத்யாதிகளான அர்த்தங்களை யதேஷ்டமாக ஸாதித்துக் கொள்ளலாமென்று உள்ளபடி தெரிவித்திருக்கிறுர் தேசிகன். இதை பூஷணீகாரரும் பார்த்திருக்கிறுர்; எடுத்துக்காட்டியுமிருக்கிறுர்; ஆனுல் மருமத்தை க்ரஹிக்கில்லாமல் ஏதோ எழுதுகிறுர். ஐந்தாவது அத்யாயமென்று எழுதியிருக்கிறுரே, இது பூர்வமீமாம்ஸையிலுள்ள ஐந்தாவது அத்யாயத்தைச் சொன்னது போலும் என்றெண்ணி ஏதேதோ எழுதியுள்ளார். அதையெல்லாம் பார்க்குமிடத்து இவர் சததூஷணியின் கருத்தைச் சிறிதுமறியப் பெற்றவரல்லரென்பதே நிர்ணீதமாகிறது. சததூஷணியில் "மீமாம்ஸா சாஸ்த்ர பஞ்சமாத்யாயே" என்று ஸாதித்திருக்கவில்லை. "சாரீரக பஞ்சமாத்யாயே" என்று ஸுஸ்பஷ்டமாகவுள்ளது. ஷோடசலக்ஷணியான பூர்வமீமாம்ஸையில் ஐந்தாவது அத்யாயம் இருக்கின்றதாயினும் அதைப்பற்றின ப்ரஸ்தாவம் இங்கு ஸுதராம் அப்ரஸக்தம்.

55. *ஸம்ஹிதமேதச் சாரீரகம் ஜைமிநீயேந ஷோடசலக்ஷணேந* என்கிற வ்ருத்திகாரவசனத்தை யடியொற்றி ஐகசாஸ்த்ரியத்தை யங்கீகரிக்கின்ற விசிஷ்டாத்வைதிகளும் பூர்வமீமாம்ஸைக்கு சாரீரக ஸம்ஜ்ஞாயோகத்தை இசைந்ததென்பது கிடையாது. ஆகவே சாரீரகபஞ்சமாத்யாய பதத்தாலே பூர்வமீமாம்ஸையிலுள்ள பஞ்சமாத்யாயம் நினைவுக்குவருவதற்குக்கூட ப்ரஸக்தியில்லை. எதிரிகளின் அவலக்ஷணவாதங்களுக்கு ஹஸ்தாவலம்பம் கொடுப்பதற்காக இனி அவதரிக்கப்போகிற பஞ்சமாத்யாயமே தேசிகனுல் சாரீரகபஞ்சமாத்யாய பதத்தாலே தெரிவிக்கப்பட்டதென்பதை பூஷணீகாரர்கள் இனியாகிலும் குறிக்கொள்ள வேணும். இந்த ப்ரகரணத்தில் பூஷணீகாரர் எழுதியுள்ள வாக்யராசிகள் *ஸ்வயமபி லிகிதம் ஸ்வயம் ந ஜாநாதி* என்கிற பழமொழிக்கு இலக்கானவை என்பது மற்ருெரு விசேஷம். உண்மையில் சாரீரகபஞ்சமாத்யாய மென்று ஒரு புத்தகமிருப்பதாகவே யெண்ணி இவர்கள் சில புஸ்தகாலயங்களில் தேடும்பரிச்ரமத்தை ஏற்றுக்கொண்டதாகவும் காதில் விழுந்தது. ஒரு வேதாப்யாஸஜடன் *ஸ்தநமத்ய மதா வித்யா* என்று கேட்டிருந்தான். ஸ்தந்ய பானத்தை விட்டு ஸ்தந க்ரஹணம் பண்ணுவதற்கிடையே கல்வி பயில வேணுமென்று இதன் பொருள் என்றறியப் பெறுமல் காந்தா ஸ்தநங்களினிடையே வித்யையைத் தேடிப்பார்த்து, கிடைக்கவில்லையே யென்று கிலேசித்திருந்ததாகக் கேட்டதுண்டு. இது ஸம்பாவிதமான கதையென்று இப்போது நினைக்கலாயிற்று.

56. இந்த ப்ரஸங்கத்தில் ஒரு முக்கிய விஷயம் தெரிவிக்கலாகிறது. இவர்கள் பூமிகையின் தொடக்கத்திலேயே

"விசிஷ்டாத்வைத ஸித்தாந்தோ பகவத் போதாயநவ்ருத்தி
மூல: பகவத்ராமாநுஜேந............உபப்ரும்ஹித:"

என்று எழுதியிருக்கிறுர்கள். இப்படி ஸக்ருத் அல்ல, அஸக்ருத் உள்ளது. பகவத் போதாயந ரென்பவர் வ்யாஸபராசராதிகளைப்போன்ற ஒரு மஹர்ஷியே யல்லது 'ய: கச்சந' என்று தள்ளக்கூடியவரல்லர். அப்படிப்பட்ட மஹர்ஷியின் வ்ருத்தி க்ரந்தத்தை மூலமாகக் கொண்டது விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயம் என்று எழுதப் பட்டால், இதனுல் பகவத் ராமாநுஜமதம் ஸர்வாத்மநா ப்ராமாணிகம் என்றதாகுமே யொழிய அப்ராமாணிகமென்றுவது தான்தோன்றியான தென்றுவது சொல்ல வகையில்லை. போதாயந வ்ருத்திக்ரந்தம் லோபித்து விட்டதென்று சொல்லி, ஆகவே பகவத் ராமாநுஜபாஷ்யம் தந்மூலகமல்லவென்று சொல்லிப் பிழைக்கவேண்டிய வழியை யறியாமல் "போதாயநவ்ருத்திக்ரந்த மூலகம் பகவத்ராமாநுஜ ஸித்தாந்தம்" என்று அடிக்கடி யெழுதி யிருப்பதனுல் இவர்கள் மஹர்ஷிகளிடத்திலேயே மாச்சரியம் கொண்டவர்களென்று கல்வெட்டாகத் தேறுகின்றது.

57. இதை வேதாந்ததேசிகனே நன்கு வெளியிட்டிருக்கிறுர்—* வ்யாஸபோத ஹாஸவதீக்ருத: ஸரிஹர: போதாயந டங்க த்ரமிட குஹதேவ கபர்த்தி பாருசி உபாய ஸாதாய யோகாயந: * என்கிற யதிராஜஸப்ததி (65) ச்லோகரத்நத்தை இவர்கள் நித்யமநுஸந்திக்கப்ராப்தம். ராமாநுஜமதம் நவீநமாக ஏற்பட்டதென்று சொல்லாநின்ற ஸயூத்த்யர்களுக்கு முகபங்கம் செய்வார்போன்று "ராமாநுஜமதம் போதாயநவ்ருத்திக்ரந்தமூலகம்" என்று பறைசாற்றுமிவர் இவ்விஷயத்தில் ப்ராமாணிக கோஷ்டியில் பரிகணநீயரேயாவர்.

58. பூஷணீகாரருடைய விஷயசோதனங்கள் எப்படிப்பட்டவையென்றுல், ஒரு விஷயத்தை ப்ரஸங்கிப்பது, 'இந்த விஷயம் இன்ன வாத பரீக்ஷையில் விசதமாக விளக்கப்பட்டது' என்றெழுதி நிற்பது; மறுபடியும் மற்றொருவிஷயத்தை ப்ரஸங்கிப்பது; 'இந்த விஷயம் இன்னவாதபரீக்ஷையில் விசதமாக விளக்கப்படும்' என்றெழுதி நிற்பது; 'அதிகமாகச் சொல்லவேண்டியதெல்லாம் இன்னவாத பரீக்ஷையில் வ்யக்தம்' என்றெழுதுவது; இப்படியாக கீழே ஆய்விட்டதென்றும் மேலே ஆகப்போகிற தென்றும் காட்டி ப்ரமிக்கச்செய்வது தவிர வேறொன்றுமில்லை. புத்தகம் பெரிதா யிருப்பதால் இதில் பலபலவிஷய நிரூபணங்கள் இருக்குமென்று பலர் மயங்கக் கூடும். நாமும் ஸ்தூலத்ருஷ்டியில் அப்படி மயங்கியிருந்ததுண்டு. இதர காரியங்களை அறவே விட்டிட்டு மூன்று நாள் பூர்த்தியாக வாசித்துப் பார்த்ததில் பலவகைப்பட்ட ப்ரதாரணங்களும் ப்ரமங்களும் ப்ரமாதங்களும் மலிந்தது இந்த க்ரந்தமென்று நிச்சயிக்க லாயிற்று. இந்த நிச்சயத்தை உலகறியச்செய்துவருகிறோம்.

59. (18-A) என்று லக்கமிட்ட பக்கத்தில் "ஈக்ஷத்யதிகரணம் ஸ்ரீபாஷ்யமதே வ்யர்த்தம்; அத்வைதமதே து ந வ்யர்த்தம்" என்றெழுதுகிற ப்ரகரணத்தில் "வ்யக்தம் ச அதிகம் ப்ரஹ்மோபாதாநத்வ அநுபபத்திவாத பரீக்ஷாயாம்" என்றெழுதப்பட்டுள்ளது. பூஷணியில் அந்த பரீக்ஷை எங்கேயிருக்கிறதென்று தேடிப்பார்த்ததில் எங்கும் கிடைக்கவில்லை. ப்ரஹ்மோபாதாநத்வ அந்யதாநுபபத்தி வாத பரீக்ஷையென்பது இருக்கின்றது. அநுபபத்தியும் அந்யதாநுபபத்தியும் பர்யாயமாகுமோ? இட்டிருக்கிற ஸம்ஜ்ஞையை யெடுத்துக்காட்டவேண்டியதன்ரே கடமை. இப்படிப்பட்ட விஷயங்கள் பல. இவற்றையெல்லாம் ப்ரமாத கோடியிலே பரிகணநம் செய்துகொள்ள வேணுமென்பர்கள் இவர்கள்.

60. xxxiv என்று லக்கமுள்ளபக்கத்தில் "ஸாவிநம் ஸாஹாய்யம் மநஸிக்ருத்ய" என்றெழுதியுள்ளார். ஸம்ஸ்க்ருதத்தில் அநேக க்ரந்தங்களெழுதினவர்கள் இப்படிப்பட்ட ப்ரயோகங்களைச் செய்வர்களா? ஸாஹாய்ய சப்தத்தைப் பும்லிங்கமென்று காவ்யம் வாசிக்கிற மாணுக்கர்களும் ப்ரமிக்கமாட்டார்கள். க்லீபமானவதற்கு 'ஸாவிநம்' என்று பும்லிங்கவிசேஷணமிடுகிருர். (உபதேசாநுபபத்திவாதபரீக்ஷை, பக்கம் 16ல்) "அநுவர்த்தமாந ப்ராரப்த பல ஹேதுஹேரபயுக்தமாத்ர தத்ஸம்ஸ்காரவதாம்" என்கிருர். இங்கே மாத்ரபதம் எங்கிருக்கவேணுமென்பதை க்ரந்தங்களெழுதக் கற்றவர்களுக்கு நாம் உணர்த்தவேண்டியதுண்டோ? * ஹோமஶாலாயா உத்தரஸ்யாம் * என்கிற ஸூத்ரத்தை * ஹோமஶாலோத்தரஸ்யாம் * என்று மாற்றிச் சொல்ல முடியுமாவென்று பார்க்கவேணும். அப்படியுஞ் சொல்லலாமென்னில் * ஹோமஶாலோத்தரஸ்யாம் ஶாலாயாம் * என்றும் சொல்லலாம்.

61. முதல் பரீக்ஷையில் (பக்கம் 10ல்) * ஸஹஸ்ரஸ்ரோதஸ்ஸஹஸ்ரம் * என்று அதிவிலக்ஷணமான வொரு ப்ரயோகம் செய்திருக்கிருர். இப்படி ஓரிடத்திலன்று; விஸர்க்கமானது ரேபமாக மாறுவதை * ஸ்ரோதஸ்வதீ * ஸ்ரோதோவதி * இத்யாதிகளில் கண்டிருக்கிருராகையாலே இங்கும் அப்படித்தானுகவேணுமென்று கொண்டுவிட்டார். அல்லது, ஸாரஸ்வதவ்யாகரணுதிகளைக் காட்ட முன்வரவுங் கூடுமிவர்கள். அச்சுப்பிழையென்று சொல்லிப் பிழைக்க அவகாசமேயில்லை.

62. அச்சுப்பிழை திருத்தத்திலும் சிறிது கண்செலுத்தி விஷயவிசாரம் செய்வோம். மூன்ருவது பாகத்தில் பக்கம் 46, வரி 15ல்) "யதா ஸர்வேஷாம் ஶரீராணாமேகேநவாஸநாத்ந ஸம்ஶ்லேஷ:" என்று அச்சாகியிருக்குமிடத்தில் "ஸர்வேஷாம் சரீராணாம்" என்பதை "ஸர்வைச் சரீரை:" என்று திருத்திக்கொள்ளும்படி பிழைதிருத்தம் காட்டியுள்ளார். இது, தாமே முதலில் பிழையாக எழுதினதைத் திருத்திக் காட்

டுகிறபடியேயொழிய அச்சில் பிழையாக விழுந்துவிட்டதென்றும் அதைத்திருத்தின தென்றும் சொல்ல முடியாது. 'ஸர்வேஷாம் சரீராணும்' என்று எழுதினபோது எவ்விதமான அபிப்ராயமிருந்தது? அதில் என்ன அநுபபத்திகண்டு 'ஸர்வைச் சரீரை:' என்று திருத்திஞர்? என்று கேட்கவேண்டியிருக்கிறது. இவ்விஷயம் "ஸ்ரீபாஷ்யமதே" என்று எழுதப்பட்டிருப்பதால் இக்கேள்வி கேட்கப்ராப்தமாகிறது. 'ஸர்வைச் சரீரை:' என்றவிடத்து த்ருதீயைக்கு என்ன அர்த்தம் விவக்ஷிக்கிருரிவ ரென்று சாஸ்த்ரஜ்ஞர்கள் விசாரிக்கவேணும். "ஸர்வைஶ்ஶரீரைரேகைகஸ்ய பரமாத்மந: ஸஶரீரத்வம்" என்பது இவருடைய பங்க்தி. த்ருதீயைக்கு * யாநேந யாதி * இத்யாதி ஸ்தலங்களிற்போல அபேதார்த்தம் விவக்ஷிதமென்று சொல்லக் கூடும். ஸர்வஶரீராபிந்நஶரீரவாந் பரமாத்மா என்று வ்யவஹரிப்பது பொருந்து மாவென்று ப்ராஜ்ஞர்கள் பராமர்சிக்கவேணும். எந்த சரீரத்தில் ஸர்வசரீராபேதம் ஸாதிக்கப்படுகிறதென்று கேட்டால் விடையிறுக்கமுடியுமோ? முதலில் இவர் "ஸர்வேஷாம் சரீராணும் ஏகேந பரமாத்மநா ஸசரீரத்வம்" என்றெழுதி அச்சிட்டுவிட்டார். இதை யாரோவொருவர்கண்டு 'இது பொருத்தமாக இல்லையே' என்று தெரிவித்தார்போலும். பிறகு அதைத் திருத்த நினைத்தவர் எங்ஙனே திருத்திஞல் பொருந்துமென்று விமர்சிக்க அசக்தராய் ஏதோவொருவிதமாகத் திருத்திவிட்டார். "சரீராணும்-அநேகத்வேபி சரீரிண: பரமாத்மந: ஏகத்வவத்' என்று லகுவாக எழுத வேண்டியவழியைத் தெரிந்து கொள்ளாமல் * [illegible] * என்கிற ரீதியில் எழுதிவைத்திருப்பது இவர்களுக்கே தகும்.

63. இப்படிப்பட்ட அவத்யங்களுக்குத் தாம் பதில் சொல்லவேண்டிய கஷ்டம் தமக்கு நேராதபடிக்கு ஒன்று செய்திருக்கிருர்; அதாவது,

> "மிகவும் கம்பீரமான விஷயங்களில் அப்போதப்போது பலவகை ஸந்தேஹங்களையெல்லாம் நிரஸித்துக்கொடுத்து மிகவும் அநுக்ரஹிக்கின்றவர்களும் சிறந்த தபஸ்விகளும் ஆதிபகவத்பாத புநரவதாரபூதர்களுமான ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீபாதர்கள் [வர்த்தமாந காமகோடிபீடாதிபதிகள்] அவர்களே இந்த சதபூஷணீ க்ரந்தத்திற்குக் கர்த்தாக்கள்; நான் கேவலம் நிமித்தமாத்ரமே. ஆதலால் இந்நூலில் ஏதாவது குணங்களிருந்தால் அவை அந்த பெரியவர்களுடையனவேயாகும். எழுதுவது சோதிப்பது முதலானவற்றில் ஏற்படும் தோஷங்கள் மட்டும் என்னைச் சேர்ந்தவை"

என்றெழுதியுள்ளார். பூமிகையின் முடிவில் எழுதியிருப்பதோவென்ருல்—தமக்குக் கண்பார்வை கிடையாதென்றும், எழுதுவது திருத்துவது முதலிய காரியங்களைச் சில

துணைவர்கள் செய்தார்களென்றும் அஸக்ருத் உள்ளது. இவையெல்லாம் பரஸ்பர வ்யாஹதங்களான வார்த்தைகளென்பதில் ஐயமுண்டோ? ஸ்ரீராமக்ருஷ்ணசாஸ்த்ரிகளென்கிற ஒரு நண்பரே லேகந ஸம்சோதநாதிகளை நிர்வஹித்தாரென்று தாமே எழுதியிருப்பதற்கு முரணாக 'லேகந ஸம்சோதநாதி ப்ரயுக்தங்களான தோஷங்கள் மட்டுமே என்னுடையவை' என்று எழுதியிருப்பது பிசகு. ஸ்ரீமத் பூஜ்யபாத. ச்ருங்கேரி ஸ்வாமிகளுக்குப் போலவே ஸ்ரீமத் பூஜ்யபாதகாமகோடிபீடாதிபதிஸ்வாமிகளுக்கும் அபிநந்தனத்தில் மட்டுமே அந்வயமென்று புத்தகத்தின் உபக்ரமத்தில் காட்டியிருப்பதற்கு முரணாக அப்பெரியார்களே க்ரந்தகர்த்தாக்களென்று எழுதலாமோ?

64. நைச்யாநுஸந்தான முறையிலும், க்ரந்தத்திற்குப் பெருமை ஏற்பட வேண்டிய முறையிலும் இப்படி எழுதப்பட்டதாகக் கொள்வதில் பாதகமில்லாமையாலே இதையொரு பெரிய விஷயமாக எடுத்துக்கொள்வது யுக்தமன்றென்று சிலர் நினைக்கவும் சொல்லவுங்கூடும். இஃது உண்மையே. அவத்ய ஜடிலமான வொரு நூலைப் பலபேர்கள் கூடியோ ஒருவராகவோ எழுதிவிட்டு இதற்கு மிகப்பெரிய பீடாதிபதிகளைக் கர்த்தாவாகக் காட்டிநிற்பது உசிதமன்று என்பதை நாம்தெரிவியாமலிருக்கமுடியாது. இங்கு நாம் ப்ராஸங்கிகமாக விஜ்ஞாபிப்பதை யாவரும் குறிக்கொள்ளவேணும். ஸ்ரீமத் காமகோடிபீடாதிபதி ஸ்வாமி பாஜாள் உண்மையில் மஹாதபஸ்விகள். ஸர்வஜ்ஞர்கள். ஸர்வபூதஸுஹ்ருத்துக்கள். அப்ரமேய வித்யாநிதிகள். இவ்வளவையும் * அஹம் வேத்மி மஹாத்மாநம் * என்கிற முறையில் விஜ்ஞாபிக்கிறேன். இப்படிப்பட்ட வண்டந தூஷணதிக்ருத்யங்களில் அப்பெரியார்கள் த்ரிகரணங்களிலொன்றினாலும் ப்ரவர்த்திக்க ப்ரஸக்தியே கிடையாது.

65. ஸூ 1933-ல் "ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அருளிய நன்மொழிகள்" என்னும் பெயர்பூண்ட புத்தகமொன்று வெளிவந்தது. அது நம்முடைய பார்வைக்குவந்தது இப்புத்தகத்தில் ஸ்ரீஜகத்குரு ஸ்வாமிகளவர்கள் ஆங்காங்கு லோகஹிதார்த்தமாகச் செய்த உபந்யாஸங்கள் ஐம்பது தொகுக்கப்பட்டிருக்கின்றன. இதில் 528 பக்கங்களுக்குப் பிறகு அநுபந்தம் என்றுள்ள பகுதியில் முதல் வியாஸம் "சிவவிஷ்ணு அபேதம்" என்பது. அது மாம்பலத்தில் செய்தருளப்பட்ட உபந்யாஸமாம். அதில் பக்கம் 3ல்,

"ஸ்ரீராமாநுஜர் காலத்திற்கு முந்தியும் விசிஷ்டாத்வைதஸித்தாந்தம் சிற்சிலரால் அபிமானிக்கப்பட்டுவந்தது. திருமலைநம்பி ஆளவந்தார் நாதமுனிகள் முதலியவர்கள் விசிஷ்டாத்வைதிகள். நாதமுனிகளிடமிருந்து ஸ்ரீராமாநுஜர் உபதேசம் பெற்றதால் விசிஷ்டாத்வைதத்திற்கு 'நாதோபஜ்ஞம்' 'என்றும் பெயருண்டு"

என்றெழுதப்பட்டுள்ளது. [இங்கு நாதோபஜ்ஞமென்பது நாதோபஜ்ஞ்யமென்று அச்சுப்பிழையாக விழுந்திருக்கலாம்; அதுகிடக்க.] ஸ்ரீமந்நாதமுனிகளின் காலத்திற்கும் ஸ்ரீராமாநுஜர் காலத்திற்கும் இடையில் பலபல வருஷங்கள் சென்றிருக்கின்றன. ஸ்ரீராமாநுஜரின் ஆசாரியர்களுக்கு ஆசாரியரான ஆளவந்தார்கூட தமது பிதாமஹரான ஸ்ரீமந்நாதமுனிகளைக் காணப்பெற்றதில்லை. நாதமுனிகளின் சிஷ்யர் உய்யக்கொண்டாரென்கிற புண்டரீகாக்ஷர்; அவருடைய சிஷ்யர் மணக்கால்நம்பி யென்கிற ஸ்ரீராமமிச்ரர்; அவருடைய சிஷ்யர் ஆளவந்தாரென்கிற ஸ்ரீயாமுநாசார்யர். அவருடைய சிஷ்யர்களான பெரியநம்பி திருமலைநம்பி திருக்கோட்டியூர்நம்பி முதலானவர்களிடத்தில் ஸ்ரீராமாநுஜர் அர்த்தங்கள் கேட்டவர். ஸ்ரீமந்நாதமுனிகள் பரமபதஞ்சென்று எத்தனையோ வருஷங்களுக்குப்பிறகே ஸ்ரீராமாநுஜருடைய திருவவதாரம் நிகழ்ந்திருக்கின்றது. அவர் ஸ்ரீமந்நாதமுனிகளைப் பார்த்திருக்கவும் ப்ரஸக்தியில்லாமலிருக்க, அவரிடம் உபதேசம் பெற்றதாக எழுதுவது சிறிதும் ஸம்பாவிதமன்று. மஹாப்ராஜ்ஞர்களான ஸ்ரீகாமகோடிபீடாதிபதி ஸ்வாமிகள் இங்ஙனம் பிரவசனம் செய்திருக்கவே மாட்டார்கள். அவர்கள் செய்த உபந்யாஸத்தை ஏடுபடுத்தியவர் ஏதோ ப்ரமத்தாலும் அநவதாநத்தினாலும் இப்படி மாறுபாடாக எழுதியிருக்கக்கூடும். ஸ்ரீராமாநுஜர் நாதமுனிகளிடமிருந்து உபதேசம் பெற்றவரென்று ஸ்ரீஜகத்குருஸ்வாமிகள் ப்ரமிப்பதற்கு ப்ரஸக்தியே கிடையாது. அவரவர்கள் எதையாவது அஸம்பத்தமாக எழுதிவைத்து அதைப் பெரியவர்கள் பெயரில் ஆரோபிப்பதாகக்காண்கிறது.

66. மேலே உதாஹரித்த வாக்யராசியில் "விசிஷ்டாத்வைதத்திற்கு நாதோபஜ்ஞமென்றும் பெயருண்டு" என்று எழுதியிருப்பதுபற்றியும் சொல்லவேண்டியதுண்டு. விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு நாதோபஜ்ஞமென்று யாரும் பெயரிட்டிருக்கவில்லை. வேதாந்ததேசிகர் பணித்த ச்லோகமொன்றில் "நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் பஹுபிருபசிதம் யாமுநேயப்ரபந்தை: த்ராதம் ஸம்யக்யதீந்த்ரை: இதமகிலதம: கர்சநம் தர்சநம் ந:" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆழ்வார்களுக்குப் பிற்பட்ட ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களில் முதன்முதலான ஸ்தானத்தை ஸ்ரீமந்நாதமுனிகளென்கிற ஆசார்யவர்யரே வஹிப்பவர். அவர்க்கு முன்பும் ஸ்ரீவைஷ்ணவர்கள் பலர் இருந்தும் அவர்களுடைய திருநாமங்கள் தெரிய வரவில்லை. ஆகவே ஆசார்ய பரம்பரையில் முதன் முதலாக ஸ்ரீ நாதமுனிகளால் ப்ரவர்த்திப்பிக்கப்பட்டு ஆளவந்தாருடைய பல திவ்யக்ரந்தங்களினால் வளர்க்கப்பட்டு ஸ்ரீராமாநுஜரால் நன்கு ப்ரதிஷ்டாபிதமானது நம்முடைய தர்சனம்—என்பது இந்த ச்லோகத்தின் தாற்பரியம். இதைக் கொண்டு 'விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு

நாதோபஜ்ஞுமென்றும் ஒரு பெயருண்டு' என்றெழுதுவது பொருந்தாது. பெரியார் இங்ஙனே யெழுதியிருக்கவும் பேசியிருக்கவும் ப்ரஸக்தியில்லை. இதெல்லாம் இதரர்களால் நேரும் விபர்யயங்களேயாம்.

67. ஸ்ரீராமாநுஜர் தமது ஸ்ரீபாஷ்யத்தின் உபக்ரமத்தில் "பகவத்போதாயநக்ருதாம் விஸ்தீர்ணாம் ப்ரஹ்மஸூத்ரவ்ருத்திம் பூர்வாசார்யா: ஸஞ்சிக்ஷிபு:; தந்மதாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்யாஸ்யந்தே" என்று ஸ்பஷ்டமாக அருளிச்செய்திருக்கின்றார். டங்கத்ரமிட குஹதேவாதிகளான அதிப்ராசீநர்கள் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தவர்களென்பதை தேசிகர் யதிராஜ ஸப்ததியிலும் "நிஸாம்யந்தே யஸ்யா நிஜகதி திரஸ்காரவிஷயா: நிராதங்கா: டங்கத்ரமிடகுஹதேவப்ரப்ருதய:" என்கிற ச்லோகத்தினால் விசதீகரித்திருக்கின்றார். கிம்பஹுநா? உபநிஷத் ஸித்தமாயும் ப்ரஹ்மஸூத்ரப்ரதிஷ்டாபிதமாயுமுள்ள இந்த ஸித்தாந்தத்தைக் குறித்து "ஸ்ரீராமாநுஜர்காலத்திற்கு முந்தியும் இது சிற்சிலரால் அபிமானிக்கப்பட்டுவந்தது" என்றெழுதுவது அபிமாநப்ரயுக்தமத்தனையேயாம். பெரியார்கள் இப்படியொருகாலும் பிரவசனம் செய்திருக்கமாட்டார்கள்.

68. மேலே குறித்த வியாஸத்திலேயே *தத விஷ்ணோ: பரமம் பதம் * என்கிற ச்ருதிவாக்யவிசாரம் செய்யுமிடத்து "விஷ்ணு என்ற சொல்லில் ஐந்தாம் வேற்றுமையுருபு தொக்கி நிற்பதாகக் கொண்டு விஷ்ணுவைக்காட்டிலும் பரமமாகிய பரமசிவனே" என்று எழுதப்பட்டிருக்கின்றது. இங்கு அர்த்தத்தினுள் விசாரம் செய்ய நாம் இறங்குவது இருக்கட்டும்;

"விஷ்ணு என்ற சொல்லில் ஐந்தாம் வேற்றுமையுருபு தொக்கி நிற்பதாக"

என்றெழுதியிருப்பது பொருத்தமான வார்த்தையாகுமா வென்பதை விவேகிகள் விமர்சிக்கவேணும். 'விஷ்ணோ: பரமம்' என்றிராமல் விஷ்ணுபரமம் என்று ஸமாஸங்கொண்டிருந்தால் அப்போது ஐந்தாம் வேற்றுமையுருபு தொக்கியிருப்பதாக எழுதலாம். ஸமாஸமாகவன்றிக்கே விஷ்ணோ: என்று வேற்றுமையுருபு ஸுஸ்பஷ்டமாகக் காணநிற்பதால் அது தொக்கியிருப்பதாகச் சொல்ல இடமேது? இப்படியெல்லாம் அஸம்பத்தமாகப் பெரியார் எழுதமாட்டார்களன்றோ. சொல்லியிருக்கவும்மாட்டார்கள். இடையிலிருப்பவர்கள் எதையாவது அஸம்பத்தமாகவெழுதிப் பெரியார்கள்மேல் அவத்யம் ஏறுமாறு செய்வது வழக்கமாகக் காண்கிறது.

69. தைத்திரீயயஜுஸ்ஸம்ஹிதைஐந்தாவதுகாண்டம்ஐந்தாவதுப்ரச்நத்தில்

‘‘𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑌵𑌮𑍋 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌪𑌰𑌮𑌃’’

[அக்நிரவமோ தேவதாநாம் விஷ்ணு: பரம:]

என்று, தேவதைகளுக்குள்ளே கீழ்ப்பட்டதேவதை அக்னியென்றும். மேம்பட்ட தேவதை விஷ்ணுவென்றும் கல்வெட்டாகச் சொல்லியிருக்க, அந்த விஷ்ணுவுக்கும் மேலே ஒரு தேவதையிருப்பதாக வேதவாக்யத்திற்கு அர்த்தம் கூறலாமோ? பரமசிவன் த்ரிபுர ஸம்ஹாரம் செய்ய நேர்ந்தபோது நிகழ்ந்த நிகழ்ச்சியை * விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்யாமிததேஜஸ:. தஸ்மாத் தநுர்ஜ்யாஸம்ஸ்பர்சம் ஸ விஷேஹே மஹேச்வர:* என்று இதிஹாஸம் சொன்னவளவேயன்று; தைத்திரீய யஜுஸ்ஸம்ஹிதையில் ஆறுவது காண்டத்தில் இரண்டாம் ப்ரச்நத்தில் * 𑌤𑍇𑌷𑌾𑌮𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌂 𑌤𑌿𑌸𑍍𑌰𑌃 𑌪𑍁𑌰 𑌆𑌸𑌨𑍍 * என்று தொடங்கியுள்ள வாக்யராசியில் ‘‘விஷ்ணும் தேஜநம்’’ என்றிருப்பது முக்கியமாகக் குறிக்கொள்ளத் தக்கது.

70. மிக முக்கியமாக ஒன்றே இங்குச் சொலலவேண்டிய வார்த்தை. ‘‘சிவவிஷ்ணு அபேதம்’’ என்கிற மகுடமே பொருத்தமாகத் தோன்றவில்லை. சிவ விஷ்ணுக்களுக்கு அபேதம் என்றால் இதரர்களுக்கு பேதம் என்று ஏற்பட்டே தீரு மல்லவா? அபேதமொழிய பேதமே பரமார்த்தமன்று என்பவர்கள் சிவவிஷ்ணு அபேதமென்னும்போது சிவ விநாயகபேதம், விநாயக ஷண்முகபேதம், ஷண்முக சதுர்முகபேதம் என்றாற்போன்ற பல பேதங்கள் அவர்களால் இசையப்பட்டனவே யாகும். வ்யாவஹாரிகமான பேதத்தை இசைந்தேயிருக்கிறோமென்னில் இது அர்த்த சூந்யமான வார்த்தை என்பதை மேலே விரிவாக விளக்கப்போகிறோமாதலால் இப்போது நிற்போம். த்வேஷவாஸனை நன்றாகக் கழியப்பெற்ற பின்புங்கூட விஷ்ணுவுக்கு மேல் சிவன் என்றிப்படிப்பட்ட த்வேஷபுத்தி வ்யவஹாரங்களே நடையாடு கிறபடி தான் என்னே! நிற்க. ஆக 65-வது பாராமுதல் இதுவரை எழுதப்பட்டது ப்ராஸங்கிகம். ப்ராஸங்கிகமென்னென்னில்; ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஸ்வாமி பாதர்களே சதபூஷணிக்குக் கர்த்தாக்களென்று பூஷணீகாரர் எழுதியிருப்பது ஏலாது; பிறர் மனம்போனபடி எதையோ எழுதிவிட்டுப் பெரியவாள்மேல் ஆரோபணம் செய்திருப்பதுபோல இதுவும் வீணான ஆரோபணமென்பதாம். .... (*)

மூன்றாம் பரிச்சேதம் முற்றிற்று.

நான்காம் பரிச்சேதம்.

71. பூஷணீ க்ரந்தத்தினுள் (பக்கம் 34ல்)

“கிஂசு வெநாஂமஸ்ய கஊகணஃ கஊஆரா வெநவாயநவஂ கஊவிசா
ரஸ்யைவ்ருத்தி வணஉநெதா கஊவிசாரொவி வாகே, ஊஉயஉகே, ஜொ பஷியாஃ
நிதிநதாயெந தத்தீயாயதாயஅதாயஉவாநெநவஂமதிரிதி வக்தவஃஂ”

என்கிற பங்க்தி காண்கிறது. இந்த மஹா வாக்யத்தில் “கர்மவிசாரோபி” என்கிறவிது [ப்ரதமாந்தபதம்] எங்கே அந்வயிக்கிறது! என்ன பொருளைத் தெரிவிக்கிறது? என்று விசாரிக்கவேணும். “ராமோபி வநம் ப்ரதி கமநம்” என்கிற வாக்யத்திற்கும் இதற்கும் வாசியுண்டோவென்று பார்க்கவேணும். புதுக்கோட்டை வாக்யார்த்த ஸபஸ்ஸில் ஒரு பண்டிதர் “யூயம் வக்தவ்யம்” என்ன. அதுகேட்டு வித்வான்கள் சிரிக்கையில் அந்த பண்டிதர் “எதற்காகச் சிரிப்பது? யூயும்—நீங்கள், வக்தவ்யம்—சொல்லவேணும். நீங்கள் சொல்லவேணுமென்றுதானே சொன்னேன்; இதில் சிரிப்பென்ன? என்றாராம். இங்ஙனே பகைகைகள் நினைவுக்குவருகின்றன. இப்படி அநந்விதமாகவே எழுதக் கற்றவர்களின் வார்த்தைகளை எவ்வளவு விமர்சிப்பது.

72. நூலின் முதற்பக்கத்தில்—

“தத்ர ஊாஸாஆயஜெகஸாஹிதி ஸ்ரீஸாஷ்யஉதஂ;
உஸயஉவி ஸிஂஸஸாஸூஹிதி அஜெதஉதஂ”

என்கிற பங்க்தியுள்ளது; இப்படிப்பட்ட வாக்ய ஸங்கிவேசம் பூஷணியில் பலபல விடங்களில் காண்பதுண்டு. “..........இதி ஸ்ரீபாஷ்யமதம்; .. ...இதி அத்வைதமதம்” என்றிப்படியெழுதுவதினுள்ள அஸாமஞ்ஜஸ்யத்தை இவர் தெரிந்துகொள்ளவில்லையென்றால் என்ன சொல்லுவது? ஸ்ரீபாஷ்யமதம் என்றதற்கு எதிரிடையான சொற்போக்கு ‘சங்கரபாஷ்யமதம்’ என்றோ ‘நீலகண்டபாஷ்யமதம்’ என்றோ இருக்கத்தகுமேயல்லது அத்வைதமதமென்றிருக்கத்தகாது. ஔபசாரிகப்ரயோகம் இஷ்டமானாலுங்கூட ‘அத்வைதிநாம் மதம்’ என்றோ ‘அத்வைதிமதம்’ என்றோ பிரயோகிப்பது தான் உரியதாகும். இனி அத்வைத சப்தமே அத்வைதிபர்யந்தமாகப் பொருள் கொள்ளப் போங்காகுமென்கிற குத்ஸிதவாதம் கிளம்பும். இதெல்லாம் அஸமஞ்ஜஸ வ்யவஹாரமென்று விடுக்க.

73. அவ்விடத்திலேயே மேலே எழுதியுள்ளார்—

“ஸவிஶெஷஉவெதெநவ கயதாரொவாவவா
உநதாயெந உவஜெஸாஹஉஂ ஸஹெதுதாரதி” என்று.

இந்த பங்க்தியின் தாற்பரியமென்ன? 'ஸவிசேஷமுகே' என்பதற்கு என்ன பொருள்? யாருடைய முகத்தில் என்னவிசேஷம் கண்டாரிவர்? ஸவிசேஷமான முகமென்று அர்த்தமன்று என்னில், வேறு என்ன அர்த்தம் விவக்ஷிதமோ அது வெளிவரவேண்டும். உத்தராதி என்கிறாரே, இதற்குத்தான் என்ன அர்த்தம்? க: உத்தராதி? கஸ்மாத் உத்தராதி? என்று கேட்டால் மௌனமேயன்றோ தஞ்சமாகும். 'உத்தராதி' என்பதற்கு தாண்டுகிறானென்பதுதானே பொருள்? இவர்க்கு எண்ணமோ வொன்று; எழுதுகிற சப்தமோ வேறொன்று.

74. சில சப்தங்களைத் தாமாகவே இவர் ஸ்ருஷ்டிசெய்து விடுவதுமுண்டு. உபதேசாநுபபத்திவாதபரீக்ஷையில் (பக்கம் 11-ல்)

"அவித்³யா தந்நிவ்ருத்தி ப்³ரஹ்மாவாப்தி ஆவரகா......"

என்றுள்ளது. இங்கு ஆவரகா என்று பதமா? அவரகா என்று பதமா? என்று கேட்டால் என்ன பதில் வெளிவருமோ? ப்ரஹ்மஸ்வரூபத்தை அவரமாகவுடையதென்று பொருளென்றும், பஹுவ்ரீஹியில் கப்ரத்யயமென்றும் ஒரு பண்டிதர் சொன்னார். அவித்யை யென்பது பரப்ரஹ்மத்தையும் ஆவரிக்குமதாகையாலே பரப்ரஹ்மம் அவரமாய்விட்டதென்று விவக்ஷிதம் என்றும் விவரித்தார். இதெல்லாம் தலைகாலில்லாத பொருளல்லவா? இப்படிப்பட்ட அஸமஞ்ஜஸோக்தி ஒன்றுவது காட்ட முடியுமா சததூஷணியில்? கண்டிக்கவேணுமென்கிற எண்ணத்தோடாவது சததூஷணியை ஒருவிசை பூர்த்தியாக ஸேவித்தால் ஸம்ஸ்க்ருத பங்க்திகளை அழகாக எழுதும்படியான ஸாமர்த்தியமாவது ஸம்பாதிக்கப்பட்டதாகுமே. அசடு பிசடும் அநந்விதமும் அஸம்பத்தமுமான வாக்யராசியை நிரப்பிப் பெரிய புத்தகமொன்று வெளியிட்டுவிட்டு "நாங்கள் சததூஷணியைப் பொடிபொடியாக்கிவிட்டோம்" என்றால் இதற்கு ஏதேனும் அர்த்தமுண்டோ? 'ராமாயணத்தைக் கொளுத்துவது, பகவத்கீதையை எரிப்பது' என்கிற பிரசாரங்கள் நடந்துவருவதுபோல, சததூஷணி புத்தகத்தைக் கண்டம் கண்டமாக்கிவிடுவதென்றொரு பிரசாரத்தைக் கிளப்பி அங்ஙனே செய்து முடித்து க்ருதக்ருத்யர்களாகலாமோ இவர்கள்.

75. முதல் பரிக்ஷையில் பக்கம் 8ல்—

"த்வைத பாசுபத சைவ வைஷ்ணவ விசிஷ்டாத்வைதிந:"

என்றெழுதுகிறார். இதில் த்வைதம் என்கிற முதற்பதம் மதத்தைச் சொல்லுமது; மேலுள்ள பதங்களெல்லாம் மதஸ்தர்களைச் சொல்லுவன. இப்படிப்பட்ட சேராச்

சேர்த்தியான பதங்களைச்சேர்த்து ஸமாஸமாக்குவது இப்பண்டிதரொருவரிடத்திலேயே கண்டதாகும். இதற்கு நாலாவது வரியில் 'விசிஷ்டாத்வைதமதேஷு' என்கிறார். அதன் மூன்றாம் வரியில் 'அத்வைதமதே' என்கிறார். என்ன எண்ணத்தோடு பஹுவசநப்ரயோகம்பண்ணியிருக்கிறீரென்று அவரையே கேட்கவேணும். பூஜாயாம் பஹுவசநமென்பர்; இதற்குச் சிரிப்பதா அழுவதா? இது கிடக்க; இவ்விடத்தில் இவர் அபூர்வார்த்தமொன்று எழுதுகிறார்;

> விசிஷ்டாத்வைத மதத்தில் பரமபுருஷன் ஸ்வயம் நிமித்தகாரணமாயிருக்கச் செய்தேயும் ப்ரக்ருத்யப்ருதக்ஸித்திவசாத் உபாதாநம்போல் ஆகிறார்— என்று.

"உபாதாநமிவ பவதீதி" என்பது இவருடைய பங்க்தி. பிரபஞ்சத்திற்கு நிமித்தோபாதாந ஸஹகாரிகளாகிற த்ரிவிதகாரணமும் பரமபுருஷனே யென்று விசிஷ்டாத்வைதிகளின் கொள்கையேயொழிய உபாதாநமிவ பவதி என்பது கொள்கையன்று.

76. இதற்குமுன்பே பக்கம் 5ல்

"ஸ்வஸ்மிந் நிமித்தோபாதாநத்வம் ஹி விஸிஷ்டே லக்ஷணம் விவக்ஷிதம்"

என்று தூஷிக்கவெழுகிறார். அபிந்ந நிமித்தோபாதாநத்வம் ப்ரபஞ்சத்திற்குச் சொல்லப்படுகிறதே யல்லது ப்ரஹ்மத்திற்குச் சொல்லப்படுவது கிடையாது. ப்ரபஞ்சத்திற்கு நிமித்தகாரணமும் உபாதாநகாரணமும் வெவ்வேறுபட்டதன்று, ஒன்றே என்பது பரமார்த்தமாதலால் "ப்ரபஞ்ச: அபிந்நநிமித்தோபாதாநக:" என்று வ்யவஹரிப்பது குற்றமற்றதாகும். 'ப்ரஹ்மமே நிமித்தமும் உபாதாநமும்' என்கிற விவக்ஷைக்குச் சேர அபிந்நநிமித்தோபாதாநம் என்று வ்யவஹரிப்பது ஏலாது. நிமித்தஞ்ச உபாதாநஞ்ச நிமித்தோபாதாநே; அபிந்நே நிமித்தோபாதாநே யஸ்ய ப்ரஹ்மண:— தத் அபிந்நநிமித்தோபாதாநம்—என்று விக்ரஹிக்கவேணும். இப்படி சொல்லுமளவில், பரப்ரஹ்மத்தைக் குறித்து ஒரு நிமித்தகாரணமும் உபாதாநகாரணமுமிருப்பதாகச் சொல்லப்பட்டதாய் அவை அபிந்நம் — என்றதாகுமேயல்லது பரப்ரஹ்மமே உலகுக்கு நிமித்த காரணமும் உபாதாநகாரணமும் என்றதாக ஒருகாலுமாகாது. ஆகவே இது அர்த்தமற்றதும் விபரீதார்த்தகமுமான வ்யவஹாரம். மதக் கோட்பாட்டை அடியோடு தெரிந்துகொள்ளாமலெழுதுபவர் என்பதை இது கொண்டு அறிந்திடலாம். விவக்ஷிதார்த்தத்தை அந்யூநாநதிரிக்தமாக விளக்கித் தரவல்ல வசநஸந்நிவேசம் சதபூஷணியில் வெகு ப்ரயத்நம்செய்து தேடிப்பார்த்தாலும் ஒன்றுகூட காணக்கிடைக்காதென்பது கல்வெட்டு.

77. இந்தப்ரகரணத்தில்—

"ஸ்ரீபாஷ்யமதத்தில் விசேஷ்யாம்சம் ஸாக்ஷாதுபாதானமன்று; பரம்பரயா உபாதானத்வமோ வென்னில், உபாதானத்வமாத்ரமேயொழிய உபாதானத்வமன்று; அதிப்ரஸங்கம் வருமாகையாலே. அந்த ஸ்ரீபாஷ்யமதத்தில் அசித்ரூபமான ப்ரக்ருதியேயன்றோ ஸாக்ஷாதுபாதானமாகிறது. ......ப்ரக்ருதியைக்கொண்டே ஸர்வநிர்வாஹம் வருமாயிருக்க ப்ரஹ்மத்தினாலென்னதும்!"

என்று தலைகால் தெரியாத கோலாஹலங்கொண்ட வாக்யப்ரபஞ்சங்கள் காணப்படுகின்றன. காரணத்வ விஷயத்தில் விசிஷ்டாத்வைதிகளின் நிரூபணப்ரகாரம் இன்னதென்றே இவர்க்குத் தெரியாததனால் அதை விசதமாக விளக்குகிறோமிங்கு. ப்ரபஞ்சத்தைக்குறித்துப் பரமபுருஷனுக்குண்டான காரணத்வமானது கடபடாதிகளைக்குறித்து குலாலகுவிந்தாதிகளுக்குப்போலே நிமித்தத்வம்மட்டுமன்று; உபாதானத்வமுமிவனுக்கேயாகும். உலகில் ஒருகார்யமுண்டாகவேணுமானால் நிமித்தம் உபாதானம் ஸஹகாரியென்கிற மூவகைக்காரணம் அமையவேண்டும். கார்யரூபேண விகாரப்படுவதற்கு யோக்யமான வஸ்து உபாதானமெனப்படும். உபாதானமான வஸ்துவை கார்யரூபேண விகாரப்படுத்துகிற கர்த்தா நிமித்தகாரணமெனப்படுவன். கார்யோத்பத்திக்கு உபகரணமான வஸ்து ஸஹகாரிகாரணமெனப்படும். கடபடாதிகளுக்கு குலாலகுவிந்தாதிகள் நிமித்தகாரணமாய், மண் நூல் முதலானவை உபாதானகாரணமாய், தண்ட சக்ரவேமாதிகள் ஸஹகாரிகாரணமாயிருக்கும். ப்ரபஞ்சரூபகார்யோத்பத்தியிலோ வென்னில், ஈச்வரனே மூவகைக்காரணமுமாயிருப்பன். எங்ஙனேயென்னில், * பஹு ஸ்யாம் * என்கிற ஸங்கல்பவிசிஷ்டனைக்கொண்டு நிமித்தகாரணனும், நாமரூப விபாக அநர்ஹமாம்படி தன்னுடனே கூடிக்கிடக்கிற ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்டனைக்கொண்டு உபாதானகாரணனும், ஜ்ஞானசக்த்யாதிவிசிஷ்டனைக்கொண்டு ஸஹகாரிகாரணனும். நனு, ஈச்வரன் தானே ஜடமாகப் பரிணமிக்கும் பக்ஷத்தில் * நிர்குணம் நிரஞ்ஜநம் நிஷ்கலம் நிஷ்க்ரியம் சாந்தம் * ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம * அவிகாராய சுத்தாய * என்கிற ப்ரமாணங்கள் ஈச்வரனை நிர்விகாரனைச் சொல்லும்படி எங்ஙனே? என்கிற சங்கை தோன்றும். அதற்குப் பரிஹாரம்; சிதசித் விசேஷணவிசிஷ்டனைதானே ஜடமாய் பரிணமிக்குமளவில் விசேஷ்யமான ஸ்வரூபத்துக்கு விகாரமில்லாமையாலே நிர்விகாரனென்னக் குறையில்லை. இதற்குமேல் ஒரு சங்கையுண்டாகிறது— ஸ்வரூபத்துக்கு விகாரமில்லையாகில் இவன்தானே ஜடமாய்ப் பரிணமிக்கிறானென்ற பரிணாமம் இவனுக்கு உண்டாம்படி எங்ஙனே? என்று. இதற்குப் பரிஹாரமா

வது; உண்டகுண்டலாதிகள் போலல்லாமல் சரீரபூதமாகையாலே தனிப்பட்டிருக்க மாட்டாமையாகிற விசேஷத்தையுடைத்தான அத ஏவ விசேஷணாம்சே பரிணாமமென்றன்றோ சொல்லியிருப்பது. பரப்ரஹ்மத்திற்கு ஸ்வரூபஸ்ய அத ஏவ விசேஷணாம்சே பரிணாமமென்று சொல்லிற்றாயிற்று. ஸ்வரூப விகாரமில்லாவிடில் ஸ்வசரீரபூதவிசேஷண அம்சே ஸமஸ்தகார்ய ஜாதங்களைக் குறித்தும் பரப்ரஹ்மத்திற்கு உபாதாநத்வம் கூடுமோவென்று சங்கிக்கவேண்டா; அல்பசக்திகமானவொரு சிலந்திப்பூச்சி ஸ்வரூபவிகாரமின்றியேயிருக்கச்செய்தே ஸ்வசரீரபூதவிசேஷணமுகத்தாலே தன்னுஜாதமான கார்யஜாதத்துக்குத் தான் உபாதாநமாயிருக்கக் காணுகின்றோம். * யதோர்ணநாபி: ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச * என்பது முதலிய ப்ரமாணங்களினாலும் இது ஸித்தம். இப்படி ஒரு சிலந்திக்குண்டான ஸ்வபாவம் ஸர்வசக்தியுக்தனான ஸர்வேச்வரனுக்கு அஸம்பாவிதமன்றே. இங்ஙனேயாயிற்று விசிஷ்டாத்வைதிகளின் ப்ரஹ்மோபாதாநத்வ நிர்வஹணப்ரணாளி. சாரீரகமீமாம்ஸையில் * ப்ரக்ருதிச்ச ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தாநுபரோதாத் * என்கிற ஸூத்ர ஸித்தமானதே இந்த உபாதாநத்வம். சங்கரபாஷ்யத்திலும் 'பரப்ரஹ்மம் நிமித்தகாரணமாத்ரமன்று, உபாதாநகாரணமுமாகிறது' என்றுதான் நிர்வஹிக்கப்பட்டிருக்கின்றது. இங்கு பூஷணீகாரருடைய ஆக்ஷேபம் இன்னதென்று விளங்கவேணும்.

78. உபதேசாநுபபத்திவாதபரீக்ஷையின் முடிவில் ஆச்சரியமாக ஒன்றெழுதுகிறார் * இயாந் விசேஷ: * என்று தொடங்கி. விஷயமென்னவென்றால்,

> ஸ்ரீபாஷ்யமதத்தில் மூன்று நான்கு பூமிகை வரைக்குமே உபதேசோபபத்தியுள்ளது; அத்வைதமதத்திலோவென்னில், ஏழு பூமிகைகளிலும் யதாஸம்பவம் வ்யாவஹாரிகபாரமார்த்திக ப்ராமாண்யம் ஸ்வீகரிப்பதனாலே உபதேசோபபத்தியானது அசைக்க முடியாதது.

என்பது இவருடைய வார்த்தைக்கு நேரான மொழிபெயர்ப்பு. இந்த வார்த்தைகளுக்கு ஏதாவது அர்த்தமுண்டாவென்று பார்க்கவேணும். மூன்று நான்கு பூமிகைகள் எவை? ஏழு பூமிகைகள் எவை? வ்யாவஹாரிக பாரமார்த்திக ப்ராமாண்ய ஸ்வீகாரமென்றால் என்ன? என்று கேட்டால் மீண்டும் அர்த்தமில்லாத வார்த்தைகளை நிரப்பியே பதிலளிப்பர். அதுகிடக்கட்டும். வ்யாவஹாரிகம், பாரமார்த்திகம் என்று இரண்டு சப்தங்களைச் சொல்லிக்கொண்டு உலகை ஏமாற்றி வருகின்ற இவர்களைக் கேட்கவேண்டிய கேள்விகள் பல இருக்கின்றன. ஆனாலும் ஒன்றிரண்டு கேள்விகளை கேட்கிறோமிங்கு.

79. பாரமார்த்திகமாக எல்லாம் புளுகு என்பதுதானே உங்களுடைய கொள்கை. ‘எல்லாம்’ என்பதில் வேதம் முதலான ஸகலப்ரமாணங்களும், அவற்றுக்கு ப்ரமேயங்களான ஸகலார்த்தங்களும், ஸகல ப்ரமாதாக்களும் அடங்கிவிட்டனவென்று சொல்லித்தீரவேண்டும். வேதங்களும் புளுகு; வேதார்த்தங்களும் புளுகு; அவற்றுக்கு ப்ரமாதாக்களான பெரியார்களும் மித்த்யா—என்று தேறிவிட்டால் உங்களுடைய வாதங்களை நீங்களே கண்டித்துக்கொண்டதாக ஆய்விடவில்லையா? **‘ஸர்வம் மித்த்யா’** என்கிற ப்ரதிஜ்ஞையும் வ்யவஹாரமும் மித்த்யா என்று ஸ்தாபிக்கவேண்டியது விசிஷ்டாத்வைதிகளான எங்களுடைய கடமை. இந்த ஸ்தாபனத்தில் எங்களுக்கு யாதொரு பரிச்ரமத்தையும் நீங்கள் வைக்கவில்லையே. பாரமார்த்திகமாக ஏதாவதொன்றை ஸத்யமென்று நீங்கள் ஒப்புக்கொண்டால் அப்போது **‘ஸர்வம் மித்த்யா’** என்ற ப்ரதிஜ்ஞை ஸ்வத ஏவ பழுதாயொழிந்ததாகும். இவ்வாபத்துக்குத் தப்பவேண்டி பாரமார்த்திகமாய் ஸத்யமானது எதுவுமே கிடையாதென்னில் ‘ஸர்வம் மித்த்யா’ என்கிற ப்ரதிஜ்ஞையும் பொய்யாய், இவ்வர்த்தத்திற்கு ப்ரமாணமாகக் காட்டப்படுகிற ஸகல சாஸ்த்ரங்களும் பொய்யாய்விடுகையாலே, தாமே பொய்யென்று திடமாக ஒப்புக்கொண்டதைக் கண்டிக்கவேண்டிய ஆவச்யகதையே எமக்கில்லை. “மலடிமகனானவன் மரீசிகாஜலத்திலே ஸ்நானம்பண்ணி ஆகாசத்தாமரையைச் சூடிக்கொண்டு முயற்கொம்பாலே செய்யப்பட்ட வில்லை ஏந்திக்கொண்டு நம்மைக் கொல்லவருகிறானந்தோ!” என்று ஒருவன் கத்தினால் இதற்கு அஞ்சுவாருண்டோ? நாம் அவனைக் கொன்றுவிடுவோமென்று இழுத்துக் கட்டிக்கொண்டு அவனையடிக்க எழுந்திருப்பவர்கள்தானுண்டோ?

80. நமது க்ருஹங்களிலே ஒரு பெண் ரஜஸ்வலையானால் தீட்டு ஏற்பட்டு ஸ்நானம் முதலியன செய்து சுத்தியை யடைகிறோம். சிலர் ‘பொய்ச்சோறு வைத்தல்’ என்கிற க்ரமத்திலே உண்மையில் ரஜஸ்வலையாகாத வொருபெண்ணை ரஜஸ்வலை யென்று வைத்து விசேஷமாகப் பணச்செலவும் செய்து கல்யாணம் கொண்டாடுவதுண்டு. இக்கல்யாணத்தைப் பதுமைகளுக்கு நடத்துவதுமுண்டு. இப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் ‘இது வெறும் வ்யாவஹாரிகமே யொழியப் பாரமார்த்திகமன்று’ என்று உண்மையை யுணர்ந்து கொண்டவர்கள் அதற்காக ஒரு ஸ்நாநாதிகளும் செய்வதில்லையென்பது யாவருமறிந்தது. வ்யாவஹாரிக பாரமார்த்திக வழக்குகளின் தத்துவத்தை இங்ஙனே பலவகைகளில் அறியலாம். பாரமார்த்திக தசை யென்பது என்றைக்கோ எங்கேயோ என்று யாரும் நினைக்கலாகாது. வ்யாவஹாரிகதசையும் பாரமார்த்திகதசையும் கலந்த கட்டியாகவே உலகில் அநுபவிக்கப்படுகிறது. தவறான நினைவு தோன்றினவுடனே அந்தத்தவறுக்கு நிவ்ருத்தியும் உண்டாகின்றது.

அதுதான் பாரமார்த்திக [illegible] யென்பது. அத்வைதத்தை வெகு நன்றாகவுணர்ந்தவர் (அதாவது) வாத ப்ரதிவாதங்கள் செய்து வெற்றிபெற வல்லமையும் பெற்றவர் ஒரு சிஷ்யனுக்கு க்ரந்த ப்ரவசநம் செய்யத் தொடங்கினால் அவனுக்கு அத்வைத ஜ்ஞானவுறைப்பு உண்டாகும்படி யன்றோ போதிக்கவேணும். பேதங்களையே விஸ்தாரமாக விளக்குகின்ற நூல்களை வைத்துக்கொண்டு ப்ரவசநம் செய்வதானது சிறிதும் தகுதியன்றே. தாம் தெரிந்து கொண்டது ஒன்றாயும் ப்ரவசநம் செய்வது வேறொன்றாயுமிருந்தால் இப்படிப்பட்ட ஆசார்யனால் சிஷ்யன் கடைத்தேறுவது எங்ஙனம்? ஏதாவது பேசுவதென்று வாயைத்திறக்கும் போதே ஸவ்யவஹாரங்களைப் பண்ணாமலிருக்க முடிகிறதில்லை. ஆகவே ஆசார்யன் சிஷ்யனை எதிரே உட்கார வைத்துக் கொண்டு வாயைக் கையைத் திறவாமல் * [illegible] * என்றதற்கு ஸ்மாரகமாக ஸ்தம்ப குட்யாதிகள் போலே யிருந்து காட்டினாலன்றோ உண்மையான அத்வைத ப்ரவசநமாகும். * [illegible] * என்கிற ந்யாயம் இவர்களறியாததன்றே. இவர்களுடைய மதத்திற்கு அவரவர்கள் ஜீவித்திருக்கிறவரையில் ஒரு பலனும் காண முடியாதல்லவா? உபநிஷத் ப்ரஹ்ம ஸூத்ர கீதாதிகளின் பாஷ்யங்களைக் கேட்பதற்கு முன்னே சிஷ்யன் இருந்த நிலை என்ன? அவற்றைக் கேட்டபிறகு சிஷ்யன் இருக்கும் நிலை என்ன? என்று இவர்களைக் கேட்டால் த்ருப்திகரமான விடை கிடைப்பதில்லை. எல்லாவற்றையும் மித்யை யென்று தெரிந்து கொண்டதன் பலனை ஒரு ஆசார்யராவது காட்ட முடிகிறதோ?

81. பல வருஷங்களுக்கு முன்பு நாம் சிதம்பரம் போயிருந்தோம். அங்கு ஒரு ஸம்ஸ்க்ருத பாடசாலையிற் புகுந்து அங்கே நடைபெறுகின்ற பாடங்களைக் கவனித்துவருகையில் ஒரு அத்வைத பண்டிதர் விச்வகுணாதர்ச பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். கீழே இரண்டாவது பரிச்சேதத்தில் (பாரா 56) விவரித்தபடி எந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தை பூஷணீகாரர் வேதாந்த தேசிகக்ருதியாக ப்ரமித்தெழுதினாரோ அந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்திற்குக் கர்த்தாவான அரசாணிபாலை வேங்கடாத்வரி இயற்றினது அந்த விச்வகுணாதர்சம். அதில் முடிவு பாகத்தில் வேதாந்திவர்ணநம் செய்யப்படுகிறது. * [illegible] * என்கிற ச்லோகம் தொடங்கி எழெட்டு ச்லோகங்கள் அன்று அங்கு சாஸ்திரிகளால் ப்ரவசனம் செய்யப்பட்டது. ஒருமணிகாலமிருந்து கேட்டுக் கொண்டிருந்தோம். அவர் சிறந்த அத்வைத வித்வான். சிரித்துக்கொண்டே வெகு அழகாகப் பாடம் சொல்லுகிறார். அன்று அவர் பாடம் சொல்லி நிறுத்தின ச்லோகம் யாதெனில்,

दृश्यं मिथ्या द्रष्टृकं चापि मिथ्या दोषो मिथ्येत्येव यो मीमांसकौ ।
साधयित्वा नामसेवी किं न्विति श्रीज्ञा साधयित्वा नाम वक्ता नास्तीति ॥ (514)

என்பது. 'பார்க்கப்படுகிற ப்ரபஞ்சமெல்லாம் புளுகு, பார்க்கிறவரும் புளுகு, அவித்யையும் புளுகு' என்கிற இந்த வேதாந்திகள் ப்ரஹ்மத்தையும் புளுகு என்று சொல்லிவிட்டால் நன்றாயிருக்குமே; ஏன் அது சொல்லவில்லை? என்று பண்டிதர்கள் விமர்சிப்பதாக இந்த ச்லோகத்தில் சொல்லப்பட்டுள்ளது. பாடம் சொன்ன சாஸ்திரிகள் இப்படி ச்லோகத்தின் அர்த்தத்தைச் சொல்லி நிறுத்திவிட்டார். அப்போது ஒருமணிகாலம் அங்கிருந்து கேட்டுக் கொண்டிருந்த நாம் "சாஸ்த்ரிகளே! தாங்கள் ப்ரஹ்மஸூத்ர பாஷ்யாதிகளிலும் அவகாஹித்தவர்களல்லவோ? இதுவரையில் ப்ரவசநம் செய்த ச்லோகங்களில் அத்வைதக் கொள்கைகளெல்லாம் மிகவும் அஸங்கதமென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறதே; இதற்கெல்லாம் தங்களால் சொல்லக் கூடிய ப்ரத்யாக்யாநம் ஏதாவது உண்டோ?" என்று கேட்டோம். அவர் ப்ராமாணிகராய்ச் சொன்ன பதிலை இங்குத் தெரிவிக்கிறோம். இவ்வளவே அவர் சொன்னது; "இந்த க்ரந்தத்திற்கு வியாக்கியானம் செய்தவர் மிகச்சிறந்த அத்வைத வித்வான்; யோகி — பாலக்ருஷ்ண சாஸ்த்ரிகளென்பவரே இதற்கு உத்தமமான டீகை செய்தவர். அவரே ப்ரத்யாக்யாநம் செய்யமாட்டாமல் வக்தாவின் அபிப்ராயத்தை மட்டும் விளக்கிக்காட்டிப் போய்விட்டார். நானென்ன பதில் சொல்லப் போகிறேன்? நானோ என்னைப் போன்றவர்களோ எவ்விதமான பதில் சொன்னாலும், அந்த பதில் மித்யாபூதமான ப்ரபஞ்சத்திலிருந்து கொண்டு சொல்லப்படுவதாலும் 'ஸர்வம் மித்த்யா' என்று சொல்லுகிற வாயினாலேயே சொல்லப்பட வேண்டியிருப்பதாலும் அது மித்யையாகத் தேறுமேயல்லது ஸத்யமாகத் தேறுவதற்கு வழியில்லையே. நியாயஸ்தானங்களில் அதிகாரிகளின் முன்னே "ஸர்வசக்திவுள்ள ஸ்வாமி முன்பாக நான் சொல்லுவதெல்லாம் ஸத்யம்; ஸத்யம் தவிர அஸத்யமே கிடையாது" என்று சொல்லுகிற வார்த்தையுங்கூட பரமார்த்த: மித்த்யையாகவே பர்யவஸித்து நிற்கும்போது தத்வார்த்தமென்று நாங்கள் எதைச் சொல்லமுடியும்? எது சொன்னாலும் அது ஸாபவாதமாகுமே யொழிய நிரபவாதமாகமாட்டாதே." என்று. அதுகேட்டு மிகவும் ப்ராமாணிகரென்று உகந்தோம்.

82. சதபூஷணியின் முடிவிலே சிறிது கண்ணைச் செலுத்துவோம். யதிலிங்க பேதபங்கவாதம் பரீக்ஷை முடிவானது. அதில்

"एकदण्डत्रिदण्डयोरिव शिखामुण्डनयोः; परिवृत्ते
एकदण्डयोः; यज्ञसूत्रतत्त्यागयोः"

என்கிற வார்த்தைகள் அடிக்கடி வருகின்றன. ஏகதண்டத்துக்கும் த்ரிதண்டத்துக்கும் ஸமாஸம் பண்ணியிருப்பது ஒக்கும். மற்ற மூன்று ஸமாஸங்கள் பொருந்துமா வென்று பண்டிதர்கள் பராமர்சிக்கவேணும். [சிகா முண்டநயோ:] இதில் சிகா என்பது தர்மி, முண்டநம் என்பது தர்மம். இவற்றைச் சேர்த்து த்வந்த்வம் பண்ணுவது அபூர்வபாண்டித்யம். 'சிகா முண்டநயோ:' என்பதற்கு - சிகையை இரண்டுதடவை முண்டனம் செய்வதென்கிற பொருள் கிடைக்குமேயல்லது சிகாதாரணமென்ன, முண்டனம் செய்வதென்ன ஆக இவையிரண்டுக்கு மென்று இவர் விவக்ஷிக்கிற பொருள் ஒருநாளும் கிடைக்காது. [சிகித்வ ஏகதண்டயோ:] இதுவும் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடி போடுவதாம். சிகித்வ மென்பது தர்மம்; ஏகதண்ட மென்பது தர்மி. இவற்றைச் சேர்த்து த்வந்த்வம் பண்ணுவது அபஹாஸ்யம். [யஜ்ஞஸூத்ர தத்யாகயோ:] இதுவும் சேராச் சேர்த்தியே. யஜ்ஞஸூத்ர மென்பது தர்மி; த்யாக மென்பது தர்மம். இவற்றைச் சேர்த்து த்வந்த்வ ஸமாஸம் பண்ணுவது நகைக்கத்தக்கதே. மேலே 'எடுத்துக் காட்டிய இடங்களில் முறையே, சிகாதாரண முண்டநயோ:, சிகித்வ ஏகதண்டித்வயோ:, யஜ்ஞஸூத்ர தாரண தத்யாகயோ:, என்றெழுதினாலல்லது உபபத்தியில்லை.

83. இந்த ரீதிகளிலே நாம் எடுத்துக்காட்டும் அனேக அவத்யங்களைப் பற்றி பூஷணீகாரரும் ததநுயாயிகளும் என்ன சொல்லக் கூடுமென்றால்;

> உண்மையில் இவை நம்மால் அடியோடு ஸமாதானம் சொல்ல முடியாத அவத்யங்களே; இவற்றால் நமக்கு வியாகரணம் தெரியாது, அலங்காரம் தெரியாது, ஸாஹித்யம் தெரியாது என்று தேறும். தேறட்டும்; அதனால் ப்ரக்ருதத்தில் நமக்கு ஹாநியொன்றுமில்லை. வேதாந்தத்தில் விஷய விசாரமேயொழிய வ்யாகரணாசிகளில் இல்லை. 'யூயம் வக்தவ்யம்' என்று அபஷ்டுவாகச் சொன்னாலும் ஸம்ப்ரதாய முண்டாகக் குறையில்லாதாப்போலே எம்முடைய அசடுபிசடான அஸம்பத்தோக்திகளாலும் ஒருவாறு அர்த்த ஜ்ஞாந முண்டாகக் குறையில்லாமையாலே பூர்வாபர வசநங்கள் எக்கேடு கெட்டாலென்ன? லக்ஷ்மீஸஹஸ்ர ப்ரணேத்ரு விஷயத்தில் நமக்கு ப்ரமமிருந்தாலென்ன? மற்றும் பல விஷயங்களிலும் நமக்கு ஐதிஹ்யாஜ்ஞாநங்களிருப்பதாக நிரூபித்ததையும் உண்மையே யென்று ஒப்புக்கொள்வோம்; மறுப்போமல்லோம். அவற்றால் என்ன முழுகிப்போய்விடும்

என்று சொல்லக் கூடும். இது அசட்டுத்தனத்திற்கு மெருகுபூசுகிற வார்த்தையேயாம். இவர்கள் க்ரந்த மெழுதுவதற்கே அநதிகாரிகள் என்று நிரூபிப்பது நமக்கு

ப்ரதாந லக்ஷ்யமாகையாலும், இத்தகைய அவத்யங்களில் லவலேசமும் எட்டிப்பார்க்க கில்லாத சததூஷணிக்கு நெடுந்தூரத்திலே நிற்கவேண்டியவர்களிவர்கள் என்கிற நமது ஸ்தாபனத்திற்கு இந்த நிரூபணங்கள் பர்யாப்தங்களாகையாலும், வேதாந்த விஷய விமர்சங்களிலும் இவர்கள் ப்ரமத்தர்களென்பதும் இடையிடையே நன்கு நிரூபிக்கப் பட்டு வருவதாலும் இவர்களின் தூஷணீக்ரந்தம் இரவியைக்கண்ட இருள் போலாயிற்றென்பது மறுக்கமுடியாத விஷயம். .... (*)

இனி பிரதாந விஷயங்களிலேயே இவர்களுடைய மருளை நன்கு நிரூபிப்போம்.

நான்காம் பரிச்சேதம் முற்றிற்று.

ஐந்தாவது பரிச்சேதம்.

---

84. நிர்விசேஷத்வாநுமாநஸம்ஹாரம் பரீக்ஷையின் ஆரம்பத்தில் * ஏகமேவாத்விதீயம் * என்னும் ச்ருதியை யெடுத்து இதனால் பரப்ரஹ்மம் நிர்விசேஷமாக ஓதப்பட்டதென்கிறார். இங்கு இவருடையவும் இவர்போல்வாருடையவும் மருளை ஸவாஸநமாகத் தீர்க்கிறோம். சாந்தோக்ய உபநிஷத்தில் (6—2—1) * ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம் * என்று ஓதப்பட்டுள்ளது. ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யமானதென்றும் மற்றெல்லாப்பொருளும் பொய்யென்றும் கூறுகின்ற மாயாவாதிகள் இந்த வேதவாக்யத்தைத் தலையாகக் காட்டுவர்கள். இதில் அத்விதீயம் என்ற வொருபதம் முக்கியமானதாகக் கொள்ளப்படும். 'ப்ரஹ்மம் ஒன்றேயுளது, மற்றொன்றும் இல்லை என்பதாக இப்பதத்தால் விளங்குகின்றதென்கிறார்கள். இங்ஙனம் விளங்கவேமாட்டாதென்பதையும் இதன் உண்மைப்பொருளையும் நன்கு நிரூபிக்கிறோம் கேண்மின். அத்விதீயம் என்னும் பதத்திற்கு வியாகரண சாஸ்த்ரத்தையொட்டி இரண்டு விதமாக வ்யுத்பத்தி கூறலாம்; ந த்விதீயம்—அத்விதீயம் என்று விக்ரஹம் செய்தால் தத்புருஷஸமாஸமாகும். ந வித்யதே த்விதீயம் யஸ்ய (அல்லது) யஸ்மிந் என்று விக்ரஹம் செய்தால் பஹுவ்ரீஹி ஸமாஸமாம். இவ்விரண்டு வழிகளில் நிஷ்பந்நமாகின்ற அத்விதீயபதத்தால் 'ப்ரஹ்மமொன்றேயுள்ளது, மற்றொன்றுமில்லை' என்பது கிடைக்கமாட்டாது. ஏனெனில், இங்கு அத்விதீயபதம் ப்ரஹ்மவிசேஷணமாயிருக்கின்றது; ஆகவே பொருள் பொருந்தச் சொல்லவேணும். அத்விதீயபதத்தின் முதலிலுள்ள நஞ்ஞுக்கு இங்கு மூவகையான பொருள் கூறலாம்; அவையாவன, வேறானது, ஒப்பானது, மாறானது என்பனவாம். * தத்ஸாத்ருச்யமபாவச்ச ததந்யத்வம் ததல்பதா, அப்ராசஸ்த்யம் விரோதச்ச நஞர்த்தா: ஷட் ப்ரகீர்த்திதா: ॥ * என்பர் சாஸ்த்ரஜ்ஞர்கள். அத்விதீயம்—இரண்டாவது பொருளில் வேறானது,

இரண்டாவது பொருளுக்கு ஒப்பானது, இரண்டாவது பொருளுக்கு மாறானது—என்று அர்த்தமாகும்பக்ஷத்தில், இம்மூன்றுவிதமான அர்த்தத்திலும் ப்ரஹ்மமந்தவிர வேறொன்றுமில்லையென்று ஏற்படுவதற்கு வழியேயில்லை. முதலர்த்தத்தில், ப்ரஹ்மம் இரண்டாவது பொருளைக் காட்டிலும் வேறானது என்றதாகும். அப்பொழுது இரண்டாவது பொருள் ஒன்று உண்டென்றும், ப்ரஹ்மம் அதனில் வேறுபட்டதென்றும் தோன்றுமேயொழிய ப்ரஹ்மம்தவிர வேறொன்றுமே கிடையாதென்று தோற்றவேமாட்டாது. இனி இரண்டாவது அர்த்தத்தில், ப்ரஹ்மம் இரண்டாவது பொருளோடொக்குமென்றால் அப்போதும் இரண்டாவது பொருளின் ஸத்பாவம் தேறுமேயல்லது அது இல்லையென்று ஏற்படாது. உபமான வஸ்துவும் உபமேய வஸ்துவும் தனித்தனியிருந்தாலொழிய உவமைகூற முடியாதன்றோ. முகம் சந்திரனைப் போன்றது என்றால் உபமானமான சந்திரனும் உபமேயமான முகமும் வெவ்வேறு வஸ்துவென்று ஏற்பட்டே தீருமல்லவா? இனி மூன்றாவது அர்த்தத்தில், ப்ரஹ்மம் இரண்டாவது பொருளுக்கு மாறானது [விருத்தமானது] என்று சொல்லப்படும்போதும் இரண்டாவது பொருள் ஒன்று இருந்தேயாக வேணும். ஆகவே இவ்வர்த்தத்திலும் இரண்டாவதுபொருள் இல்லையென்று ஏற்படாது. ஆக இம்மூன்றுவிதமான அர்த்தங்களிலும் இரண்டாவது பொருளின் ஸத்பாவமே ஏற்படுமல்லது அபாவம் ஏற்பட வழியேயில்லை.

85. இனி நஞ்ஞுக்கு அபாவம் அர்த்த மென்று கொள்ளப்பார்த்தால் அத்விதீய மென்பதற்கு . இரண்டாவது பொருளில்லாமை யென்று அர்த்தமாகும். அப்போது அத்விதீய மென்பது விசேஷண பதமாகமாட்டாது. விசேஷ்யபதம் வேறாகி இது விசேஷணமாத்ரமாயிருக்கையாலே இங்கு அபாவத்தை அர்த்தமாகக் கூறுவது பொருந்தாது. இனி தத்புருஷ ஸமாஸத்தை விட்டு பஹுவ்ரீஹி ஸமாஸத்தைப்பற்றினாலும் ப்ரஹ்மந்தவிர வேறொன்றுமில்லை யென்று ஏற்பட வழியில்லை. 'நாஸ்தி த்விதீயம் யஸ்ய தத்' என்று பஹுவ்ரீஹி செய்தால் ப்ரஹ்மத்தோடு ஸம்பந்தமுள்ள இரண்டாவது வஸ்து வில்லை யென்று ஏற்பட்டாலும் வேறு வஸ்துவே யில்லையென்று ஏற்படாது. 'அயம் குமார: அத்விதீய:' என்றால் இவனோடு கூடப் பிறந்தவன் இல்லையென்றேற்படுமே யல்லது உலகத்தில் யாருக்குமே இரண்டாம் மகனில்லை யென்று ஏற்படாதே. 'தேவதத்த: அதந:' என்றால் தேவதத்தனிடத்தில் தனமில்லை யென்றதாகுமேயொழிய உலகத்திலேயே தனமில்லை யென்றதாகாது.

86. * ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம * என்று உபநிஷத்து ப்ரஹ்மத்திற்கு லக்ஷணம் கூறுவதால் அந்த லக்ஷணம் ப்ரஹ்மத்தோடு ஸம்பந்தமுடையதாயிருக்க வேணும். அந்த லக்ஷணத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் ஸம்பந்தமே யில்லையானால் அது லக்ஷணமேயாகமாட்டாது. அந்த லக்ஷணத்திற்கு ப்ரஹ்மஸம்பந்த முடைய

இரண்டாவது பொருள் இல்லை யென்று காட்டக்கூடாது. 'ந த்விதீயம் யஸ்மிந் தத்' என்று பஹுவ்ரீஹி செய்தால் ப்ரஹ்மத்தில் இரண்டாவது பொருள் இல்லை யென்றதாகும். 'இங்குப்பானை யில்லை' என்றால் இங்கு என்று குறிப்பிடும் ஓரிடத்தில் பானை யில்லை யென்று ஏற்படுமே யன்றி எங்குமே பானை யில்லை யென்று ஏற்படாது. ஒரு வஸ்துவை இல்லை யென்று நிஷேதிக்கும் போது அந்த வஸ்து எங்கேயாவதோரிடத்தில் இருந்தாக வேண்டும். முயற் கொம்பு இல்லை, மலடிமகன் இல்லை, என்று நாம் சொல்லுவதிலும், முயல் இல்லை யென்றாவது கொம்பு இல்லை யென்றாவது, மலடி யில்லை யென்றாவது மகனில்லை யென்றாவது ஏற்படமாட்டாது. முயலுக்கும் கொம்புக்கும் ஸம்பந்த மில்லை; மலடிக்கும் மகனுக்கும் ஸம்பந்த மில்லை என்பதாகவே ஏற்படும். எதை இல்லை யென்கிறோமோ அது எங்காவதோரிடத்தில் ப்ரஸித்தமாயிருந்து தீரவேண்டும். ஆகவே ப்ரஹ்மத்தில் இரண்டாவது பொருளில்லை யென்று சொன்னால் அது எங்குமேயில்லை யென்று ஏற்படவழியில்லை. ப்ரஹ்மத்தில் இல்லை யென்னும்போது மற்றோரிடத்திலுள்ள தென்று இசைந்ததாகவேயாகும்.

87. 'ந வித்யதே த்விதீயம் யஸ்மாத்' என்றுகொண்டு ப்ரஹ்மத்திற்காட்டிலும் வேறொன்றில்லை என்று சொல்லுவதிலும் கீழே உபபாதித்த அநுபபத்திகள் துல்யம். 'ப்ரஹ்ம அத்விதீயம்' என்று சொல்லுகிற வ்யக்தி யொன்று இருக்கும் போது அத்விதீயத்வம் எங்ஙனே வரும்? நூறு பேர்கள் சேர்ந்து ஓர் ஊருக்குப் புறப்பட்டுப் போகா நிற்கையில் வழியில் ஓரிடத்தில் எண்ணிப்பார்க்க நேர்ந்தபோது ஒருவன் இல்லை யென்று வார்த்தை வந்ததாம். பிறகு ஒவ்வொருவனும் எண்ணிப் பார்க்கையில் அவனவன் தன்னைவிட்டே எண்ணிப்பார்த்து ஒருவனில்லவேயில்லை யென்று நிச்சயித்து எல்லாருங்கூடி அழுதார்களாம். அந்த கதையே நினைவுக்கு வருகிறது. அத்விதீயம் என்று சொல்லுகிற ப்ரமாணங்களும் ப்ரமாதாக்களும் மொக்கார மொக்களுக இருக்கும்போது இவை யில்லை யென்றால் என்ன அர்த்தம்? இவை பொய்யென்றால் சொல்லப்படுகிற விஷயமும் பொய்யாகத்தானே தேறும்? ஒரு ஸதஸ்ஸில் ஒருவர்க்கு ஒரு ரூபாய்தக்ஷிணையும் மற்றொருவர்க்கு ஒரு அணு தக்ஷிணையும் கொடுக்கப்பட்டதாம். ஒரு அணு தக்ஷிணை பெற்றவன் எழுந்து 'பரநிந்தையும் ஆத்மஸ்துதியும் பணத்திலாசையு மில்லாத வெனக்கு ஒரு அணு; இந்த வையவேயனுக்கு ஒரு ரூபாய்; இது வெகு நன்றாயிருக்கிறது' என்று கத்தினனும்—இந்த வார்த்தை எவ்வளவு ஸங்கதமோ அவ்வளவு ஸங்கதம் அத்விதீய ச்ருதிக்குப் பிறர் கூறுமர்த்தம் — என்று கௌஸ்துபகாரர் தெரிவிக்கிறார்.

88. ஆனால் 'அத்விதீயம் ப்ரஹ்ம' என்றதற்குப் பொருளென்? என்னில்; சொல்லுகிறோம் கேண்மின். 'சோளமஹாராஜன் உலகத்தில் அத்விதீயனாயிருக்

கிறுன்' என்றால் அவனுக்கு நிகரான வேறொரு ராஜா இல்லை யென்றதாகுமே யொழிய, சோளராஜனுக்கு மக்களில்லை, மனைவியில்லை, மனையில்லை, உடுக்கத்துணி யில்லை, உண்ணச் சோறில்லை என்றதாகுமோ? அதுவே அர்த்தமானல் அந்த வாக்கியம் சோளமஹாராஜனைப் பழிப்பதாகுமே யல்லது புகழ்வதாகாதல்லவா? அத்விதீய பதத்தை உலகத்தில் எத்தனை யிடங்களிலே பிரயோகிக்கக் காண்கிறேம்! ஓரிடத்திலாவது பிறர் கூறும் விபரீதார்த்தம் காண வழியுண்டோ? * அத்விதீயம் ப்ரஹ்ம * என்றவிடத்திலும் ப்ரஹ்மத்திற்கு ஸமானமான வேறொரு வஸ்துவில்லை யென்றதாகுமே யொழிய, ப்ரஹ்மத்துக்கு குணமில்லை, விக்ரஹமில்லை. விபூதியில்லை, நித்ய தாஸர்களான ஜீவர்களில்லை, உலகமில்லை என்றதாகுமோ? ஒருகாலுமாகாது. வேதம் முதலிய ப்ரமாணங்களினல் ஸித்தமான ஸகலஜகத்துக்களும் ஜீவாத்மாக்களும் அனந்த குணகணங்களும் இந்த அத்விதீயச்ருதியால் ஒருகாலும் இல்லை செய்யப்படமாட்டா. ப்ரஹ்மத்துக்கு அனந்தகுணங்களும் உபயவிபூதியும் அனந்த ஜீவராசிகளும் உண்டென்பது சாஸ்த்ரஸம்ப்ரதிபந்நம். * ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே * என்ற ச்ருதிக்குப் பொருந்தியதன்றே நாம் உபபாதிக்கும் பொருள். * [illegible] * என்கிற ச்ருதியானது ஸர்வபூதங்களையும் ஈச்வரனுடைய விபூதியின் ஏகதேசமாகச் சொல்லுகிறது. இப்படி பல ச்ருதிஸ்ம்ருதீதிஹாஸபுராணதிகளால் ஸித்தமாகும் [illegible] களை மறக்காமலும் லோக வ்யவஹாரத்தை யொட்டியும் அத்விதீய ச்ருதிக்கு அர்த்தம் செய்வதில் உள்ள ஔசித்யத்தைப் பிறர் அறியகில்லார். ப்ரஹ்மத்திற்கு ஒப்பான வேறொரு பொருள் இல்லை யென்பதே அதன் உண்மைப் பொருளாகும். இதை ஆளவந்தார் * [illegible] * இத்யாதிகாரிகைகளினல் வெகு அழகாக விளங்கவைத்தார். ஸ்ரீபாஷ்யாதிகளிலும் இவ்வர்த்தம் [illegible]. அவற்றை ப்ரத்யாக்யாநம் பண்ண இவர்களிடம் யாதொரு ஸாமக்ரியும் கிடையாது.

89. இவ்வண்ணமாகவே * தத்த்வமஸி வாக்யார்த்தத்திலும் தெளிவு பிறப்பிக்கிறேம். சாந்தோக்யோபநிஷத்திலேயே ஆறுவது அத்யாயத்திலேயே எட்டாவது கண்டம் முதல் பதினாறுவது கண்டம்வரை ஒவ்வொரு கண்டத்திலும் * தத்த்வமஸி யுள்ளது. பூர்வோத்தர வாக்யங்களோடு சேர்ந்து இந்த வாக்யம் * ஐததாத்ம்யமிதம் ஸர்வம் தத்ஸத்யம் ஸ ஆத்மா தத்த்வமஸி ஶ்வேதகேதோ * என்றேதப்பட்டுள்ளது. இவ்வத்யாயத்தில் மஹர்ஷி உத்தாலகர் தமது குமாரன் ச்வேதகேதுவுக்கு ப்ரஹ்ம ஸ்வரூபத்தை உபதேசிக்கிறர். எட்டாவது கண்டத்திற்கு முன் ப்ரஹ்மம் ஜகத்துக்கு உபாதாநகாரணமும் நிமித்தகாரணமுமாகுமென்று சொல்லி அதை மிகவிரிவாக த்ருஷ்டாந்தபூர்வகமா யுபதேசிக்கிறர். [தத் த்வமஸி ச்வேதகேதோ!] இந்த வாக்யத்தில் நான்கு பதங்களுள்ளன. உத்தாலகர் தமது புத்திரனை ச்வேதகேதுவை

விளித்து 'த்வம் தத் அஸி' என்கிறார். ச்வேதகேதுவே! நீ அதுவாயிருக்கிறாய் என்கை. இங்கு த்வம் என்பதனால் ச்வேதகேதுவையும், தத் என்பதனால் ப்ரஹ்மத்தையும் குறிக்கிறது. ஜீவாத்மாவான ச்வேதகேதுவைப் பார்த்து நீ பரமாத்மாவாயிருக்கிறாய் என்று சொல்லப்படுகிறது. ஜீவாத்மாவுக்கும் ப்ரஹ்மத்திற்கும் அபேதம் காட்டுவது இந்த வாக்யத்தின் முழுநோக்கு. இதனால் ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றே, இரண்டு பொருள்களல்ல என்றதாகிறது — என்பதாகப் பிறர் சொல்லுவது.

90. பெண்ணுக்கு வரன் தேடப்போனவொரு பிதா, குலீநனாய் ஸுந்தரனாய் யுவாவாய் பண்டிதனாய் தனிகனாயிருக்கிற ஒரு பிள்ளையைத் தாம் பார்த்து வந்ததாகச்சொல்லி 'அந்த வரனைப்பாருங்கள்' என்று சொன்னால் இங்கு அந்த என்கிற சொல்லானது பூர்வோக்த குலீநத்வாதி குணயுக்தனையே சொல்லுமென்பது எப்படி நிர்விவாதமோ, அப்படியே ப்ரக்ருதத்தில் தத் பதமும் அங்கு முன்னே ப்ரஸ்துதமான ஸர்வஜ்ஞத்வ ஸத்யஸங்கல்பத்வ ஸகலஜகத்காரணத்வாதிவிசிஷ்டமான ப்ரஹ்மத்தையே சொல்லுமென்பதும் நிர்விவாதம். இனி த்வம் பதத்திற்கு வெறும் ச்வேதகேது பொருளாகமாட்டான்; சோகமோஹ அஜ்ஞாநாதி யுக்தனாய் ஸம்ஸாரியாய் புபுக்ஷுவான ச்வேதகேதுவே பொருளாகக் கடவன். இனி 'தத் த்வமஸி' என்ற மூன்று சொற்களையும் சேர்த்துப் பொருள் கொண்டால், அஜ்ஞாந சோகமோஹாதியுக்தனாய் ஸம்ஸாரியாய் அமுக்தனாய் புபுக்ஷுவான நீ, நித்யாநந்த ஸ்வரூபியாய் ஸர்வஜ்ஞமாய் நித்யமுக்தமாய் ஸர்வசக்தியாய் ஸம்ஸாரஸம்பந்தரஹிதமாய் ஸர்வஜகத்காரணமான அந்த ப்ரஹ்மமாயிருக்கிறாய் என்று பொருள் பட்டதாக விளங்கும். இப்பொருள் யுக்தமாகுமோ? 'ஜலம் அக்நியே' என்றுவது, 'இருளே ஸூர்யன்' என்றுவது ஒருவன் சொன்னால் இதை யுக்தமென்று யாரேனும் அங்கீகரிக்கமுடியுமா? ஜலமே நெருப்பானால் குளிர்ச்சியும் வெப்பமுமாகிய பரஸ்பர விருத்தமான இரண்டு தர்மங்கள் ஓரிடத்தில் சேர்ந்திருக்க நேரிடும். அவை ஓரிடத்தில் சேர்ந்திருக்கக் கூடுமானால் அவை பரஸ்பர விருத்ததருமங்களாகமாட்டா. ஆகவே பரஸ்பரவிருத்தங்களான இரண்டு தன்மைகளை ஓரிடத்திலிருப்பனவாகக் காட்டவல்ல 'ஜலமே நெருப்பு' என்கிற அந்தவாக்யமானது யுக்திவிருத்தமும் ப்ரத்யக்ஷவிருத்தமுமான அர்த்தத்தைக் காட்டுவதால் அப்ரமாணமெனப்படுகிறது. அது போலவே 'தத் த்வமஸிவாக்யமும்—ஸர்வோத்துங்கமான பரப்ரஹ்மத்தையும் ஸர்வாதமனான ஸம்ஸாரிஜீவனையும் ஒன்றாகக் காட்டுவதாயிருந்தால் பரஸ்பரவிருத்த தர்ம ஸமாவேசம் கொள்ள நேரிடும். அதனால் இந்த வாக்யமும் அப்ரமாணமாகவேண்டி வரும். ஆகவே இந்த வாக்யத்திற்கு அங்ஙனே பொருள் கொள்ளலாகாது. இங்கு ஜஹதஜஹல்லக்ஷணை கல்பித்துப் பொருந்த விடலாமென்கிற பிறருடைய வாதம் எம்முடைய பலநூல்களில் தள்ளுண்டதாகையாலே தலைகாட்டாது.

91. ஸர்வஜ்ஞமாய் ஆனந்தமயமாய் ஜகத்காரணமாயிருப்பது சுத்த ப்ரஹ்மமென்றும், மாயையென்கிற உபாதியோடுகூடிய ப்ரஹ்மம் அஜ்ஞமாய் ஸம்ஸாரியாய் துக்கியாய் கார்யமாயிருக்கிறதென்றும் பிறர் கூறும் கூற்று சிறிதும் பொருந்தாது. ஸச்சிதாநந்த ஸ்வப்ரகாசமான ப்ரஹ்மஸ்வரூபத்தில் மாயையென்கிற உபாதியின் ஸம்பந்தமே உண்டாக முடியாது. ப்ரகாசமயனான ஸூர்யனிடத்தில் இருளின் ஸம்பந்தமுண்டாவது எப்படி கூடாதோ, அப்படியே ஸ்வப்ரகாசமான ப்ரஹ்மத்திலும் மாயாஸம்பந்தம் பொருந்தாது. பொருந்துமாகில் ப்ரஹ்மம் ஸ்வப்ரகாசமாகமாட்டாது. இருளை அகற்றமுடியாதவன் ஸூர்யனுவனோ? ப்ரஹ்மத்திற்கு மாயாஸம்பந்தம் உண்டாகக் கூடுமென்றே கொண்டாலும், இதனால் சுத்தப்ரஹ்மம் வேறாய், மாயாஸஹிதப்ரஹ்மம் வேறாய்விடுமோ? பரஹ்மஸ்வரூபம் ஒன்றேயொழிய இரண்டன்று. பிறருடைய கல்பனை நிராலம்பமானது. ப்ரஹ்மஸ்வரூபத்திற்கு மாயாஸம்பந்தம் ஒப்புக் கொள்வதனால் எவ்வித ஸமாதானமும் வந்திடாது. மாயாவாதிகளென்று பட்டம்பெறுவதே லாபம். மாயாஸஹிதப்ரஹ்மஸ்வரூபத்தில் ஒப்புக்கொள்ளும் அஜ்ஞானம் ஸம்ஸரணம் முதலிய தோஷங்களெல்லாம் சுத்த ப்ரஹ்மத்திலும் இருப்பதாகவேயாகும்.

92. ப்ரஹ்மஸ்வரூபம் அகண்டமானது. அதில் ஒருபாகம் மாயாஸம்பந்தமுடையதென்றும் மற்றொருபாகம் சுத்தமானதென்றும் சிலர் சொல்லுவதுமேலாது. ஏகதேசத்தில் மாயாஸம்பந்தத்தையொப்புக்கொண்டு அவ்விடத்தில் அஜ்ஞாநாதிகளைக் கல்பிப்பதும், மற்றொரு. தேசத்தை சுத்தமாகவைத்து அதில் ஜ்ஞாநாநந்தாதிகள் இருப்பதாகச் சொல்லுவதும் அடியோடு பொருந்தாது. ஒரு மனிதனுக்கு ஓர் அவயவத்தில் வ்ரணம் ஏற்பட்டு அதனாலாகிய துயரமும், மற்றோரவயவத்தில் சந்தனம்பூசி அதனாலாகிய ஸுகமும் இருப்பதாகச்சொல்வதொக்குமிது. அகண்டமான ப்ரஹ்மத்தை இருதுண்டாகச் செய்தாலொழிய ஸ்வச்சந்த கல்பனைகளால் யாதொரு ஸமாதனமும் செய்ததாகாது. ஆக, * தத்த்வமஸி வாக்யத்திற்குப் பிறர் கூறும் பொருள் ஒருபடியாலும் பொருந்தாதென்று முடிந்தது. பொருந்தும் பொருள்கேண்மின்; மநுஷ்யன் பசு ம்ருகம் முதலான சப்தங்கள் பாஞ்சபௌதிகமான சரீரத்தளவிலே நிற்பனவாயினும், 'மனிதன் ஆனந்திக்கிறான், மிருகம் துன்புருகின்றது' என்பனபோன்ற வ்யவஹாரங்களில் மநுஷ்யசரீரகனான ஆத்மாவும் ம்ருகசரீரகனான ஆத்மாவுமே அர்த்தமாகிறபடியை அனைவருமறிவர். அசேதநமான சரீரபிண்டத்திற்கு ஸுகதுக்கங்கள் கூடாவாகையால் சரீரவாசக சப்தங்கள் சரீரியளவிலே நின்றே தீரும். இனி ப்ரக்ருத விஷயத்திற்கு வருவோம். ஸர்வ வ்யாபகமான ப்ரஹ்மம் சேதநாசேதநரூப ஸகலபதார்த்தங்களிலும் வியாபித்து நிறைந்திருக்கின்றது. பாஞ்சபௌதிக சரீரத்தினுள்ளே ஜீவாத்மா வியாபித்து நின்று தரித்து

நடத்துவதுபோலவே பரப்ரஹ்மமும் ஸகல பதார்த்தங்களினுள்ளும் வியாபித்து யமித்து நின்று நியமித்து நடத்துகிறபடியாலே ஸகலத்திற்கும் தான் சரீரியாய் ஸகலமும் தனக்கு சரீரமாய் இருக்கும்படி. * யஸ்ய ப்ருதிவீ சரீரம்—யஸ்யாத்மா சரீரம் * இத்யாதிச்ருதிகளில் ஸகல சேதநாசேதநப் பொருள்களும் ப்ரஹ்மத்திற்கு சரீரமென்றும், அனைத்துக்கும் அது * உயிரென்றும் சொல்லப்பட்டிருக்கையாலே, சரீரவாசகமான சப்தம் சரீரியளவும் காட்டியே தீரும்படியை முன்னமே உபபாதித்திருக்கையாலே இப்போது * தத் த்வமஸிவாக்யத்தை நிர்வஹிப்பது மிக எளிதாய்விட்டது. ஜகத்காரணமாய் தத் என்னப்பட்ட ப்ரஹ்மமும், ச்வேதகேது சரீரகமாய் ஜீவவிசிஷ்டமான ப்ரஹ்மமும் ஒன்று என்றதாகத் தேறுகிறது. இப்போது எவ்விதமான விபத்துமில்லை. ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்று எனச் சொல்லுவதாய் இருந்தால்தான் கீழே நிரூபித்தபடி விருத்த தர்மங்கள் ஓரிடத்திற் சேர வேண்டிவரும் ஜகத்காரணமான ப்ரஹ்மமும் ச்வேதகேது சரீரகமான ப்ரஹ்மமும் ஒன்று என்னும்போது எவ்விதமான பாதகமுமில்லையன்றோ.

93. இவ்விதமான ஐக்யம் சொல்லவேண்டிய காரணமென்னவென்று கேட்கலாம். கேண்மின். இந்த * தத்த்வமஸிவாக்யம் ஸத்வித்யா ப்ரகரணத்திலிருக்கின்றது. அங்கு காரியமும் காரணமும் ஒன்றேயென விஸ்தரேண நிரூபிக்கப்பட்டுள்ளது. ‘ஜகத்துக்குக் காரணமும் ப்ரஹ்மமே, ஜகத்தும் ப்ரஹ்மமே’ என்று போதிப்பதே அந்தப்ரகரணத்தின் முக்கியமான ப்ரமேயம். ப்ரஹ்மம் ஸூக்ஷ்மரூபமாய் ஜகத்துக்குக் காரணமாகிறது; அதுவே ஸ்தூலரூபம்தரித்துக் கார்யமாய்க் கொண்டு ஜகத்தாக நிற்கிறது. சிறுவனே யுவாவாகவும் கிழவனாகவுமாகிறான். பாலசரீரகனான ஜீவன் யுவாவாகும் போது ஜீவனில் எவ்விதமான மாறுபாடும் உண்டாகாமற்போனாலும் அவனுடைய சரீரம் பருத்து யுவாவஸ்தையையடைய அந்த ஜீவன் யுவாவாகிறாப்போல், ஸூக்ஷ்மமான ஜடப்பொருளிலும் ஜீவனிலும் அந்தராத்மாவாய் நின்ற ப்ரஹ்மம் ஸ்தூலரூபத்தையடைந்த ஜடப்பொருள்களிலும் ஜீவனிலும் அந்தராத்மாவாயிருந்து ஜகத்தாகிறது. யுவாவஸ்தையையடைந்த ஜீவனுக்கு பாலனாயிருந்தவனே காரணம். அதுபோல் ஸ்தூல ஜகத்தாயிருக்கும் பரப்ரஹ்மத்துக்கு ஸூக்ஷ்மசரீரியாய் நின்ற அவனே காரணம். இப்படி கார்ய காரணங்களின் அபேதத்தைக் காட்டுகிறது அந்த ஸத்வித்யா ப்ரகரணம். ஆகையால் ஜகத்காரணமாய் தத் என்று சொல்லப்பட்டதான ப்ரஹ்மமும், ஸ்தூலஜகத்துளடங்கிய ச்வேதகேதுவை சரீரமாகவுடைய த்வம் என்று சொல்லப்பட்ட ப்ரஹ்மமும் ஒன்று எனக் காட்டப்படுகிறது. ஆக * தத்த்வமஸிவாக்யம் கார்ய காரணமான ப்ரஹ்மம் ஒன்றெனக்காட்டுவதில் தத்பரமென்று கொள்ளக் கடவது. உலகத்தில் சரீரவாசக சப்தங்கள் சரீரியான ஆத்மாவில் முக்யமாகவே ப்ரயோகிக்கப்படுவதால்

எல்லாப் பொருள்களையும் சரீரமாகவுடைய ப்ரஹ்மத்தை த்வம் என்ற ஜீவவாசக சப்தத்தால் குறிப்பிடுவதும் முக்கியமான ப்ரயோகமேயாகும். இவ்விதமாக நிர்வாஹம் செய்யுமிடத்து அர்த்த பாதமில்லாமலிருப்பதோடு சப்தத்தின் உபசாரத்வத்திற்கும் பாதமேற்படுவதில்லை. சப்தம் மௌனார்த்தத்தைக் காட்டுகிறதென்கிற பேச்சுக்கு இடமேயில்லை. இப்படி நிர்வஹிப்பதுதான் ஸகல ச்ருதிகளோடும் ஸமந்விதமாய் * அவஸ்திதேரிதி காசக்ருத்ஸ்ந: * என்கிற ஸூத்ரத்திற்குமிணங்கும்.

94. ஜீவேச்வரைக்ய ஸம்வாத பரீக்ஷையில் பக்கம் 67ல் எழுதுகிறார்—

> * ப்ராஹ்மேண ஜைமினிருபந்யாஸாதிப்ய: * அவஸ்திதேரிதி காசக்ருத்ஸ்ந: * இத்யாதி ஸூத்ரங்களானவை பரமஸாம்யாபத்திரூபமான மோக்ஷத்தை ப்ரஹ்மாத்மகத்வரூபமாகவே நிலைநாட்டுகின்றன—
>
> என்று.

இங்கே இவர்களுடைய மருள்தீரச் சொல்லுகிறோம். சாரீரகமீமாம்ஸையில் * ப்ராஹ்மேண ரூபேண * என்றொரு ஸூத்ரமே கிடையாதென்று கீழே (பாரா 19ல்) விளக்கியிருக்கிறோம். இவர்களுடைய இந்த விபர்யயம் ஆரம்பம் முதல் அவஸானம் வரையில் இடையறாமல் தொடர்ந்து செல்லுகிறது. இதுகிடக்க. * ப்ராஹ்மேண ஜைமினிரித்யாதி ஸூத்ரத்திற்கு இவர்கள் நினைக்கிறபடி பொருள்கிடையாது. ஸூத்ரசரீரம்போலவே ஸூத்ரார்த்தமும் தவறே. உண்மையான அர்த்தமாவது—* பரம் ஜ்யோதிருபஸம்பந்நனானவன் பரப்ரஹ்மத்தினுடையதான அபஹதபாப்மத்வாதிஸத்ய ஸங்கல்பத்வ பர்யந்தமான எட்டு குணங்களோடு கூடினவனாக ஆகிறானென்கிறது. (அதாவது) முக்தாத்மாவுக்கு குணாஷ்டகப்ராதுர்பாவம் சொன்னபடி. இதற்கு ப்ரமாணமென்னவென்னில், ப்ரஜாபதி வாக்யத்தில் * ய ஆத்மா அபஹதபாப்மா * ஸ தத்ர பர்யேதி ஜக்ஷத் க்ரீடந் ரமமாண: * இத்யாதிகளான உபந்யாஸங்கள் இதில் ப்ரமாணம். அபஹதபாப்மத்வாதிகுணாஷ்டகமே ஜீவாத்மாவுக்கு ஸ்வாபாவிகதர்மமென்றும் ஜ்ஞானஸ்வரூபத்வமன்றென்றும் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. தஹரவித்யாப்ரகரணத்தையும் ப்ரஜாபதி வாக்யத்தையும் சேர்த்துப் பார்ப்பவர்களுக்கு இது அறியவெளிது. மேலும் இந்த ப்ரகரணத்திலேயே * ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே * என்று சொல்லி உடனே * ஸ தத்ர பர்யேதி........* இத்யாதியாலே ஸத்யஸங்கல்பத்வ கார்யபூதமான ஜக்ஷணக்ரீடனாதிகள் சொல்லியிருப்பதாலும் ஸத்யஸங்கல்பத்வமே ஜீவாத்மாவுக்கு ஸ்வாபாவிகதர்மமென்று நன்கு விளங்காநின்றது. ஆக இந்த ஹேதுக்களாலே ஜீவாத்மாவுக்கு ஸம்ஸாரதசையில் மறைந்திருந்த அபஹதபாப்மத்வாதிகுணாஷ்டகம் முக்திதசையில் ஆவிர்ப்பவிக்கின்றதென்பதே ஜைமினியின்மதமாக * ப்ராஹ்மேணேத்யாதி ஸூத்ரத்தினால் சொல்லிற்று. ஸாங்கர பாஷ்

யத்திலும் இப்படித்தானுள்ளது. இதற்கடுத்த ஸூத்ரத்தில் ஔடுலோமியின் மத மொன்று சொல்லப்பட்டு அதற்கடுத்த ஸூத்ரத்தில் பாதராயணர் தம்முடைய ஸித்தாந்தத்தை வெளியிடுகிறார். அதிலும் ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவோடு ஐக்ய மென்கிற பேச்சே கிடையாது.

95. இனி * அவஸ்திதேரிதி காசக்ருத்ஸ்ந: * என்கிற ஸூத்ரத்தின் உண்மைப் பொருளை விமர்சிப்போம். இது வாக்யாந்வயாதிகரணத்தில் கடைசி ஸூத்ரம். உபநிஷத்துக்களில் சிலவிடங்களில் ஜீவாத்மவாசகமான ஆத்ம சப்தத்தாலே பரமாத் மாவைக் குறித்திருப்பது எதனாலே? என்று விசாரம் வந்தவளவில் ஆச்மரத்யர் ஒரு அபிப்ராயமும் ஔடுலோமி மற்றோரபிப்ராயமும் கொடுத்தார். அவையிரண்டினும் விலக்ஷணமாக காசக்ருத்ஸ்நர் கொடுத்த முடிவான அபிப்ராயம் 'அவஸ்திதேரிதி காஶக்ருத்ஸ்ந:' என்னும் ஸூத்ரத்தினால் வெளியிடப்பட்டது. அவஸ்திதே:— ஜீவாத்மாவினிடத்தில் பரமாத்மா அந்தராத்மாவாக இருப்பதனாலே என்று பொருள். * ய . ஞு. ௩ நி திஷ்ந........யஸ்யாத்மா ஶரீரம் * இத்யாதிச்ருதிகளாலே ஜீவாத்மா பரமாத்மாவுக்கு சரீரமென்னுமிடம் நிர்விவாதஸித்தம். சரீரவாசகங்களான சப்தங்கள் சரீரிபர்யந்தவாசகங்களென்னுமிடம் ஆக்ருத்யதிகரண ந்யாயஸித்தமாகையாலே ப்ரக்ருதே ஜீவாத்மவாசகமான* விஜ்ஞாநவத சப்தம் ஜீவாந்தர்யாமி பரமாத்மபர்யந்த வாசகமாக, அதற்கு * உஹஹூஓதஉநஙஉவாஶஂ * என்று பரமாத்மவாசக ஶப்தத் தோடு ஸாமாநாதிகரண்யம் உபபந்நமாகிறது. இதுதான் காசக்ருத்ஸ்நருடைய மதம். இதில் ஜீவாத்மபரமாத்ம ஸாம்ய வாதப்ரஸக்தியேயில்லை. இதன்மேல் பிறர் என்ன சொல்லக்கூடுமென்றால், அவஸ்திதே: என்றதற்கு 'ஜீவாத்மாவினிடத்தில் பரமாத்மா அந்தராத்மாவாக இருப்பதனாலே' என்று அர்த்தமல்ல; 'பரமாத்மாவே ஜீவாத்மா வாக இருப்பதனாலே' என்றுதான் அர்த்தம் என்று சொல்லி ஐக்யவாதத்தைச் சொல்லக் கூடும். இது பொருந்தாது. குஹாதிகரணத்தில் * ஶுஹாஂ ப்ரவிஷ்டாவாத்மா நௌ ஹி தத்தர்ஶநாத் * என்கிற ஸூத்ரத்தில் த்விவசநாந்தமாயும் அநுபஹித ஆத்மஸ்வரூபவாசகமாயுமிருக்கிற 'ஆத்மாநௌ' என்கிற ஶப்தத்தினால் பரஸ்பரபிந்ந ஸ்வரூபர்களான ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு ஹ்ருதய குஹா ப்ரவேஶமானது * ஊதம் விபந்தௌ........ * இத்யாதி ச்ருதியினால் ப்ரதிபாதிக்கப்படுகிறதென்று சொல்லியிருக்கையாலே ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு நிருபாதிக பேதந்தான் ச்ருதிக்கு அபிமதம் என்பதாக ஸூத்ரகாரருடைய ஆஶயம் ஸ்பஷ்டமாகத் தெரிவத னால் அதற்கு முரணான அர்த்தம் பொருந்தாது. ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ச்ருதி

களிசைந்த ஸ்வரூபபேதத்திற்குப் பொருத்தமாக தத்ஸாமாநாதிகரண்ய நிர்வாஹம் யுக்தமாகுமேயல்லது ச்ருதிகளிசையாத ஸ்வரூபைக்யத்தைக் கொண்டு ஸாமாநாதி கரண்ய நிர்வாஹம் பண்ணுவது ஸூத்ராபிமதமாக ஒருநாளுமாகாது.

96. 'ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு ஐக்யம்' என்று வாய்திறக்கவும் முடியாதபடியன்றோ சாரீரக மீமாம்ஸையின் ஜக3த்3வ்யாபாராதி4கரணம் [ஜகத்வ்யாபாரவர்ஜாதி கரணம்] அவதரித்திருக்கின்றது. சேதந பரமசேதநர்களுக்கு ஐக்யமேயாகிற பக்ஷத்தில் 'ஜகத்வ்யாபாரவர்ஜம்' என்று ஒன்றை வர்ஜிக்க வேண்டியதில்லை; முக்தனுக்குப் புநராவ்ருத்திஶங்கையைப்பண்ணி புநராவ்ருத்தி கிடையாதென்று சொல்லவும் வேண்டியதில்லை. இவற்றுக்கு ப்ரகாராந்தரத்தாலே நிர்வாஹம் சொல்லு கிறோமென்னில்; ஒரு ஶாஸ்த்ரத்திற்கு மிணங்காததும் ஸ்வகபோல கல்பிதமுமான அந்த நிர்வாஹம் மித்த்யா வாதங்களுக்குள்ளே தலையான மித்த்யா வாதமாய் நிற்கு மத்தனை. * ப்3ரஹ்மவிதா3ப்நோதி பரம் * என்றும் * ஸ யோ ஹ வை தத் பரமம் ப்3ரஹ்ம வேத3 ப்3ரஹ்மைவ ப4வதி * என்றும் * ஸ தத்ர பர்யேதி * என்றும் இங்ஙனே பல நூற்றுக் கணக்கான ப்ரமாணங்களுக்குச் சிறிதும் பொருந்தாத ஐக்யவாதம் அரண்ய ருதிதமத்தனை.

97. ஜீவேச்வரைக்ய ஸம்வாத பரீக்ஷையில் (பக்கம் 67ல்) * ப்3ரஹ்மவித்3 ப்3ரஹ்மைவ ப4வதி * என்றெடுத்துச் செய்திருக்கிற ப்ரஸங்கமெல்லாம் சததூஷணியி லேயே தொலைந்தொழிந்தவை. அதில் பூர்வபக்ஷமாக வெடுத்துக் காட்டப்பட்ட விஷயங்களையே பூஷணி ஸித்தாந்தமாகக் காட்டிவிடுவது பெரும்பாலுமுண்டு. இந்த விப்ரலம்பமே பூஷணியில் மிகவதிகம். ப்ராக்ருதே அதுதானுள்ளது. இங்கு சத தூஷணீ பங்க்திகளை உதாஹரித்து

"உத்தரம் ஶததூஷணீ வஜ்ரவஜ்ரதா, உத்தோத்தரத்வாத்."

என்றெழுதப்பட்டுள்ளது. இது அஸம்பத்தவாக்ய மென்று கீழே (பாரா 36ல்) சொல்லியிருக்கிறோம். அது நிற்க. 'உத்தோத்தரத்வாத்' என்றது இவர்களுடைய புளுகுகளில் பெரும்புளுகு. சததூஷணீ ஸூக்திகளுக்கு ஒரு உத்தரமும் சொல்ல வில்லை, சொல்லவும் முடியாது. இதை க்ரமேண விவரிக்கிறோம். ஆயிரக்கணக்கான ச்ருதிவாக்யங்கள் முக்தனுக்கு ப்ரஹ்மப்ராப்தியையும் ஸாயுஜ்யாதிகளையும் ஸ்பஷ்ட மாகச் சொல்லாநிற்க, * ப்ரஹ்மைவ பவதி * என்கிற ஒருவாக்யம் இவர்களுக்கு என்ன ஸாதித்துத் தரும். "அயம் மாணவக: ஸிம்ஹ ஏவ, அக்நிரேவ" என்று தாராளமாகச் சொல்லிவருகிறோம். இதனால் மாணவகன் மநுஷ்யத்வத்தில் நின்றும்

விலகி ஸிம்ஹத்வத்தை யடைந்து விடுவனே! அதையும் விட்டு அக்நித்வத்தையடைந்து விடுவனே? * ஸஹகார உபாய ஏக: * என்பது ஸர்வ மதஸம்ப்ரதிபந்நமான்றே.

98. தைத்திரீய யஜுஸ்ஸம்ஹிதையில் இரண்டாவது காண்டம் முதல் ப்ரச்நத்தில் * விஷ்ணுரேவ பூத்வேமாந் லோகாநபிஜயதி * என்றுள்ளது. இது பரலோகத்துச் செய்தியன்று. இஹலோகத்துப்பலனைச் சொல்லுகிறது. ஆனால் இதில் விவாதம்வேண்டா; எவ்விடத்துப் பலனாகவாவது இருக்கட்டும். இங்கு ஏவகாரத்திற்கு பாஷ்யகாரர்கள் என்ன அர்த்தம் செய்திருக்கிறார்களென்று பார்க்கலாமே. எந்த அபிப்ராயத்தாலே இங்கு * விஷ்ணுரேவ பூத்வா * என்று ஏவகாரம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறதென்று இதைக்கூட விமர்சிக்க அர்ஹதையில்லையோ இவர்களுக்கு? * வைகுண்டே து பரே லோகே ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:, ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ * என்றும் * யத்ர பூர்வே ஸாத்யா: ஸந்தி தேவா: * என்றும் இப்படி எத்தனைகோடி ப்ரமாணங்கள் விளங்குகின்றன! ஒரு ப்ரமாணத்திற்கும் சேராதபடியும், ஸகல ப்ரமாணங்களையும் கண்ணழித்துக்கொண்டும் வைதிகர்களென்று பேர் சுமப்பவர்கள் பேசுவதும் எழுதுவதும் என்னே!

99. சாஸ்த்ரங்கள் கரைகட்டாக்காவேரிபோலே பரந்திருந்தாலும் அவற்றில் தத்வஹித புருஷார்த்தங்களென்று மூன்றை முக்கியமாக உபஜீவிப்பர்கள் ஸாரஜ்ஞர்கள். மூன்றிலும் விபர்யயமேயாயிற்று இவர்களுக்குள்ளது. முடிவாகப் புருஷார்த்தநிர்ணயத்தில் பெருமோசமாயிருக்கிறது. முக்தாத்மா அங்குச்சென்று மஹாநந்தமநுபவிப்பதாக உபநிஷத்துக்கள் முக்தகண்டமாக ஓதுகின்றன. சேதநனுக்கு எதனால் மஹாநந்தமென்னில், ஸ்வரூபாநுரூபமான சேஷவ்ருத்தியினாலேயே மஹானந்தம். * வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா * என்று வேதமே ஸ்ரீராமாயணமாக வடிவெடுத்ததென்று த்ரிமதஸ்தர்களும் அநுஸந்தித்துவருகிறோம். அதில், கைங்கர்யமே பரமபுருஷார்த்தமென்று காட்டுவதற்காகவே லக்ஷ்மணனுடைய அவதாரம். வநவாஸத்தில் * ரமமாணா வநே த்ரய: * என்று ராமலக்ஷ்மணஸீதைகள் மூவரும் ஆனந்தித்ததாகச் சொல்லிற்று. ஸ்ரீராமஸீதைகளின் ஆனந்தத்தைப்பற்றி விசாரமில்லை. லக்ஷ்மணனுடைய ஆனந்தம் எதனாலென்றால் * அஹம் ஸர்வம் கரிஷ்யாமி * என்று அவன்தானே ருசியுடன் வெளியிட்டபடி இடைவிடாது செய்யும் கைங்கர்யத்தினாலேயே யென்பது வெளிப்படை. * இமௌ ஸ்ம முநிசார்தூல கிங்கரௌ ஸமுபஸ்திதௌ * என்று தாசரதிகளிருவரும் கைங்கர்யத்திற்காகவே வந்திருப்பதாக விச்வாமித்ரரிடம் சொல்லியிருப்பதையும் கவனிக்கவேணும். இதெல்லாம் வேதார்த்தமேயொழிய ஸாமாந்யமான

அர்த்தமன்று. முக்தியிலும் கைங்கர்யமே புருஷார்த்தமென்று உள்ளபடி வெளியிட்ட சததூஷணியை பூஷணிபரிஹஸித்திருப்பது ஆச்சரியமன்று.*ஸர்வம் பரவசம் துக்கம்* *ஸேவா ச்வவ்ருத்தி: * இத்யாதிகளைக்காட்டி, முக்தியிலும் இந்த ஶ்வவ்ருத்தி வேணுமாவென்று பலகூறி (பக்கம் 66ல்) நிந்தித்திருப்பது பாபபலம். ஸ்வரூபாநுரூபமல்லாத ஸேவாவ்ருத்தியை சாஸ்த்ரங்கள் தூஷித்திருப்பது வாஸ்தவம். இவர்கள் ஸ்வஸ்வ ஆசார்ய ஸகாசத்திலும் தேவதாஸந்நிதியிலும் செய்கிற ஸேவைகளை துக்கரூபமாகவே நினைத்திருக்கிறார்களென்பது இப்போது வெளியாயிற்று. இது உண்மையே. * [illegible] ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:, [illegible] லக்ஷணம் தேஷாம் [illegible] மோக்ஷ ததைவச * என்கிற ப்ரமாணவசனம் சததூஷணியில் எடுத்துக்காட்டப்பட்டிருப்பதை இவரும் உதாஹரித்து உத்தோத்தரமென்கிறார். இந்த வசனத்தில் '[illegible]' என்றிருப்பதற்கு இவர் என்ன உத்தரம் சொன்னாரென்று இவரையே கேளுங்கள்.

100. சாரீரகமீமாம்ஸையின் முடிவில் * அநாவ்ருத்தி ஸூத்ர – சங்கரபாஷ்யத்தில் ஸூத்ரார்த்தம் சொல்லிமுடித்தபின் "[illegible]" என்றொரு பங்க்தியுள்ளது. இதற்கு ரத்நப்ரபையில் வைத்திருக்கிற அவதாரிகையை நன்கு கவனிப்பது. இவற்றால் ஸகுணப்ரஹ்மோபாஸகர்களுக்கு மட்டுமே முக்தியென்றும், நிர்குணப்ரஹ்மவாதிகளுக்கு (அதாவது) '[illegible]' என்றிருப்பவர்களுக்கு, கீதை பதினாறுமத்யாயத்தில் *ஈச்வரோஹமஹம் போகீ * என்று (ச்லோ. 14ல்) தொடங்கி ச்லோ 16ல் என்ன பலன் சொல்லி முடிக்கப்பட்டதோ அந்த பலனே கைபுகுமென்றும் காட்டப்பட்டதாயிற்று. கிம் பஹுநா? ஸூத்ரகாரர் தங்களுக்கு ஒருவழியும் காட்டவில்லை யென்பதை இவர்களுடைய பாஷ்யகாரரே வெளியிட்டுவைத்திருப்பது அபலபிக்கப்போகாது. இங்கு முக்கியமாக ஒரேவிஷயம்; மேலே குறித்தவிடத்தில் சங்கரபாஷ்யபங்க்தி * ஸித்தைவ அநாவ்ருத்தி: * என்றுள்ளது; இது இவர்களின் கொள்கைக்கு அத்யந்த விப்ரதீபம். ஆவ்ருத்தியுண்டா இல்லையா என்கிற விசாரத்திற்கே அவகாசமில்லாதபடியன்றோ இவர்களுடைய முக்திதத்வமிருப்பது. இப்படியிருக்க 'அநாவ்ருத்திஸ்ஸித்தைவ' என்றெழுதுவது எப்படி பொருந்தும்? '[illegible]' என்றன்றோ எழுதியிருக்கவேண்டும். இதெல்லாம் வஜ்ரகுடாரத்தில் மிகமிக விஶதமாகும்.

101. சாரீரகமீமாம்ஸையில் முதலத்யாயத்தின் மூன்றும்பாதத்தில் முதலதிகரணமான [illegible]கரணத்தில் * [illegible] * [illegible]

[illegible] * [illegible] * என்கிற மூன்று ஸூத்ரங்கள் பரமதத்திற்கு விசேஷத: வஜ்ரகுடாரங்கள். இவற்றுள் முந்தின ஸூத்ரத்தினால் முக்திதசையில் ஜீவாத்மா பரமாத்மாவை ப்ராபிப்பதாக ச்ருதியில் சொல்லியிருப்பது எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. ஒருவனை ப்ராப்தாவாகவும் ஒருவனை ப்ராப்யனாகவும் சொன்னபோதே பேதம் ஸ்பஷ்டஸித்தம். இது [illegible]முமாயிற்று. * [illegible] * என்கிற இரண்டாவது ஸூத்ரத்தினால்—ச்ருதியில் ஸாக்ஷாத்தாகவே ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு ஸ்வரூப பேதவ்யபதேசமுள்ளதாக வெளியிடப்பட்டது. * [illegible] * என்கிற மூன்றாவது ஸூத்ரத்தினால் — ஜீவாத்மபரமாத்மாக்களுக்கு ஸ்வரூபைக்யம் சொல்லவொண்ணாமைக்குறுப்பான [illegible] வைலக்ஷண்யம் எடுத்துக் காட்டப்பட்டது. ஆக இவ்வளவால் * ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி என்கிற முண்டகோபநிஷதுபஸம்ஹார வாக்யமானது ஜீவனுக்கு ப்ரஹ்மபாவாபத்தியையே முக்தியாகச் சொல்லுகிறது— என்கிற பிறருடைய ப்ரமம் ஸமூலநிரஸ்தமாயிற்று. இனி ஸர்வவ்யாப்தமான ப்ரஹ்மத்திற்கு ப்ராப்யத்வம் ஸம்பவிக்கமாட்டாதாகையாலே முக்திதசையில் ப்ரஹ்மத்திற்கு ப்ராப்யத்வம் சொல்லுகிற ச்ருதியை அந்யபரமாக்க வேணுமென்று பிறர் பேசக்கூடும். இது அஸம்பத்தம். * பராத்பரம் புருஷமுபைதி திவ்யம் * என்கிற முண்டகச்ருதியில் திவ்யம் என்கிற விசேஷணம் ப்ராப்யபுருஷனுக்கு இட்டிருப்பது நன்கு நோக்கத்தக்கது. [illegible]மன்றோ அதனால் ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏவஞ்ச, லோகவிசேஷத்தில் விக்ரஹ விசேஷத்தோடுகூடி யெழுந்தருளியிருக்கின்ற ப்ரஹ்மத்தின் ப்ராப்தியே முக்ய ப்ராப்தியாக * [illegible] என்கிற ஸூத்ரத்தின் பரமதாத்பர்யமாக அறுதியிடப்படாநிற்க, ஸூத்ரஸித்தமான ச்ருதிதாத்பர்ய நிர்ணயத்திற்கு மிகவும் விருத்தமாக அர்த்தங்களைச்சொல்லுகிறவர்களுக்கு சதபூஷணிபோன்ற எத்தனை பெரிய பெரிய புத்தகங்கள் எழுதினாலும் வீணான ஆடம்பரமாத்ரமேயென்று திண்ணமாகவெண்ணுக. .... (*)

ஸாந்த்ரவிஶதஸம்வித்ஸாரா ஸஹ்ருதயா [illegible]
விவிதவிபக்ஷமதாந்தா ஸம்க்ஷுண்ணா [illegible] ।
ப்ரதயிதுமவகாஶம் ப்ரேக்ஷாவதாமஸி, கிம் து
ப்ரபவதி [illegible] ஶ்ருதஶீர்ஷேஷு [illegible] ॥

நாஹம் யாசே தைவதஸாம்ராஜ்யம் ந ச கிஞ்சித்
காமம் யாசே நாபி ச யாசே [illegible] ।
யாசே கேவலம் [illegible]
[illegible] ॥

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

சதபூஷணீ வஜ்ரகுடாரஸாரம்

முற்றிற்று.

ஸ்ரீவேங்கடேச்வர பிரஸ், சின்ன காஞ்சீபுரம்.